Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.
34°c 28°c

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 159 | வள்ளுவர் ஆண்டு: 2044 | சித்திரை 21, சனி 04.05.2013

# சர்வதேச கண்காணிப்பில் வடக்கு மாகாண தேர்தல்

## தேர்தல் ஆணையாளரிடம் கூட்டமைப்பு வலியுறுத்தல்

கொழும்பு, மே 4

சர்வதேச கண்காணிப்புக்கு மத்தியிலேயே வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையாளரிடம் நேற்று நேரில் கோரிக்கை விடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதிலிருந்து அது நடைமுறைக்கு வரவேண்டும்.என்றும் வலியுறுத்தியது.


வடக்குத் தேர்தலை முன்னிட்டு இவ்வாறானதொரு ஏற்பாடு செய்து கொடுக்கப்படாவிட்டால் அங்கு நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை எதிர்பார்க்கமுடியாது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர் தல் ஆணையாளரிடம் சுட்டிக்காட்டியது.

அதேவேளை, இந்தியா, மத்திய கிழக்கு நாடுகள் உட்பட வெளிநாடுகளில் வாழும் இலங்கைப் பிரஜைகளுக்குத் தேர்தலில் வாக்களிப்பதற்கு விசேட திட்டமொன்று வகுக்கப்படவேண்டும் எனவும் அரசியல் கட்சிகள் நேற்று தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

தேர்தல் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய அரசியல் கட்சிகளின் செயலாளர்களை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார். தேர்தல் செயலகத்தில் நேற்று பிற்பகல் 3 மணியிலிருந்து 5 மணிவரை இந்தச் சந்திப்பு நடந்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராசா சுகவீனமுற்றிருப்பதால், அவர் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், ஈ.பி. ஆர். எல்.எவ்வின் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், புளொட் தலைவர் சித்தார்த்தன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி ஆகியோர் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப் படுத்திக் கலந்து கொண்டனர்.

மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் அ.லோறன்ஸ் உட்பட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் பலர் நேற்றையக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (த-சி)



## உலகம்



பக். 06

பசியால் 2,58,000 பேர் சாவு: சோமாலியாவில் தொடரும் அவலம்

## இந்தியா



பக். 07

இந்தியா வந்தது சப்ரஜித் சிங் உடல்

## விளையாட்டு



பக். 23

ரெய்னாவின் சதம் விசித்திரமான ஒற்றுமை

## வடக்கில் பொலிஸ் நிலையங்கள் அனைத்துக்கும் காணி சுவீகரிப்பு

### சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திட்டவட்டம்

யாழ்ப்பாணம்,மே 4

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் தனியார் காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளன.

அவ்வாறு சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு உரித்துடையவர்கள் அது தொடர்பில் தத்தமது பிரதேச செயலகத்திலோ அல்லது யாழ். மாவட்ட செயலகத்திலோ முறைப்பாடு செய்யலாம் என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார்.

யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் 8 பொலிஸ் நிலையங்களும், காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் 9 பொலிஸ் நிலையங்களும் உள்ளன.

யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு மாத்திரமே தற்போது காணி ஒன்று சொந்தமாகவுள்ளது.

ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கு காணிகள் இல்லை. எனவே இங்குள்ள காணிகளைச் சுவீகரிக்க வேண்டியுள்ளது. -என்றார் ஜெப்றி. (த-4)

## மக்களின் காணிகளை சுவீகரிக்க அனுமதியோம்

### பிரதேச சபைத் தீர்மானத்துக்கு அரச தரப்பும் முழு ஆதரவு

யாழ்ப்பாணம்,மே 4

வலி.வடக்கில் மக்களின் காணிகளையும், பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்கள் என்பவற்றையும் சுவீகரிப்பதற்கு அனுமதிக்கக் கூடாது எனப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் எதிர்க்கட்சியின் ஒத்துழைப்புடன் ஏகமனதாக நிறைவேறியது.

சுவீகரிக்கப்படும் நிலப்பரப்பினுள் வலி.வடக்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்கள், பூங்கா, விளையாட்டு மைதானம், பிரதேச சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட காணிகள் என்பனவும் உள்ளடங்குகின்றன.

இந்த விடயங்கள் தொடர்பில், வலி.வடக்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நடைபெற்றபோது ஆராயப்பட்டது. மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவதற்கு எதிராக தனி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் பிரதேச சபைக்குச் சொந்தமான எந்தவொரு காணிகளையோ, கட்டடங்களையோ வழங்குவதில்லை எனவும் முடிவெடுக்கப்பட்டதுடன், இந்த விடயம் தொடர்பாக உரிய தரப்புக்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி இரண்டு தீர்மானங்களும் சபையின் ஆளும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் எதிர்க்கட்சியான ஈ.பி.டி.பி. ஆகியவற்றின் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. (த-5)

## மீனவக் குடும்பங்களின் நிலம் வலைஞர் மடத்தில் அபகரிப்பு

முல்லைத்தீவு,மே 4

வலைஞர்மடம், புதையப்பிட்டியில் 1973ஆம் ஆண்டு முதல் கரைவலைப்பாடு தொழில் மேற்கொண்டிருந்த மீனவக் குடும்பங்களின் நிலத்தைத் தற்போது படையினர் நிரந்தர முகாம்

தொடர்ச்சி: பக்கம் 24



## உணவு தவிர்ப்பில் அஸாத் சாலி

கொழும்பு,மே 4

4ஆம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கொழும்பு மாநகர முன்னாள் பிரதி மேயர், அஸாத் சாலி வீட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மதிய உணவை சாப்பிடாமலும், தண்ணீர் அருந்தாமலும் மறுத்துள்ளதாக அவரது மனைவி தெரிவித்துள்ளார். (த-ரி)

## 101 கிலோ கஞ்சாவுடன் 6 பேர் நெடுந்தீவில் கைது

### 4 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்

யாழ்ப்பாணம்,மே 4

சுமார் 101 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் தமிழகத்தைச் சேர்ந்த நான்கு பேரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு பேருமாக ஆறு பேர் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்

தொடர்ச்சி: பக்கம் 24

## கச்சதீவை மீட்பதற்கு தமிழக அரசு தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 4

தமிழக மீனவர்களின் பிரச்சினைகளுக்குத்தீர்வு காணும் நோக்குடன் கச்சதீவை இந்திய ஆளுமைக்குள் கொண்டு வரவேண்டும் என்று தமிழக சட்டசபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முதல்வர் ஜெயலலிதா முன்மொழிந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

இந்தியா- இலங்கைக்கு இடையே 1974ஆம் ஆண்டு கைசாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில்

தொடர்ச்சி: பக்கம் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி உதிர வேங்கை ஆலயம் உடைக்கப்பட்டு விக்கிரகங்கள் சூறை

கிளிநொச்சி, மே 4

கிளிநொச்சி தொண்டமான் நகர் உதிரவேங்கை வைரவர் ஆலயம் உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த விக்கிரகங்கள் மற்றும் ஆலயப் பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தில் இருந்த விக்கிரகங்களுடன் ஐம்பொன் தகடுகள், பெறுமதியான பொருள்கள் என்பனவும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

குறித்த சூறையாடல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆலயத்தின் கதவுகள் உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த விக்கிரகங்கள், பொருள்கள் சூறையாடப்பட்ட இந்தச் சம்பவம் பல்வேறு சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆலயத்துக்குச் சொந்தமான காணி அதிகாரிகளின் அனுமதியுடன் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்பட்டு அங்கு கட்டடப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனை எதிர்த்து அந்தப் பகுதி மக்கள் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் திட்டமிட்டு இந்த ஆலயம் சூறையாடப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (த-6-426)



## உதிரவேங்கை ஆலயக் காணி அபகரிப்புக்கு எதிராக வழக்கு

கிளிநொச்சி,மே 4

கிளிநொச்சி உதிரவேங்கை வைரவர் ஆலயக் காணி அபகரிக்கப்பட்டமை தொடர்பாக பல்வேறு தரப்பினரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இதற்கு எதிராக வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உதிரவேங்கை வைரவர் ஆலயத்தின் காணி கடந்த மாதம் திடீரென பெரும்பான்மை இனத்தவர் ஒருவரால் அபகரிக்கப்பட்டு இரவு பகலாகக் கட்டடம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் பிரதேச மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தியதுடன், உரிய அதிகாரிகளிடமும் முறைப்பாடு செய்தனர்.

எனினும் தடுப்பதற்கு எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பாகக் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் அதனைப் பொலிஸார் உரிய முறையில் விசாரணை செய்யவில்லையென்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஆலய நிர்வாகத்தினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்தக் காணி விவகாரம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் நேற்று ஆரம்பித்துள்ளனர்.

இந்தக் காணி அபகரிப்புக் குறித்து எதிர்வரும் திங்கட்கிழமை வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்கும் ஆலய நிர்வாகம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-6-426)

## முரண்பாடுகள் இருந்தாலும் இலங்கையுடன் நல்லுறவு

### விடைபெறும் இந்தியத் தூதுவர் கருத்து

கொழும்பு,மே 04

அவ்வப்போது கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டாலும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒட்டுமொத்த உறவுகள் இன்னமும் உறுதியாகவே உள்ளன என்று இலங்கையில் இருந்து விடைபெறும் இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

சாத்தியமானவரை அர்த்தமுள்ள ரீதியாக இந்த வேறுபாடுகளைத் தீர்க்க நாம் முயற்சித்தால் தான், எல்லா வழிகளிலும் நாம் முன்நோக்கிச் செல்ல முடியும்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தின் பின்னால் இந்தியா இருந்ததும், இரு நாடுகளுக்கும் இடையில் ஒரு கருத்து வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய முரண்பாடுகள் இருந்தாலும், இலங்கை மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்துவதில் இந்தியா அக்கறை கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

> “முரண்பாடுகள் இருந்தாலும், இலங்கை மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்துவதில் இந்தியா அக்கறை கொண்டுள்ளது.

# எந்த விசாரணைக்கும் அஞ்சோம்

## மாவை சேனாதிராசா கூறுகிறார்



யாழ்ப்பாணம்,மே4

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மீண்டும் விசாரணை என்ற பெயரில் அரசின் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் அழைக்கப்பட்டுள்ளார். எந்த விசாரணைக்கும் அவரோ, நாமோ அஞ்சி ஒளிந்து கொள்ளத் தேவையில்லை.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நான்காவது தடவையாக நான்காம் மாடிக்கு, விசாரணைக்கு அழைக்கப்பட்டிருப்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரான மாவை. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை நாளும் பொழுதும் விசாரணை என்ற பெயரில் அழைப்பதானது ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் கடமையைச் செய்வதைத் தடுப்பதற்கு ஒப்பானதாகும். நாடாளுமன்ற உறுப்பினரும் ஒரு மனிதர் என்ற முறையில் தொடர்ச்சியான மன உளைச்சலை ஏற்படுத்துவது மட்டுமல்ல அவரையும் ஜனநாயக ரீதியில் அவரைத் தெரிவு செய்த மக்களின் ஜனநாயக உரிமைகளையும், ஜனநாயக அடிப்படை உரிமைகளையும் மீறும் செயலாகும். அரசின் உளவுத்துறை மக்களை மட்டுமல்ல ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அவர்களது கடமையைச் செய்வதைத் தடுப்பதற்கு பயன்படுகிறதா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

கிளிநொச்சியில் மட்டுமல்ல வடக்கு, கிழக்கு முழுவதும் காணிச்சட்ட திட்டங்களுக்கு விரோதமாகவும் ஜனநாயக அடிப்படை உரிமைச் சட்ட திட்டங்களுக்கு மாறாகவும் மக்களின் காணிகளை பட்டவர்த்தனமாக பகற்கொள்ளை போல் அபகரித்து வருவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டியது அந்தக் காணி உரித்துள்ளவர்களுக்கும், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உரித்தான பொறுப்பும், கடப்பாடுமாகும்.

அந்த உரிமையில் உளவுத்துறையினர் தலையிடுவது என்ன நியாயம்? இதற்குக் கட்டளையிட்டது யார்? இச்செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இத்தகைய செயலைக் கண்டித்து நாம் நாடாளுமன்றத்தில் குரலெழுப்புவோம். சர்வதேச நாடாளுமன்றத் தலைமைக் கூட்டமைப்பிடமும் முறையிடவுள்ளோம். சர்வதேச மனித உரிமைப் பேரவைக்கும் அறிவிக்கவுள்ளோம்-என்றுள்ளது. (ஓ)

# பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்க சர்வதேச ஊடகங்கள் கடும் பிரசாரம்

லண்டன்,மே 4

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிக்குமாறு, பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற நாடுகளின் முக்கிய ஊடகங்கள் வலியுறுத்தத் தொடங்கியுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டியும், அங்கு தொடர்ந்து இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்களைக் குறிப்பிட்டும், இந்த ஊடகங்கள் செய்திகள், கட்டுரைகள் மற்றும் ஆசிரியர் கருத்துகளை வெளியிட்டு வருகின்றன.

கனேடியப் பிரதமர் மட்டும் இதுவரை இலங்கையில் நடக்கவுள்ள பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாக கூறியுள்ளார். ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் தமது நாடு, மாநாட்டில் பங்கேற்கும் என்று கூறியுள்ளார். நியூஸிலாந்தும் பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதில்லை என்று கூறியுள்ளது.

அதேவேளை பிரிட்டன் இன்னமும் தாம் எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இலங்கையின் மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டி பொது நலவாய மாநாட்டைப் புறக்கணிக்கும் பரப்புரைகளை இந்த நான்கு நாடுகளினதும் முக்கிய ஊடகங்கள் முன்னெடுத்து வருகின்றன.

பிரிட்டனின் ரெலிகிராப், இன்டிபென்டென்ட், கார்டியன் போன்ற நாளேடுகள் புறக்கணிப்புக்கு ஆதரவாக ஆசிரியர் தலையங்கங்களை வெளியிட்டுள்ளதுடன், அதுசார்ந்த கட்டுரைகளை வெளியிடுவதிலும் ஆர்வம் காட்டி வருகின்றன.

ஆஸ்திரேலியாவின் முன்னணி ஊடகங்களும் புறக்கணிப்பை வலியுறுத்தி வருகின்றன. கனடாவின் குளோபல் போஸ்ட் உள்ளிட்ட முக்கிய ஊடகங்களும் கனேடிய அரசின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக செய்திகள், கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றன.

இந்தநிலையில் நியூஸிலாந்து ஊடகங்களும் இலங்கை மாநாட்டைப் புறக்கணிக்க வலியுறுத்த ஆரம்பித்துள்ளன. அந்த நாட்டில் இருந்து வெளியாகும் டொமினியன் போஸ்ட் நாளிதழில் கிறீன் கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கீத் லொக்கீ எழுதியுள்ள கட்டுரை ஒன்றிலும் புறக்கணிப்பை வலியுறுத்தியுள்ளார். பிஜியை பொதுநலவாய அமைப்பில் இருந்து இடைநிறுத்த நடவடிக்கை எடுப்பதற்குக் காரணமாக இருந்த நியூஸிலாந்து போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூற மறுக்கும் ஒரு நாட்டின் தலைவர், பொதுநலவாய அமைப்புக்குத் தலைவராவதற்கு துணைபோவது மோசமானது என்றும் கீத் லொக்கீ குறிப்பிட்டுள்ளார். (த)

> “இலங்கையின் மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டி பொது நலவாய மாநாட்டைப் புறக்கணிக்கும் பரப்புரைகளை இந்த நான்கு நாடுகளினதும் முக்கிய ஊடகங்கள் முன்னெடுத்து வருகின்றன.



இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் இணைப்பு அலுவலகம் யாழ். ரயில் நிலைய வீதியில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் ஆணைக் குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுகுமார் ரொக்வூட் மங்கல விளக்கேற்றுவதைக் காணலாம். (ஓ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சீன–இந்திய நல்லுறவு எப்போது...?

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான எல்லைப் பிரச்சினை, ஐம்பது ஆண்டுகள் நகர்ந்தும், கழிந்தும் தீர்வதாக இல்லை. அடங்கி அமுங்கிப் போய் இருந்த எல்லைப் பிரச்சினையை வேறு வடிவத்தில் புதுப்பிக்கும் செயற்பாடுகளில் சீனா இறங்கி உள்ளதாக, ஈடுபட்டுள்ள தாக நோக்கர்கள் சந்தேகம் கொள்கிறார்கள்; மிகப் பலர் அவ்வாறே கருதுகிறார்கள்.

இந்தியாவின் வடகிழக்கு மாகாணமான அருணாச்சலப் பிரதேசத்தில் ஏற்பட்ட நெருக்கடிக்குப் பின்னர், சர்ச்சைக்கு உரிய இமாலய எல்லையில் தோன்றி உள்ள ஒவ்வாத அறிகுறிகள்–இடம்பெற்ற ஒவ்வாத சம்பவங்கள்–சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்னர்–1987 ஆம் ஆண்டில்–நடைபெற்ற இந்திய–சீனப் போரின் ஆரம்பத்தை நினைவுக்குக் கொண்டு வருகின்றது.

லடாக் பகுதியில் நடைமுறையில் உள்ள, கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டைத் தாண்டி இந்தியாவுக்குள் சுமார் பத்துக் கிலோ மீற்றர் தூரம் சீன இராணுவம் புகுந்துள்ளது. ஆனால் அதனை முந்திய இடத்துக்குத் திருப்பிஅனுப்ப இந்தியத் தரப்பு–அந்நாட்டு அரசு மேற்கொண்ட முயற்சிகள் பலன் அளிக்கவில்லை.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில், இந்திய இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்த முறுகல் நிலை தணிந்துவிட்டதாகக் கருதப்பட்ட வேளையில்- சீனா எல்லை கடந்து சென்று முகாம்களை அமைத்திருப்பது இந்தியாவுக்குப் பெரும் சவாலாகும்.

கண்காணிப்பு நாய்களுடன் ஊடுருவிய சீன இராணுவம், "நீங்கள் இருப்பது சீனப்பகுதி" என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அறிவித்தல் பலகையை அங்கு காட்சிப்படுத்தியிருப்பதும், சீன இராணுவ ஹெலிகள் அப்பகுதியில் பறப்பதும், சீனா வலிந்து இந்தியாவுடன் முரண்படுகிறதா என்ற சந்தேகத்தை உண்டாக்குகிறது.

எனினும், கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டைத் தாண்டி, இந்திய எல்லைக்குள் சுமார் பத்துக் கிலோ மீற்றர் தூரம் ஊடுருவியுள்ள சீன இராணுவத்தின் ஒரு பிரிவை பழைய இடத்துக்கு திருப்பி அனுப்பி வைக்கும் இந்தியாவின் முயற்சிகள் இதுவரை கைகூடவில்லை.

இத்தகைய விவகாரங்களில் இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவஹர்லால் நேரு எவ்வாறு செயற்பட்டாரோ அதேபோன்றே மன்மோகன் சிங்கும் நடந்துகொள்கிறார் என்று கருதலாம்.

தொடக்கத்தில்,1962 இல் சீனப் படைகள் சர்ச்சைக்குரிய எல்லை யில் தாக் குதலை ஆரம்பிக்கும்வரை, சீனாவுடனான பிரச்சினை இவ்வளவு மோசமானது என்பதை இந்திய மக்கள் தெரிந்துகொண்டிருக்கவில்லை. அந்தப் போர், சரியாக ஒரு மாதம் நீடித்தது. அதில் இந்தியா தோல்வியடைந்தது.

அந்த வெற்றி மூலம் தன்னைப் பிராந்திய வல்லரசாக முன்னிலைப் படுத்திக்கொண்ட சீனா, இந்தியாவுடன் தற்பொழுது பெரிய அளவில் வர்த்தக உறவுகளை வைத்துக்கொண்டுள்ளது. எனினும், எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமை பிராந்தியத்தில் பதற்றத்தை உருவாக்குகிறது; அண்டை நாடுகளிலும் தாக்கத்தை உண்டாக்கும்; ஏற்படுத்துகிறது.

சீன இராணுவத்தின் ஊடுருவலுக்கு பேச்சு மூலம் தீர்வு காணவே இந்தியா விரும்புகிறது. நாட்டின் நலன் காக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி கூறுகிறார்.

ஆனால் தனது கடற்படையையும் நீர்மூழ்கிப் பலத்தையும் பல மடங்கு அதிகரித்து, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் முத்துச்சர வியூகம் மூலம் ஆதிக்கப் போட்டியில் இறங்கியுள்ளது சீனா. அதனுடன் மோத இது சரியான நேரம் அல்ல என்று இந்தியா கருதுவது தெரிகிறது.

லடாக் பகுதியில் கடல் மட்டத்திலிருந்து 17,000 அடி உயரத்தில் தௌலத்பெக் பகுதியில் ஊடுருவி முகாமிட்டுள்ள சீன இராணுவப் பிரிவை திருப்பி அனுப்பிவைக்கும் இரு தரப்பு இராணுவப் பேச்சுகள் வெற்றியளிக்கவில்லை. 1962 இந்திய – சீனப் போரின் போது, இந்தியாவால் இராணுவ விமான ஓடுதளமாகப் பயன்படுத்தப்பட்ட பகுதியில் துருப்புகளை அனுப்புவதற்கு வசதியாக, வீதிக் கட்டுமானப் பணிகளை அந்நாடு மேற்கொண்டு வருவதாகவும் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கான பேரம் பேசும் நோக்கத்துடனேயே இந்திய எல்லைக்குள் சீனா ஊடுருவி முகாம்களை அமைத்திருக்கலாம் என்றும் ஊகங்கள் தெரிவிக்கின்றன. எனினும் சீனாவின் நோக்கம் இன்னும் மர்மமாகவே இருக்கிறது.

சீன இராணுவம் எல்லை கடந்து செயற்படுவது இது முதல் தடவை அல்ல. அடிக்கடி இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதுண்டு. 2011 ஜனவரியிலும், சீன இராணுவம் நடைமுறையிலுள்ள கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டை கடந்துசென்றது. எல்லையில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்களை விரட்டியடித்தது. அது குறித்து அன்றைய இராணு வத் தளபதி வி.கே.சிங், "நடைமுறைக் கட்டுப்பாட்டு எல்லை குறித்து அனுமானிப் பதில் ஏற்படும் குறைபாடுகளால் இத்தகைய எல்லை கடந்து வருதல் நிகழ்கின்றன" என்றார். இதனைப் பெரிதுபடுத்தவேண்டியதில்லை" என்றும் தெரிவித்திருந்தார்.

இப்போதும் சீன இராணுவம் வெறுமையாக ரோந்துவந்து திரும்பியிருந்தால் இந்தியா அதனைப் பெரிதுபடுத்தத் தேவையில்லை. ஆனால், முகாம்களை அமைத்து நிலைகொண்டிருப்பதே சந்தேகங்களை உண்டாக்கி உள்ளது.

இவற்றுக்கு இடையில், சீனாவுடன் ராஜீவ் காந்தி தொடங்கி பிரதமர் நிலையிலான பேச்சுகளும் அதிகாரிகள் மட்டப் பேச்சுகளும் கடந்த கால் நூற்றாண்டு காலமாக இடம்பெற்று வருகின்றன.

'ப்ரிக்ஸ்' எனப்படும் கூட்டமைப்பில் இந்தியாவும், சீனாவும் அங்கம் வகித்து பல பொருளாதார உடன்பாடுகளில் ஒருமித்த கருத்துளைக் கொண்டிருந்த போதிலும் எல்லைப் பிரச்சினையில் அவை முன்னேற்றம் காணாமை இதுவரை முன்னேற்றம் காணாதது துரதிர்ஷ்டமானதே.

இந்த நிலை மாற வேண்டும். சீன – இந்திய நல்லுறவு அமைய அதன் பின்னரே தென்னாசியாவில் அமைதிச் சூழல் உருவாவதற் கான சமிக்ஞை தென்படும்.

# 8 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கடந்தவாரம் திருட்டு

## யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

யாழ்ப்பாணம், மே 4

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் எட்டு இடங்களில் இடம்பெற்ற திருட்டுக்களில் நகைகள், மோட்டார் சைக்கிள், விக்கிரகம் உட்பட 8 லட்சம் ரூபாய்க்கும் மேற்பட்ட பெறுமதியான பொருள்களும் 15 ஆயிரம் ரூபா பணமும் பறிபோயுள்ளன என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வாரம் புத்தூர் வடக்கில் வீடு உடைத்து 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக் கொடி திருடப்பட்டுள்ளது.

அச்சுவேலியில் 2 லட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

கொக்குவில் வீட்டின் முன்புறம் இருந்த 20 ஆயிரம் ரூபா பெறுமதியான இரும்புக் கதவு திருடப்பட்டுள்ளது. அத்துடன் 18 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகள் சேதப்படுத்தி நஷ்ட மேற்படுத்தப்பட்டுள்ளது. சந்தேகத்தில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். திருட்டுப் பொருள்களும் மீட்கப்பட்டன.

குருநகரில் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. யாழ். நகரில் தையல் கடை ஒன்றை உடைத்து 8 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாயில் பட்டப்பகலில் வீடு உடைத்து 48 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி மற்றும் பெறுமதி மிக்க கைத்தொலைபேசி என்பன திருடப்பட்டுள்ளன.

சுன்னாகம் சூராவத்தையில் 12 ஆயிரத்து 300 ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்டுள்ளது. சந்தேக நபர் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சைக்கிளும் மீட்கப்பட்டது.

கொடிகாமம் தோப்பை வேலி மேற்கிலுள்ள பிள்ளையார் கோயில் ஒன்றிலிருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பித்தளையிலான பிள்ளையார் விக்கிரகம் திருடப்பட்டுள்ளது.

கொடிகாமம் வடக்கில் கோயில் ஒன்றில் 6 ஆயிரத்து 500 ரூபா பணம் திருடப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை சுருவில் பகுதியில் கடை உடைத்து 24 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கைத்தொலைபேசி திருடப்பட்டுள்ளது. - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4-86)

# யாழில் 70 லட்சம் ரூபா காசோலைகள் மோசடி

யாழ்ப்பாணம்,மே 4

கடந்த வாரம் ஐந்து பேரிடம் 70 இலட்சத்து ஆயிரத்து 550 ரூபா பெறுமதியான காசோலைகள் மோசடி செய்யப்பட்டுள்ளன.

ஒருவரிடம் மாத்திரம் 49 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா காசோலை மோசடி செய்யப்பட்டுள்ளது என்று யாழ். பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார்.

நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மானிப்பாயைச் சேர்ந்த ஒருவரிடமிருந்தே 49 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா காசோலை மோசடி இடம்பெற்றுள்ளது. வாகனம் வாங்கித் தருவதாகக் கூறியே இவ்வாறு நடந்துள்ளது. இது தொடர்பில் கடந்த திங்கட்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சந்தேக நபர் பரமேஸ்வராச் சந்தியைச் சேர்ந்தவர் தற்போது தலை மறைவாகியுள்ளார்.

கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து 5 இலட்சம் ரூபா காசோலை மோசடி செய்யப்பட்டுள்ளது. கோயில் வீதி நல்லுரைச் சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். நகரில் ஒருவரிடமிருந்து 2 இலட்சம் ரூபா காசோலை மோசடி செய்யப்பட்டுள்ளது. கொக்குவிலைச் சேர்ந்த சந்தேகநபர் தலை மறைவாகியுள்ளார்.

வியாபார நோக்கத்துக்காக கரணவாய் கரவெட்டியைச் சேர்ந்தவரிடமிருந்து 3 இலட்சம் ரூபா காசோலை மோசடி செய்தமை தொடர்பில் அம்மன் வீதி நல்லூரைச் சேர்ந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து வியாபார நோக்கம் கருதி 5 இலட்சம் ரூபா காசோலை மோசடி செய்யப்பட்டுள்ளது.

புலோலியைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து சிமெந்து பெற்று 5 இலட்சத்து 51 ஆயிரத்து 550 ரூபா காசோலை மோசடி செய்தமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நெல்லியடி வடக்கைச் சேர்ந்த சந்தேகநபர் தலை மறைவாகியுள்ளார் என்று மேலும் தெரிவித்தார். (ம-4)

# யாழ்ப்பாணத்தின் கறுப்பு வெள்ளை தெருவெளி புகைப்படக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,மே 4

ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு 'யாழ்ப்பாணத்தின் கறுப்பு வெள்ளை புகைப்படங்கள்' எனும் கருப்பொருளில் தெருவெளி புகைப்படக் கண்காட்சி யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கைகள் அலகும் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையமும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த கண்காட்சியை யாழ்.பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தர் பேராசிரியர் ச.சத்தியசீலன் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இந்தக் கண்காட்சி குறித்து ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மைய இயக்குநர் தே.தேவானந் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களை ஆவணப்படுத்தல் என்பது இந்தக் கண்காட்சியின் ஒரு நோக்கமாகும். அத்துடன் ''ஸ்ரூடியோ'' பணிகளை ஆவணப்படுத்தலும் முக்கியமானதாகின்றது. ஊடக மாணவர்கள் [illegible] முக்கிய காரணம் யாழ்ப்பாணத்தின் ஒரு காலகட்டத்தை ஆவணப் படுத்த வேண்டும் என்பதே.



அதாவது யாழ்ப்பாணத்தின் கலை, கலாசாரம், பிரயாண வழிகள், உடைகள், மதச்சடங்குகள் போன்றவை ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

முன்னைய யாழ்ப்பாணத்தின் ஒரு பிரதிபலிப்பாக இந்தக் கண்காட்சி அமைந்துள்ளது.-என்றார்.

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கி.விசாகரூபன் கருத்துக் கூறுகையில்,

ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது காலத்துக்குத் தேவையான ஒரு விடயமாகவே நான் கருதுகின்றேன். ஆரம்ப கால யாழ்ப்பாணத்தை கண்முன்னே கொண்டு வந்துள்ளனர் ஊடக மாணவர்கள்.

இது துறைசார்ந்தோருக்கு மட்டுமன்றி அனைத்து தரப்பினருக்கும் பயனுள்ளதாக அமையும்.-என்றார். (ம-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

பூச்சி நீக்கிய 40 நாள்கள் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள், கம்பிக் கூடுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: T.நிவேஸ், 119, வோர்படி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.077 947 5996
(37037) (2-6)

## வாகனம் விற்பனைக்கு

TATA Single 207, இல.P.S-xxxx, 23000km வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 600 4454
(37034)(4-6)

## சானியா கேபல் கெயரின், கோடை கால ஸ்பெஷல்

கோடை காலத்திற்கான விசேட சரும பராமரிப்பு
*சருமவரட்சி, சிதமிஞ்சிய எண்ணைகசிவுகள், முகப்பரு, கரும்புள்ளிகள், கருவளையம், பாலுண்ணிகள், உதடுசார்ந்த பிரச்சனைகள் போன்றவற்றிற்கான தீர்வுகள்.
*எமது பிரசித்தி பெற்ற கருமைநிற நீக்கங்கள்
*முடி சார்ந்த அனைத்து சிகிச்சைகள் உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல் மற்றும் உடல்அழகுச்சிகிச்சைகள்
* கோடை கால சருமபராமரிப்பிற்கான மிகக்குறைந்த கட்டணத்துடனான பக்கேஜ்களும் உள்ளன
அனைத்தும் ஆயுர்வேத சிகிச்சைகளும் வைத்தியரது மேற்பார்வையில் நடைபெறுகின்றன முற்பதிவிற்கு மட்டும் **** அழையுங்கள் 0777351954 இலவச ஆலோசனைகளுக்கு நேரில் வரவும்.

இல.262, நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலை செம்மணி வீதி நல்லூர் யாழ்ப்பாணம்



## வீடு வாடகைக்கு உண்டு

முல்லைத்தீவு, தண்ணீரூற்றில் HNB வங்கிக்கு அருகில் நான்கு அறைகள் கொண்ட வீடு சகல வசதிகளுடன் வாடகைக்குண்டு.
077 051 9041/ 077 723 8378
(37031)(4-6)

## கார் விற்பனைக்கு

GB xxxx இலக்கமுடைய TOYOTA COROLLA 110 வெள்ளைநிற நல்ல நிலையில் உள்ள கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776158963


# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திதி: 04.05.2013

அமரர்

## செல்லையா சபாபதி

(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன பிரிவு உதவியாளர்)

வையத்தில் 02.07.1938
வானுலகில் 25.04.2003

ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
மலையான உம் நினைவு நிலையாக
எமை வழிகாட்டும்
ஆத்ம சாந்தி வேண்டி நிற்கும்....

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

பார்வதி பவனம்
கைதடி, நாவற்குழி.

# மரண அறிவித்தல்கள்

## இராசலிங்கம் நடராசா

(முன்னாள் புகையிரதத் திணைக்கள உத்தியோகத்தர்)



கொக்குவில் கிழக்கு, நந்தாவில் அம்மன் கோயிலடியைச் சேர்ந்த முன்னாள் புகையிரதத் திணைக்கள உத்தியோகத்தர் இராசலிங்கம் நடராசா 02.05.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இலட்சுமி (பரமேஸ்வரி) யின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் - சுபத்திரை தம்பதியரின் மூத்த புதல்வரும், கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அ.சி.செல்லையா - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சிவராஜா மற்றும் இரட்ணராஜா, ரோகினி, ஜெயராஜா, குகராஜா ஆகியோரின் தந்தையும் அம்பிகா, ராஜேந்திரா, ரஜனி ஆகியோரின் மாமனும், ரிஷ்ணா, அச்சுதன், தீபிகா, அபிரா, துவாரகன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற ரட்ணமலர் மற்றும் ராஜதுரை ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனத்துக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (2.6)(37043)

தகவல்:
பிள்ளைகள்.

## திருமதி இராசமலர் கிருஷ்ணபிள்ளை



கற்கோவளம் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், யாழ். கோவில் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசமலர் கிருஷ்ணபிள்ளை நேற்று முன்தினம் (02.05.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், காந்திமலர் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) அரியரத்தினம் (ஓய்வுபெற்ற கிராம சேவையாளர், இம்பருட்டி), காளிங்கராசா, காலஞ்சென்ற அரசரட்ணம் (ஓய்வு பெற்ற நிலஅளவை உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஸ்ரீகாந்தன் (நில அளவை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), ஸ்ரீமுரளிதரன் (ஜேர்மனி), ஸ்ரீதேவி (லண்டன்), ஸ்ரீபவானி (சுவிஸ்), ஸ்ரீவாசுகி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், சிவகுமாரி (சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை, யாழ்ப்பாணம்), தயானி (ஜேர்மனி), லூட்ஸ் ரவீந்திரன் (லண்டன்), கிருஷ்ணகுமார் (சுவிஸ்), ஐங்கரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும், டிலக்சனா, ஹனோஜா, கஜலக்ஷி, கருணி, துவாரகன், கரீஸ், றொமிக்சன், றொஷிர்தன், றொய்சன், சுஜீபன், அஜீபன், ஆருணியா, அபிநயன், சருண், கபின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கி.ஸ்ரீகாந்தன் [மகன்]
T.P- 0776623915

127/14, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 30.07.1930

ஆண்டவன் அடியில் 05.04.2013

## திருமதி மகேஸ்வரி பால்கிருஷ்ணர்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

ஊரார் போற்றி நிற்க
உத்தமியாய் வாழ்ந்திருந்து
பூவிதழின் மென்மையிலும் மென்மையான
புனிதமான அன்பு உள்ளத்தால் எங்களை
அரவணைத்து நன்மக்களாக்கிய
அன்புத் தெய்வமான எங்கள் அன்னையே!
உங்கள் புன்சிரிப்பு தவழும் முகத்தை
நாங்கள் இனி எப்போது காண்போம்?
நீங்காத உங்கள் நினைவுகளுடன்
உங்கள் உயர்ந்த இலட்சியங்களை நெஞ்சிலே சுமந்து
எங்கள் கால் தடங்களை பதித்து உறுதியுடன் செல்வோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(37036)(10.7)

பாலாவோடை, இணுவில்
மானிப்பாய் வீதி, மானிப்பாய்.
(மணியகாரன் வீதி,
தெல்லிப்பழை)

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்



## திருமதி நாகம்மா (மணி) தம்பையா

நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா (மணி) தம்பையா கடந்த 30.04.2013 செவ்வாய்க்கிழமை இறையடியெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், சின்னத்துரையின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான புங்குடுதீவைச்சேர்ந்த இளையதம்பி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பையாவின் நேசமிகு துணைவியும், நாச்சிமார்கோயிலடி இராஜன் (ஜேர்மனி), தவராசா (இலங்கை), கிருஸ்ணமூர்த்தி (இலங்கை), லீலாவதி (பிரான்ஸ்), நவீந்திரராசா (இலங்கை), கணேசமூர்த்தி (பிரான்ஸ்), கருணாவதி (ஜேர்மனி), கருணாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| இராஜன் | -(ஜேர்மனி-004942180944418) |
| கிருஸ்ணமூர்த்தி | -(இலங்கை-0094772767099) |
| நவீந்திரராஜா | -(நவம்,இலங்கை-0094772702630) |
| கருணாவதி | -(காந்தி,ஜேர்மனி 004968183005421) |
| கருணாகரன் | -(காந்தன், பிரான்ஸ்-0033651451323) |
| வதனன் | -(பிரான்ஸ்-0033661598652) |

567, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்: பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(37045)(10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறவுண் வீதி திருத்தப் பணி மும்முரம்



யாழ்ப்பாணம், மே 4
யாழ்ப்பாணம் பிறவுண் வீதி இன்னும் இருபது வேலை நாள்களில் புனரமைக்கப்பட்டுவிடும் என்று கூறப்பட்டது.
நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது போக்குவரத்துக்குப் பெரும் இடையூறு ஏற்படுத்தி வரும் இந்த வீதியின் திருத்த வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
'காப்பெற்' வீதிக்கு நிகராக இந்த வீதியைப் புனரமைக்க மாநகர சபை உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் வருத்தம் தெரிவித்திருந்தனர்.
மக்களின் இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும் என்ற கடப்பாட்டுடன் தற்போது குறிப்பிட்ட வீதியைத் திருத்த மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.
'காப்பெற்' வீதியின் தரத்துக்கு அதனைத் திருத்தியமைக்க உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.
இந்த நிலையில் 1.425 கிலோமீற்றர் நீளமுள்ள இந்த வீதியின் திருத்த வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நாளை கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது

யாழ்ப்பாணம், மே 4
யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் 70 வயதுக்கு மேற்பட்டோருக்கு வழங்கப்படும் ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கான மீளளிப்புத் தொகை இன்னமும் கிடைக்காததால் நாளை இந்தக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது என்று தெரிய வருகிறது.
கடந்த மாதம் தொடக்கம் ஆயிரம் ரூபா கொடுப்பனவு அந்தந்த மாதம் ஐந்தாம் திகதி வழங்கப்படுமென தேசிய முதியோர் செயலகத்தால் அறிவிக்கப்பட்ட போதிலும் மே மாதத்துக்குரிய மீளளிப்புத் தொகை நேற்று நண்பகல் 12 மணி வரை கிடைக்காததால் நாளை கொடுப்பனவை வழங்க முடியாத நிலை பிரதேச செயலகங்களுக்கு ஏற்பட்டுள்ளது.
இந்தக் கொடுப்பனவுக்குரிய மீளளிப்புத் தொகை கிடைக்கப்பெற்றதும் முதியோர்களுக்கு உடனடியாக வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது. (ம-9)

## நல்லூர் பிரதேச எல்லையில் கலாசார மண்டபத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், மே 4
நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் கலாசார மண்டபம் மற்றும் சிறுவர் விளையாட்டு அரங்கு என்பன அமைக்கப்படவுள்ளன.
இவற்றுக்கான அடிக்கல் அடுத்த வாரத்தில் நடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. 'புறநெகும' திட்டத்தின் கீழ் 54 மில்லியன் ரூபா நிதி இதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
நல்லூர் பிரதேச சபைக்கு அருகில் உள்ள சபைக்குச் சொந்தமான காணி ஒன்றில் கலாசார மண்டபம் அமையவுள்ளது.
பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெறும் என்று கூறப்பட்டது. (ம-17)

## 'பார்க் லைற்' இன்றி நின்ற லொறியுடன் மோதி விபத்து

தென்மராட்சி, மே 4
வேகமாக வந்த, 'படி' வாகனம் வீதியில் 'பார்க் லைற்' இன்றி நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் மோதியதில் 'படி'யின் சாரதி காயமடைந்தார்.



இந்தச் சம்பவம் புதன் கிழமை இரவு மீசாலை புத்தூர்ச் சந்தியில் இடம்பெற்றது.
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் விஷ்ணு காந்தன் (வயது-21) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
இதேவேளை, கடந்த புதன் கிழமை இரவு விபத்து மற்றும் தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த நாவற்குழி வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கங்காதரன் (வயது-51), மீசாலை மேற்கைச் சேர்ந்த செல்லையா ஜெயரூபன் (வயது-5), கைதடி தெற்கைச் சேர்ந்த பொன்னையா யோகேஸ்வரன் (வயது-25) ஆகியோரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-9)

# அங்கீகாரம் பெற்ற இடங்களிலேயே இனி ஓட்டோக்கள் தரிக்க முடியும்

### சாரதிகளுக்குச் சீருடை; மீற்றர் கட்டாயம் என யாழ்.மாநகர சபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 4
யாழ்.மாநகர சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஓட்டோ தரிப்பிடங்களில் மட்டுமே இனி ஓட்டோக்கள் தரித்து நின்று பயணிகள் சேவையில் ஈடுபட வேண்டும். இந்த நடைமுறை எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றது என யாழ்.மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.
இது தொடர்பாக யாழ்.மாநகர சபை முதல்வரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
★ சேவையில் ஈடுபடும் அனைத்து ஓட்டோக்களும் ஓட்டோ சங்கத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அதற்குரிய 'ஸ்ரிக்கர்' ஓட்டோவில் ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும்.
★ ஓட்டோக்களில் மீற்றர் பொருத்தி இருத்தல் வேண்டும்.
★ சீருடை (யூனிபோம்) இல்லாத சாரதிகளுக்கு ஓட்டோ செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.
★ ஓட்டோ சங்கத்தின் யாப்பு விதிகளுக்கும் அறிவுறுத்தலுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். இவற்றுக்குக் கட்டுப்பட்டு நடக்காத ஓட்டோச் சாரதிகள் மீது யாழ்.மாநகர சபை வீதி ஒழுங்குபடுத்தும் பணியாளர்களாலும் தேவைப்படும் பட்சத்தில் போக்குவரத்துப் பொலிஸாரின் உதவியுடனும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-400-7)



## இறுதிக் கட்டப் போரின்போது
## தவறவிடப்பட்ட தாயார் முதியோர் இல்லத்தில்

*யாழ்ப்பாணம், மே 4*
*இறுதிக் கட்டப் போரின் போது தனது தாயாரைத் தவறவிட்ட நிலையில் தேடி வந்த நபர் ஒருவர் கைதடி அரச முதியோர் இல்லத்தில் அவரைக் கண்டுபிடித்துள்ளார். கடந்த வாரம் இவ்வாறு தாயும் மகனும் ஒன்று சேர்ந்தனர்.*
*சந்தனம் சூரியபத்திரி என்ற வயோதிபப் பெண் கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடந்த மூன்று வருடங்களாக வசித்து வருகிறார்.*
*வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது தனது பிள்ளைகளைத் தவறவிட்டிருந்த இவர் எவரது பராமரிப்பும் இன்றி அநாதரவான நிலையில் முதியோர் இல்லத்தில் தஞ்சமடைந்திருந்தார்.*
*இந்த நிலையில் கடந்த வாரம் குடும்பத்தினருடன் முதியோர் இல்லத்துக்கு வந்திருந்த அவரது மகன் தனது தாயாரைத் தன்னுடன் அழைத்துச் செல்ல இல்ல அத்தியட்சகரிடம் அனுமதி கோரினார்.*
*இந்த நிலையில் குறித்த தாயார் மகனுடன் செல்வதற்கான அனுமதியை இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் வழங்கி அவர்களை ஒன்றுசேர்த்து வைத்தார். (ம-17)*

## மணியந்தோட்டம், உதயபுரம் பகுதிகளில் தண்ணீர் தாங்கிகள்

யாழ்ப்பாணம், மே 4
மணியந்தோட்டம், உதயபுரம் பகுதிகளில் இரண்டு குடிதண்ணீர் தாங்கிகள் அமைக்கப்படவுள்ளன.
இந்தப் பிரதேச மக்களின் குடிதண்ணீர்த் தேவையை நிறைவு செய்யும் நோக்குடன் இவை அமைக்கப்படவுள்ளன என்று கூறப்பட்டது.
தற்போது இந்தப் பிரதேச மக்களுக்கு பவுஸர்கள் மூலம் குடிதண்ணீர் கொண்டு செல்லப்பட்டு சிறிய தாங்கிகளில் நிரப்பி அவற்றின் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.
வறட்சி காலங்களில் இந்தப் பகுதிகளில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவது வழமை.
இதற்குத் தீர்வு காணும் பொருட்டு தண்ணீர் தாங்கிகள் அமைக்கப்படவுள்ளன.
மீள்குடியேற்ற அமைச்சு இதற்கான நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளது. விரைவில் திட்டம் நடைமுறைக்கு வரும் என்று கூறப்பட்டது. (ம-17)

### சட்டவிரோதமாக சாராயம் விற்றவருக்கு அபராதம்


யாழ்ப்பாணம், மே 4
சட்டவிரோதமாக சாராயம் விற்பனை செய்தவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது ஊர்காவற்றுறை நீதிமன்று.
காரைநகரைச் சேர்ந்த சின்னையா சூரியகுமார் என்பவரே இந்தக் குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-4)

## 13 சிறுவர்களே அகப்பட்டனர்

யாழ்ப்பாணம், மே 4
காரைநகரில் பாடசாலைக்குச் செல்லாதிருந்த சிறுவர்களில் பதின்மூன்று சிறுவர்கள் மட்டுமே கல்வி வலய அதிகாரிகளிடம் சிக்கிக் கொண்டனர்.
தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குயின்ரஸ் மற்றும் உத்தியோகத்தர்கள், சிறுவர் நல உத்தியோகத்தர்கள் கொண்ட குழுவினர் காரைநகரில் பாடசாலைக்குச் செல்லாதிருக்கும் சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்பி வைப்பது தொடர்பான நடவடிக்கைகளைக் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்டனர்.
காரைநகர் ஆயிலி, வீரப்பிட்டி, இலகடி பகுதிகளில் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களைத் தேடிக் கண்டுபிடித்து பாடசாலைக்குக் கூட்டிச் செல்லும் செயற்பாடுகள் இடம்பெற்றன.
இதன்போது பதின்மூன்று சிறுவர்கள் மட்டுமே அகப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாகப் பெற்றோருடனும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. (ம-7)

## அரியாலை கிழக்கில் குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மே 4
அரியாலை கிழக்குப் பிரதேசத்தில் உள்ள ஒன்பது குளங்கள் ஆழமாக்கிப் புனரமைக்கப்படவுள்ளன.
மீள்குடியேற்ற அமைச்சின் நிதி உதவியுடன் இந்தக் குளங்களைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அரியாலை கிழக்கு காரைமுனங்கு குளம், திருவடி பிள்ளையார் கோயில் குளம், நாச்சிமார் கோயில் குளம், ஸ்ரீமுத்து விநாயகர் கோயில் குளம், முனை ஐயனார் குளம், ஐயனார் கோயிலடி கேணி, கட்டையடி விவசாயக் கேணி, நாவலடி குண்டுக் குளம், அன்னமார் கோயில் குளம் போன்றவையே புனரமைக்கப்படவுள்ளன.
மழை காலங்களில் மழை நீரைத் தேக்கி வைக்கும் முகமாக இந்தக் குளங்கள் ஆழமாக்கிப் புனரமைக்கப்படவுள்ளன.
இந்தக் குளங்கள் கடந்த பல வருடங்களாகப் புனரமைப்பு இன்றித் தூர்ந்த நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசியால் 2,58,000 பேர் சாவு

## தொடர்கிறது சோமாலியாவின் சோகம்

நியூயோர்க், மே 4
சோமாலியாவில் தொடரும் கடும் உணவுப் பற்றாக்குறையால் இரண்டு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என்று ஐ.நா. சபை அறிக்கையிட்டுள்ளது.
2010 - 2012 ஆண்டு காலப் பகுதியில் சோமாலியாவில் நிலவிய கடும் வறுமை காரணமாகவே 2,58,000 பேர் உயிரிழந்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ள ஐ.நா. அறிக்கை, உயிரிழந்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் குழந்தைகள் என்றும் குறிப்பிட்டுள்ளது.
1992 ஆம் ஆண்டு சோமாலியாவில் ஏற்பட்ட கடும் பஞ்சம் காரணமாக சுமார் இரண்டு இலட்சத்து இருபதினாயிரம் பேர் உயிரிழந்திருந்தனர். அதன்பின்னர் ஏற் பட்ட பெரும் உயிரிழப்பு எண்ணிக்கை இதுவாகும்.



இதேவேளை, 2010 ஆம் ஆண்டில் வறட்சி ஏற்பட்டதுமே, எச்சரிக்கைகள் கொடுக்கப்பட்டிருந்தபோதும் மக்களைப் பாதுகாக்கத் தேவையான உடனடி நடவடிக்கைகள் ஐ.நா. சபையால் எடுக்கப்படவில்லை என ஐ.நாவின் மனித சேவைகள் அமைப்பாளர் லசாரினி அந்த அறிக்கையில் சுட் டிக்காட்டியுள்ளார்.
ஒக்ரோபர் 2010 மற்றும் ஏப்ரல் 2012 காலப்பகுதியில் ஏற்பட்ட பஞ்சம் மற்றும் உணவுத் தட்டுப்பாடு காரணமாக இறந்தவர்களில் ஏறத்தாழ 133,000 பேர் குழந்தைகளாவர். ஏறத்தாழ ஒரு கோடி 30 லட்சம் மக்கள் இந்த பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுக்கின்றது. (ற)



# தொடரும் தலைவலி

## முஷாரப் மீது குவியும் வழக்குகள்

லாகூர், மே 4
நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்து சிறை செய்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் தற்போது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப், தற்போது மற்றொரு கொலை வழக்கிலும் பிரதான குற்றவாளிகள் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளார்.
2006 ஆம் ஆண்டு இராணுவம் நடத்திய தாக்குதலில் தேசியவாதத் தலைவரான அக்பர் புத்தி உயிரிழந்தார். அந்தக் காலப்பகுதியில் இராணுவத் தளபதியாக இருந்த பர்வேஷ் முஷாரப் குறித்த தாக்குதலுக்கு உத்தரவிட்டார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.
அந்தச் சம்பவம் குறித்த வழக்கு தற்போது லாகூர் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது. வழக்குத் தொடர்பாக அறிக்கை சமர்ப்பித்த பொலிஸார் முஷாரப்பிடம் விசாரணை நடத்த அனுமதிக்க வேண்டும் என்று கோரியிருந்தனர். அதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் குறித்த வழக்கில் முஷாரப்பையும் இணைத்துக் கொண்டு அவரிடம் விசாரணைகளை மேற்கொள்ள பொலிஸாருக்கு அனுமதி வழங்கினர். அதையடுத்து பொலிஸார் தற்போது முஷாரப்பிடம் முதற்கட்ட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று கூறப்படுகிறது. (ற)

# கிளர்ச்சியாளருக்கு ஆயுதம் ஆலோசிக்கிறது அமெரிக்கா

நியூயோர்க், மே 4
சிரிய கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை வழங்குவது குறித்து அமெரிக்கா கவனம் செலுத்தி வருகின்றது என்று அமெரிக்க பாது காப்புத் துறைச் செயலர் சக் ஹெகல் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் கூறும்போது, ''சிரிய கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதம் வழங்குவது தொடர்பிலான நிலைப்பாட்டை அமெரிக்க அரசு தொடர்ந்தும் மூடிமறைக்காது. ஆயுதங்கள் வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அது குறித்த இறுதி முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை'' என்று தெரிவித்தார்.
கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை வழங்குவது குறித்து ஆராயப்பட்டு வருவதாக முதல் தடவையாக அமெரிக்க சிரேஸ்ட அதிகாரியொருவர் பகிரங்கமாக அறிவித்துள்ளமை இதுவே முதற் தடவையாகும். இவ்வாறு ஆயுதங்களை வழங்கும் திட்டத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கடந்த ஆண்டு எதிர்ப்பு வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## அமெ.பிரஜைக்கு வடகொரியா்வில் சிறை

பியாங்யாங், மே 4
அமெரிக்கப் பிரஜை ஒருவருக்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது வடகொரிய நீதிமன்றம்.
வடகொரியாவுக்குப் சுற்றுலாப் பயணம் மேற்கொண்டிருந்தார் என்று கூறப்படும் குறித்த அமெரிக்கப் பிரஜை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வடகொரியப் பாதுகாப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டிருந்தார்.
வடகொரியாவுக்கு எதிரான நடவடிக்கையில் அவர் ஈடுபட்டிருந்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. தற்போது அவருக்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
வடகொரியாவின் மூன்றாவது அணுப் பரிசோதனை குறித்து வோஷிங்டனுக்கும் பியோயொங்குக்கும் இடையில் பதற்றம் நிலவி வரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# நிர்ப்பந்திக்க முடியாது

## இந்தியாவுக்கு அறிவுறுத்துகின்றது சீனா

பீஜிங், மே 4
இந்திய எல்லைக்குள் ஊடுருவியிருப்பதாகக் கூறப்படும் தமது இராணுவத்தினரை மீள அழைப்பது தொடர்பாக இந்தியா எந்தவித காலக்கெடுவையும் விதிக்க முடியாது என்று சீனா அறிவித்துள்ளது.



கடந்தமாத இறுதியில் இந்தியாவின் காஷ்மீர் பிரதேசத்தில் உள்ள லடாய் பகுதியில் சுமார் 10கிலோமீற்றர் தூரம் வரை சீன இராணுவத்தினர் ஊடுருவி கூடாரங்களை அமைத்திருந்தனர். எனினும் தற்போது அவர்கள் மேலும் 9 கிலோமீற்றர் ஊடுருவியுள்ளனர் என்று கூறப்படுகிறது.
இந்த ஊடுருவல் குறித்து இந்தியா தரப்பில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், சீன இராணுவம் தொடர்ந்தும் அந்தப் பகுதியில் கூடாரங்களை அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சீனப் பாதுகாப்புச் செயலக அதிகாரி, ''சீன இராணுவம் தனது வழக்கமான ரோந்துப் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளது. லடாக்கை ஒட்டிய பகுதிகளில் தற்போது சீன இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர். அவர்களை மீளப்பெறுவது குறித்து எந்தவிதமான காலக்கெடு விதிப்பதையும் ஏற்றுக்கொள்ளமுடியாது. இது குறித்து இந்தியத் தரப்புடன் சீன வெளிவிவகாரத்துறை பேச்சுக்களை நடத்தி வருகின்றது.'' என்று தெரிவித்துள்ளார்.
இதேவேளை, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்த இராணுவத் தளபதி விக்ரம்சிங் தற்போதைய நிலைமை குறித்து பிரதமருக்கு விரிவாக விளக்கியுள்ளார் என்று கூறப்படுகிறது. சர்ச்சைக்குரிய பகுதியில் நிலைகொண்டுள்ள சீன இராணுவம் தமது இருப்பைப் பலப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது என்றும், குறித்த பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் சீன இராணுவத்தினர் ஆக்ரோஷமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்று அவர் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார் என்றும் தெரியவருகிறது.(ற)

# சரப்ஜித் சிங் விவகாரம் விசாரணை நடத்தப்படும்

இஸ்லாமாபாத், மே 4
பாகிஸ்தான் சிறையில் சக கைதிகளால் தாக்கப்பட்டு உயிரிழந்த சரப்ஜித் சிங் விடயத்தில் உரிய விசாரணைகள் நடத்தப்படும் என்று பாகிஸ்தர்ன் அறிவித்துள்ளது.
லாகூர் குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று குற்றத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த சரப்ஜித் சிங்குக்கு பாகிஸ்தான் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்திருந்தது. இந்த நிலையில் சிறையில் சக கைதிகளால் தாக்கப்பட்ட சரப்ஜித்சிங் கடந்த முதலாம் திகதி நள்ளிரவு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.
இதுதொடர்பாக விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை விதிக்கப்படும் என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. (ற)

## செவ்வாய்க்கு கவிதைகள் அனுப்பலாம்

நியூயோர்க், மே 4
கிரகங்களுக்கு மனிதர்களை அனுப்பி அலுத்துப் போயுள்ளதோ என்னவோ செவ்வாய்க் கிரகத்துக்கு கவிதைகளை அனுப்ப முடிவு செய்துள்ளது நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிலையம்.
செவ்வாய்க் கிரகத்தில் சுற்றுப்புறச் சூழலை ஆராய எதிர்வரும் நவம்பர் மாதம் விண்வெளி ஓடம் ஒன்றை அனுப்பவுள்ளது நாஸா. அந்த விண்வெளி ஓடத்திலேயே கவிதைகள் அடங்கிய இறுவட்டை அனுப்ப நாஸா முடிவு செய்துள்ளது.
அதன்படி கவிதைகளை அனுப்ப விரும்புவர்கள் மூன்று வரிகளை உடைய 'ஹைக்கூ' கவிதைகளை எழுதி அனுப்பலாம் என்று நாஸா இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் விண்வெளி ஆராய்ச்சி தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் உருவாக்க முடியும் என்று நாஸா கருதுகின்றது. (ற)




துருக்கி, ஸ்தான்புல்லில் நடைபெற்ற மே தின ஊர்வலத்தைப் பொலிஸார் கலைக்க முயன்றதில் பெரும் வன்முறை வெடித்தது. மே தின ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் கையில் கிடைத்தவற்றைக் கொண்டு பொலிஸார் மீது கடும் தாக்குதலை நடத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொஸ்டன் குண்டுவெடிப்பு; 3 மாணவர்கள் கைது

பொஸ்டன், மே 4
பொஸ்டன் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக மேலும் மூன்று மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பொஸ்டன் நகரில் கடந்த மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற குண்டு வெடிப்பில்3 பேர்உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தனர். அதையடுத்து பொலிஸாரின் தேடுதலில் குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகளில் ஒருவர் பொலிஸாரின் தாக்குதலில் உயிரிழந்ததுடன் மற்றையவர் கடும் காயங்களுடன் கைது செய்யப்பட்டார்.
இந்தநிலையில் தற்போது கசகஸ்தானைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கைது செய்யப்பட்டமைக்கான காரணம் குறித்து எதுவும் கூறப்படவில்லை. (ற)

## பேஸ்புக், டுவிட்டரை கண்காணிக்க தனி பொலிஸ் படை

சென்னை, மே.4
இணையத்தளத்தில் பேஸ்புக், டுவிட்டர் பக்கங்களை கண்காணிக்க பிரதி ஆணையாளர் தலைமையில் தனிப் பொலிஸ் படை அமைக்கப்பட்டுள்ளது.
இளைஞர்கள் மட்டுமல்லாது பெரியவர்கள், சிறியவர்கள் என்று அனைவரும் இணையத்தளத்தில் பேஸ்புக், டுவிட்டர் பக்கங்களைப் பயன்படுத்துகின்றனர். கணினியில் மட்டுமே அதிகமாக பயன்படுத்தப்பட்டு வந்த இணையத் தளங்கள், இப்போது கைபேசிக்கும் வந்த பின்னர் அதன் பயன்பாடு அதிகரித்துள்ளது.
இந்த இணையத் தள பக்கங்களை சிலர் தவறான நோக்கத்துக்காகவும் பயன்படுத்துகின்றனர். இது தொடர்பாக அவ்வப் போது பொலிஸுக்கு முறைப்பாடுகளும் வந்துள்ளன.
இதனால் சென்னை பொலிஸார் பேஸ்புக் மற்றும் டுவிட்டர் பக்கங்களை கண்காணிக்க முடிவு செய்துள்ளனர். (வ)

இணையத் தள பக்கங்களை சிலர் தவறான நோக்கத்துக் காகவும் பயன்படுத் துவது தொடர்பாக பொலிஸாருக்கு முறைப்பாடு.


சரப்ஜித் சிங் மரணத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், உத்தரப் பிரதேச தலைநகர் லக்னோவில் உள்ள விதான் பவன் அருகே பாரதிய ஜனதா கட்சியினர் பிரதமர் மன்மோகன் சிங்கின் உருவப் பொம்மையை தீயிட்டு கொளுத்தினர்.

## சரப்ஜித் சிங் விவகாரத்தை சரியாகக் கையாளவில்லை


### மத்திய அரசு மீது எதிர்க்கட்சிகள் பாய்ச்சல்

டில்லி, மே.4
பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்ட சரப்ஜித் சிங் விவகாரத்தை மத்திய அரசு சரியாக கையாளவில்லை என்று எதிர்க்கட்சிகள் சரமாரியாகக் குற்றம் சாட்டியுள்ளன.
சரப்ஜித் சிங் குடும்பத்துக்கு இரங்கல் தெரிவித்த மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி, சரப்ஜித் சிங் விவகாரத்தை மத்திய அரசு சரியாக கையாளாமல் போனதே அவரது சாவுக்கு காரணமாகிவிட்டதாக குற்றம் சாட்டியுள்ளார். டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங், உலக நாடுகள் இந்தியாவை ஏளனமாக பார்க்கும்படி சரப்ஜித் சிங் விவகாரத்தில் மத்திய அரசு கோழைத்தனமாகச் செயற்பட்டுள்ளதாக கடுமையாகச் சாடியுள்ளார்.
சரப்ஜித் சிங் குடும்பத்தினர் கதறி அழுதபோதும் மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று குஜராத் முதல்வர் மோடி குற்றம்சாட்டியுள்ளார்.
மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் சீத்தாராம் யெச்சூரி, சட்டத்துக்கு புறம்பான வகையில் சரப்ஜித் சிங்கை பாகிஸ்தான் அரசு தண்டித்து விட்டதாக குற்றம்சாட்டியுள்ளார். (வ)

# நேரம் பார்த்துத் தாக்குவோம்

## முகமது அலி பாணியில் என்கிறார் வெளியுறவு அமைச்சர் குர்ஷித்

டில்லி, மே.4
பிரபல குத்துச் சண்டை முகமது அலி பாணியில் இந்தியாவும் அதன் எதிரிகளுக்கு தக்க சமயத்தில் பதிலடி கொடுக்கும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்தார்.
தெற்காசியாவில் மண்டல தொழில் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான சர்வதேச மாநாட்டின் ஆரம்ப விழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு அவர் பேசுகையிலேயே இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-



இந்தியாவுக்கு என தனி வசீகரமும் சிறப்பியல்புகளும் உள்ளன. அவற்றை ஆண்டாண்டு காலமாக நாம் கடைப்பிடித்தும் மேம்படுத்தியும் வருகிறோம்.
வர்த்தகத்துறையில் பல வேறு வழிகளில் போட்டிகள் வரும். போட்டிகள் இருப்பது நல்லது; அப்போதுதான் நாம் அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்ல முடியும்.
எம்மிடம் மாபெரும் ஆற்றல் இருக்கிறது. எந்தச் சவாலையும் எதிர்கொள்ளும் வல்லமை இருக்கிறது. எமக்கென்று ஒரு பாரம்பரியம், நற்பெயர் இருக்கிறது.
அதை முதலில் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். எந்த விடயத்திலும் அவசரம் காட்டக்கூடாது; எதற்கெடுத்தாலும் யாருடனும் சண்டையிட்டுக் கொண்டிருக்க முடியாது. பொறுமையும் நிதானமும் கூடிய புத்தி கூர்மையுடனும் பிரச்சினைகளை அணுக வேண்டும்.
இந்த விடயத்தில் பிரபல குத்துச் சண்டை வீரர் பாணியை இந்தியா கடைப் பிடிக்கிறது. அவர் தன்னுடன் மோதும் வீரர்களை உடனடியாகத் தாக்க மாட்டார். அவர்கள் முதலில் தாக்கும்போதும் உடனடியாகத் தாக்காமல் தற்காப்பிலேயே ஈடுபடுவார். எதிரிகள் களைப்படையும் வரை காத்திருப்பார். தன்னுடைய சக்தியை தேவையில்லாமல் விரயம் செய்யமாட்டார்.
இறுதியில் இடது கையால் ஒரே குத்து; எதிரி தரையில் விழுந்து கிடப்பார். அது போல்தான் நாமும் அவசரப்படக்கூடாது; தேவையில்லாமல் எம்முடைய ஆற்றலை வீணடித்து விடக்கூடாது. தாக்குவதற்கு தக்க நேரம் வரும் வரை நிதானமாக இருந்து முகமது அலி பாணியில் தாக்குவோம் - என்றார். (வ)

## முன்னாள் ஜனாதிபதி பிரதீபா மீது குற்றச்சாட்டு

### சட்டவிரோதமாக கருணை மனுவை நிராகரித்தாராம்

தூக்குத் தண்டனைக் கைதி ஒருவரின் கருணை மனுவை முன்னாள் ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் சட்டத்துக்கு விரோதமாக நிராகரித்துள்ளதாக உச்ச நீதிமன்றம் குற்றம் சாட்டியுள்ளது.
இரட்டைக் கொலை வழக்கில் எம்.என். தாஸ் என்பவருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இதனை உயர்நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் உறுதி செய்த நிலையில், தாஸ் சார்பில் ஜனாதிபதிக்கு கருணை மனு அளிக்கப்பட்டது.
2005ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த அப்துல் கலாம் அதனை ஏற்றுக்கொண்டு, தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தார். ஆனால், கருணை மனு ஏற்றுக் கொண்டதை உள்துறை அமைச்சகம் மறைத்து, பிரதீபா பாட்டீலிடம் மீண்டும் அதனைச் சமர்ப்பித்து, அதனை நிராகரிக்கும்படி பரிந்துரைத்தது. (வ)

## எட்டு வருடங்களின் பின் களமிறங்கும் சோனியா



எட்டு வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் கர்நாடகாவில் ஆட்சியைப் பிடிக்கும் நோக்கில், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி குல்பர்காவில் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.
இதன்போது அவர் பாரதீய ஜனதா ஆட்சி குறித்து கூறுகையில்,
மத்திய அரசின் பல்வேறு நடவடிக்கைகளுக்காக கர்நாடக அரசுக்கு 83 ஆயிரம் கோடி ரூபா நிதியுதவி அளிக்கப்பட்டு இருக்கிறது. அவ்வளவு பெரிய தொகை எங்கே சென்றது? என்று கேள்வி கேட்பதற்கு நிதியுதவி அளிக்கப்பட்ட உங்களுக்கு உரிமையிருக்கிறது.
சட்டவிரோத சுரங்கங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் மூலம் கர்நாடக பாரதீய ஜனதா அரசு, பெரும் கொள்ளை மற்றும் ஊழலில் ஈடுபட்டு இருக்கிறது. இதனால் மக்களின் பெரும் அவமதிப்பையும் அது பெற்று இருக்கிறது. மக்களின் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து இருக்கிறது.
பொதுமக்களைத் தரக்குறைவாக நடத்தியிருக்கிறது. இதனால் அரசின் நிர்வாகம் முழுவதும் சீர்குலைந்து போயிருக்கிறது. இதுவே ஒரு மாற்றத்துக்கான தருணம். எனவே நன்றாகச் சிந்தித்து, நிலையான, வலிமையான ஓர் அரசைத் தேர்ந்தெடுங்கள் - என்றார். (வ)

# இந்தியா வந்தது சரப்ஜித்சிங் உடல்

## 3 நாள் துக்கம் அறிவித்தது பஞ்சாப் அரசு



அமிர்தசரஸ், மே.4
பாகிஸ்தான் சிறையில் படுகொலை செய்யப்பட்ட சரப்ஜித் சிங் உடல நேற்று முன்தினம் மாலை இந்தியாவுக்கு சிறப்பு விமானம் மூலம் கொண்டு வரப் பட்டது.
பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சரப்ஜித் சிங் மீது கடந்த 26 ஆம் திகதி சக கைதிகள் கொடூர கொலை வெறித்தாக்குதல் நடத்தினர்.
இதில் மூளைச் சாவடைந்த சரப் ஜித்சிங் உயிரிழந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவர் உடல் லாகூரில் இருந்து பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸுக்கு நேற்றுமுன்தினம் மாலை சிறப்பு விமானம் மூலம் கொண்டுவரப்பட்டது.
சரப்ஜித்சிங்கின் உடல் இந்தியா வந்தடைந்ததும், ராஜசன்சி விமான நிலையத்துக்கு பஞ்சாப் துணை முதல்வர் சுக்பீர் சிங் பாதல், அமைச்சர்கள், வெளிவிவகார இணை அமைச்சர் ப்ரநீத் கௌர் உள்ளிட்டோர் வந்திருந்தனர்.
அவரது உடல் அரச மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட பின்னர், அவரது சொந்தக் கிராமமான பிகிவிண்டுக்கு எடுத்துச் செல்லப்படும்.
அங்கு அரசு மரியாதையுடன் அவரது உடல் தகனம் செய்யப்படும். மூன்று நாள் அரசு துக்கம் அனுட்டிக்கவும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையாண்மைக்கு பாதிப்பு என்பதால் அமெரிக்க நிதி உதவியை நிராகரித்தோம்

## நீதி அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்

கொழும்பு,மே 4
அமெரிக்காவின் நிபந்தனைகளை ஏற்க முடியாது என்பதாலேயே அந்த நாடு வழங்கிய நிதியுதவியை இலங்கை நிராகரித்ததாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கை அதிகாரிகளுடன் இணக்கப்பாட்டுக்கு வரமுடியாது போனதால், நீதித் துறை மறுசீரமைப்புத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட 450 மில்லியன் ரூபா நிதியுதவியை விலக்கிக் கொள்வதாக அமெரிக்கா கூறியிருந்தது.

இது குறித்து இந்திய ஊடகம் ஒன்றுக்கு தகவல் வெளியிட்டுள்ள, நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், நிதியுதவியுடன் விதிக்கப்பட்ட நிபந்தனைகள் இலங்கையின் இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது என்பதாலேயே அது நிராகரிக்கப் பட்டதாகக் கூறியுள்ளார்.

நன்கொடைக்கான நிபந்தனைகள் ஒரு இறைமையுள்ள நாடு என்ற எமது நிலைக்கு ஏற்றதாக இருக்க வில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

அந்த நிபந்தனைகள் குறித்து வினவியபோது, இதற்கு மேல் என்னால் சொல்ல முடியாது என்று அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, இந்த நன்கொடை நிதியைப் பயன்படுத்தும் குழுவின் தலைவராக பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் இருப் பதே, இந்தச் சர்ச்சைக்குக் காரணம் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸின் நியமனத்தை தாம் அங்கீகரிக்கவில்லை என்பதால், அவர் அந்தக் குழுவின் தலைவராக இருப்பதற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. ஆனால், மொஹான் பீரிஸே தலைவராக இருக்க வேண்டும் என்று இலங்கை வலியுறுத்தியுள்ளது.

ஓர் இறைமையுள்ள நாடு என்ற வகையில் அமெரிக்காவின் இந்த எதிர்ப்பு ஏற்றுக் கொள்ள முடியாது என்று இலங்கை கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)



“ பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸின் நியமனத்தை தாம் அங்கீகரிக்கவில்லை என்பதால், அவர் அந்தக் குழுவின் தலைவராக இருப்பதற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

## 350 அடி பள்ளத்தில் விழுந்தது கார்

### பெண் ஒருவர் சாவு; இருவர் காயம்

கொழும்பு,மே 4
கம்பளை, நுவரெலியா வீதியில் எல்பொட நோனா வத்தை என்ற இடத்தில் காரொன்று சுமார் 350 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் பெண்ணொருவர் உயிரிழந்தார்.

அத்துடன் அந்த காரில் பயணித்த மேலும் இரண்டு பெண்கள் படுகாயமடைந்துள்ளனர். அவ்விருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் புஸ்ஸலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

பெண்ணொருவரினாலேயே கார் செலுத்தி செல்லப்பட்டதாகவும் விபத்து இடம்பெற்றபோது குறித்த காரில் பெண்கள் மூவர் மட்டுமே இருந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கார் பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகி கார் புரண்டு போய் வீடொன்றுக்கு அருகில் நின்றபோது. உயிரிழந்த பெண் காருக்கு அடியில் இறுகியிருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

## ஐ.நா. மாநாடுகளை ஒழுங்கமைக்கும் குழுத் தலைவராக கெஹலியவின் மகள்

கொழும்பு,மே 4
ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடுகளை ஒழுங்கமைக்கும் ஆலோசனை குழுவிற்கு தலைமை தாங்கும் பொறுப்பு இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கை தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் சமித்ரி ரம்புக்வெல இந்த பொறுப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் புதல்வி இவர்.

2013-2014 ஆம் ஆண்டு கால பகுதியில் ஐ.நா மாநாடுகளை ஒழுங்கமைக்கும் ஆலோசனைக் குழுவின் தலைமையை இவர் வகிப்பார்.

இந்த நியமனத்திற்காக ஆசிய - பசுபிக் அரச குழுவின் அனுமதியும் கிடைக்கப் பெற்றுள்ளது.



இந்த குழுவிற்கான உறுப்புரிமை இந்த வருடமே இலங்கைக்கு கிடைக்கப் பெற்றது.

இந்தக் குழு நியமிக்கப்பட்ட பின்னர் மிகக் குறைந்த வயதில் தலைமைப் பொறுப்பை சமித்ரி ரம்புக்வெல்ல ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கை கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நிலையில் இந்தப் பதவி இலங்கைக்கு பெரும் நிவாரணமாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-16)

## ஒரு கோடி பேர் வாக்களிக்கத் தகுதி

### கடந்த வருட வாக்காளர் பட்டியலின்படி

கடந்த வருடத்துக்கான வாக்காளர் இடாப்பின்படி தேர்தலில் வாக்களிப்பதற்காக ஒரு கோடி 44 இலட்சத்து 51,264 பேர் தகுதி பெற்றுள்ளனர். இதன்படி 2011 ஆம் ஆண்டை விடவும் 2012 இல் 1,83,200 பேர் மேலதிகமாக வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு தயாரிக்கையில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் வாக்காளர்களாக பதிவு செய்திருந்த 72 ஆயிரத்து 319 வாக்காளர்களின் பெயர்கள் ஒரு இடத்தில் இருந்து அகற்றப்பட்டுள்ளதாகவும் தேர்தல் திணைக்களம் குறிப்பிட்டது. 2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு தயாரிக்கையில் இரட்டைப் பதிவுள்ள 1ஒரு லட்சத்து 76 ஆயிரத்து 534 பேரின் பெயர்கள் அகற்றப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

2012 வாக்காளர் இடாப்பு தயாரிக்கையில் கொழும்பு மாவட்டத்தில் 11 ஆயிரத்து 359 பேரினதும் கம்பஹா மாவட்டத்தில் இருந்து 9 ஆயிரத்து 23 பேரினதும் வன்னி மாவட்டத்திலிருந்து ஐயாயிரத்து 410 பேரினதும் யாழ். மாவட்டத்திலிருந்து நான்காயிரத்து 67 பேரினதும் கண்டி மாவட்டத்திலிருந்து 4040 பேரினதும் களுத்துறை மாவட்டத்திலிருந்து 3,951 பேரினதும் பெயர்கள் அகற்றப்பட்டுள்ளன.

வாக்காளர் இடாப்பு தற்பொழுது கணினி மயப்படுத்தப் பட்டுள்ளதால் வருடாந்தம் இரட்டைப் பதிவுகள் அகற்றப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வாக்காளர்களுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் தமது பெயர் வாக்காளர் இடாப்பில் உள்ளதா என மாவட்ட தேர்தல் அலுவலகங்கள், பிரதேச செயலகம், கிராம உத்தியோகத்தர் அலுவலகம் என்பவற்றில் இருந்து அறிய முடியும் எனவும் தேர்தல் திணைக்களம் கூறியது.

வாக்காளர் இடாப்பு விவரம் தேர்தல் திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்பட்டு வந்ததோடு 2012 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பு இணையத்தில் வெளியிடப்படமாட்டாது என மேலதிக தேர்தல் ஆணையாளர் அமரதாஸ கூறினார். வாக்காளர்களின் முறைப்பாடுகளை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## இணையத்தளத்தை முடக்கியவருக்கு பிணை

மற்றவர்களின் இணையத்தளங்களுள் நுழைந்து அவற்றை முடக்கும் மென்பொருள்களையும் அறிவுறுத்தல்களையும் தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கியதாக குற்றஞ்சாட்டப்பட்டவர் 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகளிலும் 10 ஆயிரம் காசு பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பில பிட்டியவே அவரை பிணையில் விடுவித்துள்ளார்.

இதுதொடர்பிலான வழக்கு கடந்த 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நேற்று முன்தினம் வரைஅவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் சிங்கபுலி அன்று உத்தரவிட்டிருந்தார்.

# வடக்கு, கிழக்கைப் போல் மலையகத்திலும் அரசு சதி

## தொழிலாளருக்கு காணி உரிமை வழங்க வேண்டும் என இ.தே.தோ.தொ.ச.வலியுறுத்து



பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களுக்கு வீடு மற்றும் காணி உரிமைப் பத்திரங்களை வழங்குவதற்கு அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் அதிரடியாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பதுளையில் நடைபெற்ற மே தின நிகழ்வுகளின்போதே இந்தத் தீர்மானத்தை குறித்த சங்கம் நிறைவேற்றியுள்ளது.

பெருந்திரளான மக்கள் அணி திரண்ட இந்த மே தினக் கூட்டத்தில உரையாற்றிய இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின்பொதுச் செயலாளரும், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தவிசாளரும், ஊவா மாகாண சபை உறுப்பினருமான கே.வேலாயுதம் வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் பட்டியலிட்டுக் காட்டினார்.

வரவேற்புரையை நிகழ்த்திய வேலாயுதம் தமதுரையில் மேலும் கூறியவை வருமாறு:-

பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களுக்கு வீடு, காணி உரிமைகளைப் பெற்றுத் தருவதாக அரசு உறுதியளித் துள்ள போதிலும், இதுவரையில் அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. எனவே, பெருந்தோட்டத் துறை தொழிலாளர்களின் குடும்பங்களிலுள்ள இருபாலாருக்கும் அரசு உடன் காணி மற்றும் வீட்டுரிமைப் பத்திரங்களை வழங்கவேண்டும் என்ற தீர்மானத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் நிறைவேற்று கின்றோம்.

அரசு இன்று பெருந்தோட்டத் துறையை வெளியாருக்குக் கொடுத்து அவற்றை சிறு தோட்டங்களாக்குவதற்கு மறைமுகமாகச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

வடக்கு, கிழக்கில் சனத்தொகை பரம்பல் விகிதாசாரத்தை திட்டமிட்ட அடிப்படையில் மாற்றியமைப்பதுபோல மலையகத்திலும் மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக அரசு இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது என்ற சந்தேகம் தற்போது மேலோங்கியுள்ளது. மலையக மக்களின் செறிவை சிதறடித்து அரசியல் பேசும் உரிமையை இல்லாது செய்வதற்காக இதனூடாக அரசு முயற்சிக் கின்றது.

வீர வசனம் பேசும் தொழிற்சங்கப் பிரமுகர்கள் தமது கோரிக்கைகயை முன்வைத்து முதலாளிமார் சம்மேளனத்தினருக்கு ஒரு கடிதத்தையேனும் எழுதியிருப்பார்களா என்றால் இல்லை என்றே பதில் வரும். வீரவசனம் பேசித் திரிபவர்கள் அதை செயலில் காட்டவேண்டும். மாறாக தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையை வைத்து அரசியல் பிழைப்பு நடத்த முயற்சிக்கக்கூடாது. தொழிலாளர்களின் நலனுக்கான ஒரு கோரிக்கை கடிதத்தையேனும் அனுப்பாத இவர்களுக்கு எம்மை விமர்சிப்பதற்கு எவ்வி அருகதையும் இல்லை.

தொழிற்சங்கங்கள் என்ற போர்வையில் அரசின் அடாவடிச் செயல்களுக்கு துணை போய், சமூகவிரோதச் செயல்களுக்காக இலஞ்சம் வாங்கிப் பழகிப்போன இவர்களுக்கு, பார்ப்பவர்கள் எல்லாம் அப்படித்தான் தோன்றுகின்றது. தொழிற்சங்கம் என்ற பேரில் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் எம்மை விமர்சிக்கின்றனர். இவர்கள் மலையக மக்களுக்காக நாடாளுமன்றில் குரல் கொடுத்துள்ளார்களா?

மலையக மக்கள் அணி திரண்டுவந்து எமது மே தின நிகழ்வுகளில் கலந்துகொண்டுள்ளனர். இது கூட்டு ஒப்பந்த முயற்சிக்குக் கிடைத்த வெற்றியின் பிரதிபலிப்பாகும் என்பதை விமர்சிப்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.' - என்றார் வேலாயுதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில்

# தமிழரின் காணிகளில் சிங்களவர் குடியேற்றம்

### கண்டிக்கிறார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

நெளுக்குளம், மே 4
செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வீரபுரம் கிராம வீட்டுத் திட்டக் காணிகளில் உலுக்குளத்தில் வசிக்கும் சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றம்சாட்டியுள்ளார்.
இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இந்தக் காணிகள் 1995 ஆம் ஆண்டு 400 தமிழ் குடும்பங்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத் தேவைக்கென தலா ஒரு ஏக்கர் வீதம் காணி அனுமதிப்பத்திரத்துடன் பிரதேச செயலாளரால் வழங்கப்பட்டவையாகும்.
இந்தக்காணிகளிலேயே உலுக்குளத்தில் வசிக்கும் சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மிகத் துரிதமாக அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் பின்னணியில் காணி அமைச்சு செயற்படுவதோடு இன நல்லிணக்கம் தொடர்பாக மாவட்டங்கள் தோறும் பிரசாரத்தில் ஈடுபட்டுவரும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவவிஜயசிங்கவும் முழுமூச்சாக உள்ளார்.
காணி அனுமதிப்பத்திரங்களுடைய தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து சிங்கள மக்களைகுடியேற்றும் அரசின் இத்தகைய அடாவடித்தனங்களை உடன் நிறுத்த முன்வருமாறு சர்வதேச சமூகம் உட்பட அனைத்துத் தரப்பினரிடமும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
கடந்த 29 ஆம் திகதி செட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவவிஜயசிங்க தலைமையில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் மத்தியில் இன நல்லிணக்கம் தொடர்பாகவும் அவர்களின் தேவைகள் பற்றியும் அறியும்பொருட்டு கூட்டமொன்று நடத்தப்பட்டது.
செட்டிகுளம் பிரதேச செயலர் உட்பட அதிகாரிகள் மற்றும் கூடியிருந்தவர்கள் முன்னிலையில் மேற்படி 400 ஏக்கர் காணி கவனிப்பாரற்றுக் கிடப்பதாகவும் அவற்றை உலுக்குளம் சிங்கள மக்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ரஜீவ விஜயசிங்க தெரிவித்துள்ளார். இந்தக் கூட்டத்தில் சமூகமளித்திருந்த காணிச் சொந்தக்காரர்களான தமிழ் மக்கள் தமது காணிகளைச் சிங்கள மக்கள் அபகரித்து வருவதாக முறையிட்ட போதே அரச நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



இந்தக் காணி அப்போதைய வடகிழக்கு மாகாண அரசினால் காணி அமைச்சின் அனுமதியுடன் செட்டிக்குளம் பிரதேச செயலரால் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.
எது எவ்வாறு இருப்பினும் அரசினால் காணி அனுமதிப்பத்திரத்துடன் வழங்கப்பட்ட காணிகளை மீளப்பறிக்கும் ஏற்பாடுகள் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியவையே. அதிலும் ஓர் இனத்திடமிருந்து அவர்களது சொந்தக் காணிகளைப் பறித்தெடுத்து அங்கு சிங்கள மக்களைக் குடியேற்றும் நடவடிக்கையானது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.
இதனால் எவ்வாறு இன நல்லிணக்கத்தைப் பேணவும் மேம்படுத்தவும் முடியும் என அரசு நினைக்கின்றது. காணி உறுதிகள், அனுமதிப் பத்திரங்கள் முதலானவை தமிழர் பகுதிகளில் தேவையற்றன என்று அரசு கருதினால் வடக்கு கிழக்கிலுள்ள மக்களைத் திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் அடைத்து விட்டு அரசு தமக்குத் தேவையான காணிகளைச் சுவீகரிப்பது மேலானது எனவும் சிவசக்தி ஆனந்தன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (க-402)

## ஒரு பரல் தண்ணீர் 22,500 ரூபா

சில்லறைக் கடைகளுக்கு பொருள் வழங்கும் வியாபாரி எனத் தன்னை அறிமுகப்படுத்திய தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவர் தண்ணீர் அடைக்கப்பட்ட பரல்களை 22 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்று பணம் கொள்ளையடித்த சம்பவம் ஒன்று முல்லைத்தீவு தண்ணீரூற்றுப் பகுதியில் நடைபெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது;
முள்ளியவளை, தண்ணீரூற்று பகுதிகளில் சில்லறைக் கடை வைத்திருப்பவர்கள் வேறு சிலரிடம் குறைந்த விலையில் பொருள்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்து வந்துள்ளனர்.
இதனை அவதானித்த அநுராதபுரத்தைச் சேர்ந்த ஒருவர், தான் சில்லறை விற்பனை நிலையங்களுக்கு பொருள் வழங்குபவர் எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு மூன்று கடைக்காரரிடம் தலா ஒவ்வொரு வெற்று பரல்களை வேண்டிச் சென்றுள்ளார். கடந்தவாரம் வாகனம் ஒன்றில் மசகு நிரப்பப்பட்ட பரல்களாக அவை கொண்டுவந்து இறக்கப்பட்டன.
ஒவ்வொன்றுக்கும் தலா 22 ஆயிரத்து 500 ரூபாவை பெற்றுக்கொண்டு வியாபாரி மாயமாகி விட்டார்.
பரலைத் திறந்து மசகை அளக்க முற்பட்ட கடைக்காரருக்கு அதிர்ச்சி. தண்ணீரே பரலில் முக்கால்பங்கு நிரப்பப்பட்டிருந்தது. சட்டபூர்வமற்ற வகையில் பொருளைக் கொள்வனவு செய்ததால் இது குறித்து எங்கும் முறையிட முடியாத நிலையில் காசைக் கொடுத்து தாம் ஏமாந்து விட்டதாகப் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ 433)

## நொச்சிமோட்டைப் பாலம் அபாயகரமான நிலையில்

### பாதுகாப்பு இல்லாத பயணம்

வவுனியா, மே 4
வவுனியா ஏ-9 வீதியில் அமைந்துள்ள நொச்சிமோட்டைப் பாலம் அபாயகரமான நிலையில் காணப்படுகின்றது. இந்தப் பாலம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக இரும்பினால் அமைக்கப்பட்டது.
ஆனால் இது பாதுகாப்பான நிலையில் இல்லையென வாகன சாரதிகளும், பயணிகளும் குறை கூறி வருகின்றனர்.
இது வரை இந்தப் பாலம் மூன்று தடவைகள் பழுதடைந்துள்ளன. இதன் மேலாகப் பயணிக்கும் போது வீதி விபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாக அந்தப்பகுதியில் கடமையாற்றும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.
மேலும் இதனூடாகச் செல்லும் வாகனங்களை மெதுவாகப் பயணிக்குமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.
ஏற்கனவே மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் இந்தப் பாலத்தில் விபத்துக்கு உள்ளாகி மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.
இதனையடுத்து பொலிஸார் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.
நாளாந்தம் ஆயிரக்கணக்கான வாகனங்கள் பயணிக்கும் இந்தப் பாலத்தை உரிய வகையில் புனரமைக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

## உணவுக்கு உதவாத நிவாரண அரிசி

கிளிநொச்சி, மே 4
கிளிநொச்சி தொண்டமான் நகர் கிராமத்தில் கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினூடாக நிவாரணத்துக்கென வழங்கப்பட்ட அரிசியை உணவுத் தேவைக்குப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.
கிளிநொச்சி கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினூடாக கிளிநொச்சி தொண்டமான் நகர் விவேகானந்த நகர் ஆகிய பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்ட நிவாரணம் மற்றும் குழந்தைகளுக்கான பால்மா முத்திரைக்கான நிவாரணம், இந்தியாவில் இருந்து திரும்பியவர்களுக்கான நிவாரணம் என பல்வேறுபட்ட நிவாரண உதவித் திட்டங்களுக்கு வழங்கப்பட்டு வரும் அரிசியே தரமற்றதாகக் காணப்படுகின்றது.
குறித்த தரமற்ற அரிசி வழங்கப்பட்டமை குறித்து பல்வேறு தரப்பினரிடமும் முறையிடப் போவதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (க-6)



வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஞானக் கதிரோன் பாடிய 'கலைத்தாயை வணங்குவோமா'ப் பாடல் வெளியீட்டின்போது.... (க-18)

## உதயன் தொடர்ந்து தாக்கப்படுவதற்கு எதிராகக் கண்டனத் தீர்மானம்

### மன்னார் நகரசபையில் ஏகமனதாக நிறைவேறியது

மன்னார், மே 4
உதயன் பத்திரிகை தொடர்ந்து தாக்கப்படுவதற்கு எதிரான கண்டனத் தீர்மானம் மன்னார் நகரசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
மன்னார் நகரசபைக்கூட்டம் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்ற போதே இந்தக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
இதற்கான தீர்மானத்தை சபை உறுப்பினரான இரட்ணசிங்கம் குமரேஸ் கொண்டு வந்தார். இதனை ஏனைய உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.
மேலும் பல தீர்மானங்கள் சபைக் கூட்டத்தின்போது நிறைவேற்றப்பட்டதாக நகரசபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார். இவர் அது தொடர்பாகத் தெரிவிக்கையில்;
மன்னார் சந்தைப் பகுதியில் அமைந்துள்ள மாட்டு இறைச்சி விற்பனை நிலையம் பல மாதங்களாக இயங்காத நிலையில் காணப்படுகின்றது.
இதனை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
கடந்த காலங்களில் கிறீஸ் பூதம் என்பது எவ்வாறு உருவாக்கப்பட்டதோ அதே [illegible] தொடர்ந்து [illegible] தல், பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகள் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
குறிப்பாக அடம்பன் பகுதியில் உள்ள கண்ணாட்டிக் கிராமத்தின் பிரதான வீதியில் வைக்கப்பட்டிருந்த திருச்சொரூபம் ஒன்று உடைக்கப்பட்டுள்ளது. மேலும் [illegible] ஒருவரை அதிகாரி ஒருவர் அவமரியாதை செய்துள்ளார்.
இதற்கு எதிராக மக்கள் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.
மக்களின் பிரச்சினைகளைத் தாங்கி வருகின்ற பத்திரிகைகள் குறிப்பாக 'உதயன்' பத்திரிகையின் பணியாளர்களும், அலுவலகமும் தொடர்ந்தும் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றமை கவலையளிக்கின்றது.
கடந்த காலங்களில் உதயன் பத்திரிகை தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வந்தது. தொடர்ந்தும் அந்தப் பணியை மேற்கொண்டு வருகின்றது.
இந்த நிலையில் உதயன் பத்திரிகை தொடர்ந்தும் தாக்கப்படுவதற்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அது ஏகமனதாகச் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரடி வரிகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## திஸ்ஸ விதாரண வேண்டுகோள்



கொழும்பு,மே 4

நேரடி வரிகளைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் திஸ்ஸ விதாரண வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிருலப்பனை நகரசபை மைதானத்தில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உழைக்கும் மக்களுக்கு கூடுதல் சம்பளம் வழங்கப்பட வேண்டும். ஓய்வூதியம் பெற்றுக் கொண்டவர்களுக்கு உரிய வகையில் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும்.

அரசால் அறவீடு செய்யப்படும் வரி வருமானங்களில் கூடுதலானவை நேரடி வரிகளாகும்.

பொருள்கள், சேவைகளின் விலைகள் உயர்வடைவதற்கு வரி அறவீடும் முக்கிய காரணமாகும். நேரடி வரிகளைக் குறைப்பதன் மூலம் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க முடியும்.- என்றார். (ச)

# கிழக்கில் மு.கா.-கூட்டமைப்பு ஆட்சிக்கு வழிதிறக்கும் நோர்வே

## அமைச்சர் வீரவன்ஸ குற்றச்சாட்டு



கொழும்பு,மே 4

முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்படும் பௌத்த மத அதிதீவிர போக்குடைய அமைப்புகளுக்கு நோர்வே நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரே நிதி வழங்குகின்றார். கொழும்பு மற்றும் தெற்கில் வாழும் முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்படும்படியே இந்த நிதி பௌத்த அமைப்புகளுக்கு வழங்கப்படுகின்றது - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள் அமைப்பின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே நோர்வே மற்றும் சர்வதேச நாடுகள் செயற்படுகின்றன. கிழக்குப் பகுதியில் வாழும் முஸ்லிம் மக்களின் மனப்போக்கை மாற்றுவதற்கும், அவர்களைத் தூண்டி கிழக்கிலுள்ள மாகாண சபை ஆட்சியைக் குழப்பி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைப்பதற்கே இவர்கள் முனைகின்றனர் என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

மாளிகாவத்தையில் நடத்திய மே தினக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த அரசில் அமைச்சராக ரவூப் ஹக்கீம் இருந்தாலும், அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனேயே வடக்கு, கிழக்கில் ஆட்சியமைப்பதை விரும்புகின்றார். அவர் ஏற்கனவே இது சம்பந்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்திவருகின்றார்.

சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கிடையில் இவ்வாறான முரண்பாடுகளைத் தூண்டிவிடுவதன் மூலமாக கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் மனதை மாற்றி இந்த அரசிலிருந்து ஹக்கீமை பிரிப்பதற்கும் சர்வதேச அமைப்புகள் உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இவ்வாறான சதித்திட்டங்களை முன்னெடுத்துவருகின்றன.

இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றுமொரு ஈழத்தை உருவாக்க முயல்கிறது. இணைந்த வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களுக்கு தென்கிழக்கு அலகு உருவாகும். இந்தச் சதித்திட்டத்தை நாம் முறியடிக்க வேண்டும். மாகாணசபை ஆட்சியில் உள்ள 13ஆவது சீர்திருத்தத்தில் உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் பறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னரே வடக்கில் தேர்தல் நடைபெற வேண்டும். இதனை மீறி அரசு வடக்கில் மாகாணசபைத் தேர்தலொன்றை நடத்தினால் எனது அமைச்சுப் பதவியைத் துறப்பதற்கும் நான் தயாராகவுள்ளேன். வடக்கு, கிழக்கை மீட்டவர்கள் எமது சிங்கள இராணுவத்தினரே - என்றார். (த)

# 2015 இல் அரசை கவிழ்த்து மக்கள் நல ஆட்சி ஏற்படும்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு,மே 4

2015 ஆம் ஆண்டில் அரசைக் கவிழ்த்து மக்கள் நல ஆட்சியொன்று உருவாக்கப்படும் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது:-

ஐந்து தலைமுறைகளை அரசு கடனாளியாக்கியுள்ளது. நாட்டை கடனிலிருந்து மீட்டெடுப்பது மிகவும் சவால் மிக்கதாகவே அமைந்துள்ளது.



இந்த நாட்டு அரசியல்வாதிகள் தொழிலாளர்களை தங்களது தேவைகளுக்காக பயன்படுத்தி வந்தனர். அதனால் தொழிலாளர் வர்க்கம் தொடர்ச்சியாகத் துன்பங்களை அனுபவித்து வந்தது. தொழிலாளர் உரிமைகளுக்காக போராடிய இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

கொடுப்பதனை வாங்கி உண்டு விட்டு மக்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடாகும். 30 ஆண்டுப் போரை முன்னெடுத்த படையினரை அரசு நடத்தும் விதம் வருத்தமளிக்கின்றது.

ஆட்சியாளர்களின் பிள்ளைகள் கார் பந்தயங்களில் ஈடுபடுவதற்கான பாதைகளுக்கு மணல் மூட்டைகளை சுமக்கும் கூலித் தொழிலாளிகளாக படையினர் மாற்றப்பட்டுள்ளனர்.

18 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் இந்த ஆட்சியாளர்கள் நீண்ட காலம் ஆட்சியில் இருக்க முயற்சிக்கின்றனர். எனத் தெரிவித்துள்ளார். (ச)



நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை இலங்கைக்கு வந்த ஜப்பானின் பிரதிப் பிரதமர் தரோ அஸோ வரவேற்புப் புத்தகத்தில் கையொப்பமிடுகிறார். அருகில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உட்பட பலர் காணப்படுகின்றனர்.

# வர்த்தகர் வீட்டில் திருடியவர் கைது

கட்டுகஸ்தோட்டை, அலதெனிய பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவரது வீட்டிலிருந்து சுமார் 3 லட்சத்து 83 ஆயிரம் ரூபாவை திருடிய ஊழியர் ஒருவரை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். குறித்த வியாபாரியின் வீட்டில் சுமார் 10 வருடங்கள் வேலை செய்த ஊழியர் ஒருவரே இவ்வாறு பணத்தை திருடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சந்தேகநபர் வளர்ப்பு நாய்களுக்கு தீனி போடும் நோக்கில் வீட்டினுள் நுழைந்து பணம் திருடியுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்ததாகப் பொலிஸார் கூறினர். (ச)

# 30 ஆயிரம் கருத்தடை ஊசிகள் கொண்டுவந்த சூத்திரதாரி யார்?

## மாதுளுவாவே சோபித தேரர் கேள்வி

கொழும்பு,மே 4

உருளைக்கிழங்கு ஏற்றிவரப்பட்ட கொள்கலன் ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டு, பாகிஸ்தான் நபர் ஒருவரினால் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ள சுமார் 30 ஆயிரம் கருத்தடை மருந்து ஊசிகள் யாருடைய தேவைக்காகக் கொண்டுவரப்பட்டன, அதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பதை நாட்டுக்கு உடனடியாக தெரியப்படுத்த வேண்டும் .

- இவ்வாறு கோட்டே நாக விகாரையின் விகாரதிபதி மாதுளுவாவே சோபித தேரர் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இது குறித்து விரிவான விசாரணைகளை நடத்த வேண்டியது அரசின் கடமை.

சிங்களப் பெண்களை குழந்தைப் பேறற்றவர்களாக்கும் இரகசிய வேலைத்திட்டம் ஒன்று நாட்டுக்குள் செயற்படுத்தப்படுவதாக நாடு முழுவதும் சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு பெருந்தொகையான கருத்தடை ஊசிகள் சிக்கியமையானது அந்தச் சர்ச்சையை உறுதிப்படுத்தியுள்ளது. அவற்றை இறக்குமதி செய்தவர்கள் தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட வேண்டும்.- என்றார். (ச)

# மின்சாரக் கட்டணங்களை அதிகரிக்க கோரவில்லை

## மின்சார சபை பொறியியலாளர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு,மே 4

இலங்கை மின்சார சபை வருடாந்தம் எதிர்நோக்கும் 78 பில்லியன் ரூபா நட்டத்தை ஈடுசெய்ய வேண்டுமென்பதே எமது கோரிக்கையாக இருந்ததே தவிர, மின் கட்டணத்தை உயர்த்துவது அல்ல.

அரசு எந்த வகையில் அதனை ஈடுசெய்ய முன்வந்தாலும் தாம் ஏற்றுக்கொள்ள தயாரென மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

மின் கட்டண அதிகரிப்புக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று திட்டவட்டமாக மறுத்த இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம், ஏனைய தொழிற்சங்கத்தினர் தம் மீது வீண் பழி சுமத்துவதைக் கண்டிப்பதாகவும் கூறியுள்ளது.

மின்சார சபையின் ஏனைய தொழிற்சங்கவாதிகள் முன்வைக்கும் காரணங்கள் ஆதாரங்களுடன் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவர்களது செயற்பாட்டுக்குத் தமது சங்கமும் பூரண ஒத்துழைப்பு வழங்கும் என்றும் கூறியுள்ளது.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் நடைபெற்றது.

இதன்போதே சங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்டு இந்தக் கருத்தை முன்வைத்தனர்.

மின்சார சபையின் செலவீனத்தை ஈடுசெய்ய அரசு மாற்று வழியினைக் கையாண்ட போதும், அரசால் மக்களுக்காக வழங்கப்பட்டு வந்த மின்சார மானியம் நிறுத்தப்பட்டது என்றும் இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# ஒளிமயமாகின்றது சிவனொளிபாதமலை



நுவரெலியா,மே 4

சிவனொளிபாதமலையைத் தரிசிக்க இனி அங்கு செல்ல வேண்டிய தேவை இல்லை. தாம் இருக்கின்ற இடத்திலிருந்தவாறே சிவனொளி பாதமலையைத் தரிசிப்பதற்கான வாய்ப்பை இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் பெற்றுக்கொடுப்பதற்காக அங்கு விசேட மின்குமிழ் அலங்கரிப்பை மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக வெளிநாட்டிலிருந்து விசேட மின்குமிழ்கள் கொண்டுவரப்படவுள்ளன.

அத்துடன், அடுத்த மாதத்துக்குள் இந்த மின் குமிழ் அலங்கரிப்பு வேலைத் திட்டத்தை நிறைவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிவனொளிபாதமலை விகாரையின் விகாரதிபதி ஸ்ரீ சுமங்கல ரத்னபால தம்மரக விதாபிதான பெங்கமுவே ஸ்ரீ தம்ம தின்ன தேரரின் ஆலோசனைக்கமையவே இந்த வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. (ச)

# பகிடிவதைக்கு உள்ளான மாணவன் வைத்தியசாலையில்

பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்ட றுஹுணு பல்கலைக்கழக மாணவன் மாத்தறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளான். ஹொரணையைச் சேர்ந்த கலைப்பீட மாணவனான கே.பி. இந்திக பெரேரா (20 வயது) என்பவரே இவ்வாறு மனித நேயமின்றி பகிடிவதைக்குட்படுத்தப்பட்டுள்ளார். தனியார் விடுதியொன்றில் தங்கும் இந்த மாணவனை பல்கலைக்கழக விடுதியில் தூங்குமாறு வற்புறுத்தியே அவர் மீது மிக மோசமாக முறையில் பகிடிவதை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிரேஷ்ட மாணவர்களே தன்னை பகிடிவதைக்கு உட்படுத்தியதாக அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரக்தி என்னும் வேதனையை நீக்கிய சத்திய பூஜை

கோசல தேசத்தில் தேவதத்தன் என்ற பெயரைக் கொண்ட அந்தணர் ஒருவன் இருந்தான். அவனுக்கு நீண்ட காலமாக புத்திரபேறு கிடைக்கவில்லை. அதனால் மிக வருந்திய அவன் புத்திர காமேஷ்டி யாகத்தை செய்து அதன் மூலம் புத்திர பாக்கியத்தை அடைய முடிவு செய்தான். கோபிலர் என்னும் முனிவரை பிரம்மாவாகவும் பாஞ்சு ருவெல்களை யக்ஞத்தை செய்பவராகவும் பிரகஸ்பதியை ஹோதாவாகவும், கோபிலன் என்பவரைச் சாமவேத கானம் செய்பவராகவும் நியமித்து இந்த யாகத்தை அந்த அந்தணர் தொடங்கினார்.

அப்போது சாம கானம் செய்பவராக நியமிக்கப்பட்ட கோபிலர் தம்முடைய மூச்சை விட்டு சுரபங்கமாக அதனைச் செய்து வந்தார். வேண்டுமென்றே அவர் அப்படிச் செய்யவில்லை. வயதான காரணத்தாலும், உடல் நலம் சற்று பாதிக்கப்பட்டு இருந்த காரணத்தாலும் இடையிடையே அவருடைய மூச்சு சுரபங்கமாக வெளிப்பட்டது.

இதனை சரியாக புரிந்து கொள்ளாத தேவதத்தன் நான் புத்திரபேறுக்காக இந்த யாகத்தைச் செய்கிறேன். முனி சிரேஷ்டராக விளங்கும் நீங்கள் சாம கானத்தை இப்படி அமங்கலமாக செய்யலாமா என்று கேட்டான். அதோடு அவன் நிற்கவில்லை. தேவ கானத்தை இப்படி உச்சரிப்பது மூடத்தனம் அல்லவா...? என்றும் சொல்லிவிட்டான்.

தன்னை இவ்வாறு அவன் அவமதித்தும் கோபிலர் கோபம் கொண்டார். உஸ்வாச ரூபமாய் இருக்கிற பிராண வாயு எந்தப்பிராணிகளாலும் அடக்க முடியாத ஒன்று. இயற்கையாக இருப்பதை எவராலும் தடுக்க முடியாது. சிறிது தளர்வுற்றிருக்கும் என்னிடத்தில் ஏற்பட்ட ஸ்வரபங்க விடயத்தில் அளவுக்கு மீறி நீ என்னை அவமதித்துவிட்டாய். அதனால் உனக்குப் பிறக்கப்போகும் புத்திரன் மூடனாகவும், முரட்டுத்தனம் உள்ளவனாகவும், ஊமையாகவும் பிறக்கக் கடவது என்று சாபம் தந்தார்.

இதைக்கேட்ட தேவதத்தன் அதிர்ச்சியடைந்தான். அறியாமல் நான் செய்த பிழையை பொறுத்தருளவேண்டும் என்று அந்த கோபிலரின் திருவடிகளில் விழுந்து மன்னிப்புக் கோரினான். இதன்காரணமாக அந்த கோபிலரின் மனம் இளகிவிட்டது. நீ துக்கப்பட வேண்டாம். என் சாபத்தின்படி மூடனாய்ப்பிறக்கும் உன் பிள்ளை ஒரு குறிப்பிட்ட காலம் வந்தும் வித்துவானாக மாறுவான் என்று சாபவிமோசனம் தந்தார். அதனால் அவன் மகிழ்ச்சியடைந்தான். அவன் நடத்திய யாகம் நிறைவடைந்தது. அவனுடைய மனைவி ரோகிணி கர்ப்பம் தரித்து ரோகிணி நட்சத்திரத்திலேயே ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அந்தப்புத்திரனுக்கு தேவ முறைப்படி நல்ல கடாக்ஷத்தில் சுல லக்கினத்தில் ஜாதகமும் உதத்தியேன் என்ற பெயரும் சூட்டப்பட்டது.

அவனுக்கு வயது எட்டு வந்தபோது உபநயன சடங்கை தேவதத்தன் சிறப்பாகச் செய்தான். உபநயன விரதத்திலிருந்து அக்குமாரனுக்கு முன்னதாக கற்பிக்க வேண்டிய சந்தியா வந்தனத்துக்குரிய அத்தியாயனத்தை கற்பிக்க முயன்றும் அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவன் மூடனாக இருந்தான். கோபிலருடைய சாபம் காரணமாக அவன் மூடனாக இருப்பதை அறிந்தும்கூட புத்திரப் பாசத்தின் காரணமாக பல வழிகளில் அவனுக்கு கல்வி கற்பிக்க பெருமுயற்சிகளை தேவதத்தன் எடுத்தான்.

பிள்ளை மூடனாக இருந்ததால் உறவினர்கள் ஏளனமாகப் பேசலாயினர். ஒருவன் எவ்வளவு செல்வம் படைத்திருக்கிறான் என்று எவரும் அறிய முடியாது. ஆனால் ஒருவனுக்கு வாரிசு எப்படி அமைந்திருக்கிறது? என்பது எளிதில் எல்லோருக்கும் தெரிந்துவிடும். எனவே நெடுங்காலமாக புத்திரப்பேறின்றி வருந்திய தேவதத்தன் பிறந்த பிள்ளை மூடனாக இருந்ததால் மிகவும் வருந்தினான். புத்திரனால் ஒருவன் கௌரவத்தை அடைகிறான். நல்ல துணையை அடைகிறான். குடும்பத்தலைவன் என்ற நிதியில் தனிப்பட்ட செல்வாக்கையும் பெறுகிறான். ஆனால் புத்திரன் மூடனாக இருந்தால் இந்தப்பெருமைகள் அழிவதோடு மற்றவர்களின் இகழ்ச்சிகளுக்கும் ஆளாக வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்படுகிறது. இதனையெல்லாம் நன்கு அறிந்த தேவதத்தன் எப்படியாவது தன் மகனைக் கல்வியாளனாக மாற்றிவிட வேண்டும் என்று தீவிரமாக முயன்றான்.

ஆனால் கோபிலரின் சாபம் காரணமாக அவன் முயற்சி பலிக்கவில்லை. எந்த பாடமும் அவன் மனதில் பதியவில்லை. எவ்வளவு முயற்சி செய்து கற்பித்தும்கூட அவன் மூடனாகவே இருந்தான். 12 வருடங்கள் கடுமையாக முயன்றும்கூட எந்த மாற்றமும் அவனிடம் ஏற்படவில்லை. அதைக்கண்டு பெரிதும் வருந்தினான் தேவதத்தன். அவனுடைய பிள்ளை மூடனாக இருப்பதை அறிந்த அயலில் இருப்பவர்கள் அவனை இகழத் தலைப்பட்டார்கள். அதனால் புத்திரன் மீது பெற்றோருக்கு வெறுப்பு உண்டாகியது.

தன்னைப்பெற்றவர்களே வெறுத்துப் பேசுவதைக் கண்ட அவன் வீட்டில் இருக்க விரும்பவில்லை. அங்கிருந்து வெளியேறி காட்டை அடைந்தான். கங்கா நதி தீரத்திற்கு அருகில் ஒரு ஆச்சிரமத்தை அமைத்துக்கொண்டு தன்னந்தனியாக வாழத் தலைப்பட்டான். அங்கிருந்தபடி பொய் சொல்வதில்லை என்கிற உறுதியான விரதத்தை அவன் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தான். மூடனாக இருந்த போதிலும் எவரிடமும் அவன் பொய்யான வார்த்தைகளைக் கூறாமல் இருந்ததால் மற்றவர்கள் அவனை சத்தியவிரதன் என்று பெயரிட்டு அழைத்தார்கள்.


இவையெல்லாம் புத்திர காமேஷ்டி யாகத்தை நடத்திய கோபிலரின் சாப விமோசனம் பிறப்பதற்கு ஏற்பட்ட ஆயத்தங்களாக விளங்கின என்று கூட சொல்லலாம். 'ஒரு மிருகத்தைப் போல் தன்னந்தனியாக இந்தக் காட்டில் எத்தனை காலத்துக்கு திரிந்து கொண்டிருப்பது? இது மூடத்தனமல்லவா....? என்றெல்லாம் நினைத்து அவன் வருந்தினான்.

தனக்கிருக்கும் மூர்க்கத்தன புத்தியின் காரணமாக வரவில்லை. தெய்வத்தின் காரணமாகவே ஏற்பட்டுள்ளது என்று அவன் புலம்பினான். இவ்வாறு 14 வருடங்கள் கழிந்தன. அந்தக்காலகட்டத்தில் ஒரு நாள் வேடனுடைய அம்பால் அடிபட்ட பன்றி ஒன்று அவன் இருக்கும் இடத்தில் வந்து விழுந்தது. அதன் உடம்பிலிருந்து இரத்தம் கொட்டியது. அந்தக் காட்சியைக் கண்ட சத்தியவிரதன் நடுக்கம் கொண்டான். கல்லாதவனை கவிச்சக்கரவர்த்தியாக மாற்றிய கருணைமிகு தேவியின் இந்த சரித்திரத்தை பக்தியுடன் கேட்பவர்கள் சகல செல்வங்களையும் பெற்று புகழோடு வாழ்வார்கள்.



[illegible] ரநாத் பரத்வாஜ் ஸ்வாமிகள்

# கோலாகலமான திறப்பு விழா கண்ட ஒஸ்மானியா கல்லூரி



நேற்று முன்தின தொடர்ச்சி....

எம்.எஸ்.எம்.இக்பால்

யாழ்.கே.கே.எஸ். வீதியில் அமைந்திருந்த 'வைத்திலிங்கம்' நிறுவனத்தினருடன் செய்த ஒப்பந்தத்தின்படி அந்த நிறுவனத்தினர் கட்டடத்தை அமைத்தனர். பல இடையூறுகளையும் துன்பங்களையும் விலகிக்கொண்டு 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக' கட்டடம் மேலெழத் தொடங்கியது. ஒஸ்மானியாக் கல்லூரிக்கு ஆரம்பத்தில் 'ஸாஹிராக் கல்லூரி என்ற பெயரே இருந்து வந்தது. 1962 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திலேயே 6 ஆம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களை ஸாஹிராக் கல்லூரியில் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

அந்தக்காலத்தில் அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்துக்கு கல்வி அமைச்சர் பதவியும் கிடைத்தது. ஆரம்பத்தில் கல்லூரியின் கட்டட வேலைகளுக்கு ஆலோசனைகளையும், உற்சாக மொழிகளையும் வழங்கிய அவருக்கு கல்வி அமைச்சர் பதவி கிடைத்தும் கல்லூரி மீது இருந்த அக்கறை பன்மடங்காகப் பெருகியது. கல்லூரியை அபிவிருத்தி செய்வதில் பெரும் பங்கு வகித்தார். அவர் கல்லூரிக்காகச் செய்த உதவிகளை எவராலும் மறக்கவோ, மறைக்கவோ முடியாது.

1963 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி யாழ். முஸ்லிம் சமூகத்துக்கு ஒரு நன் னாள். அன்றுதான் டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் ஸாஹிராக் கல்லூரி என்று நாமம் பூண் டிருந்த கல்லூரியை உத்தியோக பூர்வ மாகத் திறந்து வைத்தார்.

1963 ஆம் ஆண்டு பிறந்த கட்டடம் கல்லூரியாக மாறுவதற்கு ஆயத்தம் பூண்டது. அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு அமைச்சர்கள் பயணம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளும் சூழ்நிலை நிலவியபோதும் கல்வி அமைச்சர் டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் யாழ்ப்பாணம் ஸாஹிராக் கல்லூரியை ஆரம்பித்து வைப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வமாக பயணம் மேற்கொண்டனர்.

1963 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி யாழ்.முஸ்லிம் சமூகத்துக்கு ஒரு நன்னாள். அன்றுதான் டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் ஸாஹிராக் கல்லூரி என்று நாமம் பூண்டிருந்த கல்லூரியை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார். அவருடன் வர்த்தக அமைச்சராகப் பதவி வகித்த இலங்கரத்ன கலந்து கொண்டு திறப்பு விழாவைச் சிறப்பித்தனர்.

[illegible] மாணவர்கள், பெற்றோர்கள் [illegible] அரசியல் பிரமுகர்கள், பத்திரிகையாளர்கள் மத்தியில் திறப்புவிழா நிகழ்வும் கோலாகலமாக நடைபெற்றது. அந்தக்காலத்தில் யாழ்ப்பாணத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் அல்பிரட் துங்கராஜா துரையப்பாவும் இந்த விழாவில் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார்.

கல்லூரி மீது நல்லெண்ணம் வைத்து அதன் வளர்ச்சிக்கு ஒரு உந்து சக்தியாக அவர் விளங்கினார். விழாவன்று அவரது தந்தை காலமாகிவிட்ட போதும்கூட கல்லூரியின் நலன் கருதி திறப்புவிழாவில் கலந்து கொண்டு விழாவைச் சிறப்புறச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கல்லூரிக்கு 'ஸாஹிராக் கல்லூரி' என்று பெயரளவில் தீர்மானிக்கப்பட்டிருந்தும் அந்தத் திறப்பு விழாவின் போது டாக்டர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் இஸ்லாத்தின் மூன்றாம் கலிபா ஆகிய உஸ்மான் (ரலி) நினைவுபடுத்தி 'ஒஸ்மானியாக் கல்லூரி' என்ற பெயருடன் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

ஒஸ்மானியாக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதும் முதன்முதலில் ஜனாப் சீ.எம்.ஜிப்ரி அதிபர் பதவியை வகித்தார். அதிபர் உட்பட 7 ஆசிரியர்களும் நியமனம் பெற்றனர். ஆசாரியாஸ் பொன்னையா, பொ.சிவஞானசுந்தரம், எஸ்.ஸ்ரீ தர்மநாதன், ஜனாப் எம்.யூ.ஏ.கையூம், ஜனாப் எம்.ஐ.ஷாபி, ஜனாப் எம்.ஸீ.சலீம் ஆகியோர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றனர். முதல் நாளிலேயே 150 மாணவர்கள் வரை சேர்த்துக் கொள்ளப்பட்டனர். சில மாதங்கள் சென்றபின் கல்லூரிக்கீதம் தயாராகி விட்டது. கவித்துவ புலமை மிக்க ஆசிரியர் ஆசாரியாஸ் பொன்னையா கல்லூரி கீதத்தை இயற்றிக்கொடுத்தார்.

இந்தியாவின் தேசிய கீத இராகத்துக்கு அமைவாக 'வளர் கலை மாமதியேபடிவந் தாரகை வானக மேலொளி மல்க' என்று அமைக்கப்பட்டிருந்தது. அதன்பின்னர் ஒஸ்மானியாக் கல்லூரி படிப்படியாக வளர்ந்தது. கல்லூரியின் விஸ்தரிப்புக்காக அதன் சுற்றுவட்டாரத்தில் உள்ள காணிகளும் தென்னந் தோப்புகளும் பயன்படுத்தப்பட்டன. அந்த வகையில் எனது தாயாரின் (பரீத் றஸீனா) தென்னந்தோப்புக் காணியும் வீடும் கூட கல்லூரியின் விஸ்தரிப்புக்காகப் பயன்படுத்தப்பட்டன.

[வளரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தை புறந்தள்ள முயல்வது புத்திசாலித்தனம் ஆகாது



மூலம்: உபுல்ஜோசப் பெர்னாண்டோ (மவ்பிம)
■ தமிழில்: வீஎஸ்ரீ

சர்வதேசத்துக்குச் சவால் விடுக்கும் மஹிந்தவின் போக்கு எதிர்கால இலங்கை அரசியலில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது குறித்த ஒரு சிங்கள ஊடகவியலாளரின் பார்வை



2002ம் ஆண்டில் அவ்வேளைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் போர் தவிர்ப்பு ஒப்பந்தம் மேற்கொண்டு வன்னியில் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தியமை பிரபாகரனுக்கு சர்வதேச பிரபல்யத்தை ஏற்படுத்திய வேளையாக அமைந்தது.

2009 ஆம் ஆண்டில் போரில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த பின்னர் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய வேளை மஹிந்த ராஜபக்ஷவுக்கு சர்வதேச பிரபல்யத்தை ஏற்படுத்தி வைத்த சந்தர்ப்பமாகும்.

நாட்டின் வடபகுதியில் யாழ்.குடாநாட்டைத் தவிர ஏனைய பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்த நிலையில், சமாதானப் பேச்சுக்குப் பிரபாகரன் முன்வந்த நிலையில், தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு, சமஷ்டி முறை அரசியல் தீர்வொன்றை ஏற்குமாறு சர்வதேச சமூகம் பிரபாகரனுக்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தது. ஆயினும் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட அவர் முன்வந்தாரில்லை. ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான அரசு முன்னெடுத்த ஜெயசிகுரு இராணுவ நடவடிக்கையை முறியடித்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் ஆனையிறவு இராணுவத் தளங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றிய வேளையில் அரசுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு தீர்வொன்றை எட்ட முன்வருமாறு அவ்வேளைய வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் பிரபாகரனுக்கு அழைப்பு விடுத்தார். ஆயினும் அந்த ஆலோசனையைத் தானும் பிரபாகரன் ஏற்றுக்கொண்டாரில்லை. தமிழீழம் ஒன்றே அவரது கனவாக அமைந்திருந்தது. 2002 ஆம் ஆண்டின் போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தின் பின்னர் நோர்வே சமாதானப் பேச்சுவார்த்தையின்போது விடுதலைப் புலிகளது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், சமஷ்டி ஆட்சி முறையூடான தீர்வொன்றுக்கு இணக்கம் தெரிவிக்க முன்வந்த வேளையில் கூட பிரபாகரன் அதற்கு இணங்கவில்லை. அந்த நோர்வே சமாதானப் பேச்சுக்களின் போது ஆயுதப் போராட்ட வழி முறையைக் கைவிட்டு, செயற்பட முன்வருமாறு அந்த வேளைய அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஆம்ரேஜ் வலியுறுத்திய வேளையிலும் பிரபாகரன் அவரது கருத்துக்களுக்கு உடன்பட முன்வரவில்லை.

அதேவிதத்தில், 2009 ஆம் ஆண்டில் போரில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததன் பின்னர், வடக்கு கிழக்கு மாகாண சபையை நிறுவி தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்குமாறு சர்வதேச சமூகம் ஜனாதிபதி மஹிந்தவுக்கு அழுத்தம் கொடுத்தது. சர்வதேச சமூகம் வழங்கிய ஆலோசனையை ஜனாதிபதி மஹிந்த கணக்கில் எடுத்தாரில்லை. போரில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்துத் தாம் ஈட்டிக் கொண்ட வெற்றியின் பலனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, அன்றேல் அரசுக்கு எதிரான தமிழ்க் கட்சிகளோ அனுபவிக்க அனுமதிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த விரும்பவில்லை என்பதே உண்மை. ஒட்டுமொத்த நாட்டின் நிர்வாகத்தைத் தாம் கட்டிக் காக்க வேண்டுமானால் வடக்கு, கிழக்குப் பகுதிகளின் நிர்வாகமும் தனது அரசின் கீழேயே இருந்தாக வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த எண்ணினார்.

2002 ஆம் ஆண்டில் தமது ஆலோசனைகளை ஏற்றுச் செயற்பட மறுத்ததால் சர்வதேச சமூகம் பிரபாகரனையும் அவரது விடுதலைப் புலிகள் அமைப்பையும் சுற்றி வலை விரித்தது. நோர்வே சமாதானப் பேச்சுக்களின் பின்னர் இடம்பெற்ற டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை உணர்ந்த பிரபாகரன் மாநாட்டைப் புறக்கணித்ததுமட்டுமன்றி, சமாதானப் பேச்சுக்களையும் முறித்துக் கொண்டார்.

2009 ஆம் ஆண்டின் போர் வெற்றியின் பின்னரும் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள ஜனாதிபதி மஹிந்த முன்வராததால் அதிருப்தியுள்ள சர்வதேச சமூகம், மஹிந்தவுக்கு வலை விரிக்கும் நோக்குடன் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் ஊடாக போர்க் குற்றங்கள் குறித்து விசாரிக்க குழுவொன்றை நியமித்தது. 2009 ஆம் ஆண்டின் போர் வெற்றிக்குப் பின்னர் ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்த வேளையில் ஜனாதிபதி மஹிந்தவுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டிருந்தார். தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வை வழங்குதலும் அந்த ஒப்பந்தத்தின் ஒரு அம்சமாக அமைந்திருந்தது. அது 2002 ஆம் ஆண்டில் நோர்வே சமாதான மாநாட்டில் வைத்து அன்ரன் பாலசிங்கம் ரணிலின் அரசுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தை முற்றிலும் ஒத்ததொன்று. அதில் சமஷ்டி ஆட்சி முறையூடான தீர்வுக்கு ஒப்புதலளிக்கும் சரத்தும் இடம்பெற்றிருந்தது. ஆயினும் விடுதலைப் புலிகள் தரப்போ, ஜனாதிபதி மஹிந்தவோ வெவ்வேறு தரப்புகளுடன் மேற்கொண்ட ஒப்பந்தங்களை மதித்து அதற்கமையச் செயற்பட முன்வரவில்லை.

ஐ.நா. பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட போர்க் [illegible] வுக்கு ஜனாதிபதி [illegible] செயற்பட்டாரில்லை. அதனையடுத்து சர்வதேச சமூகம் 2012 ஆம் ஆண்டின் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக பிரேரணையொன்றை முன்வைத்து நிறைவேற்றியது. அதேபோன்று இவ்வாண்டில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மாநாட்டிலும் மற்றொரு பிரேரணையை முன்வைத்து நிறைவேற்றியுள்ளது. ஆனால் ஜனாதிபதி மஹிந்தவோ சர்வதேச சமூகத்தின் இத்தகைய அழுத்தங்கள் எதற்கும் மசிந்து கொடுக்காது இருந்து வருகிறார். அன்று பிரபாகரன் கூட அவ்விதமே நடந்துகொண்டார்.

2005 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் மக்களை வாக்களிக்க பிரபாகரன் அனுமதிக்கவில்லை. 2005 ஆம் ஆண்டில் லக்ஸ்மன் கதிர்காமரின் படுகொலையையடுத்து ஐரோப்பிய சமூகம் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்து பிரபாகரனை ஒடுக்க முயற்சித்த போதும் பிரபாகரன் மென்மேலும் பலமடைந்தார். அந்த வகையில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தமது இராணுவ பலம் இருக்கும்வரை 'சர்வதேச சமூகத்தால் விடுதலைப் புலிகள் அமைப்பை ஒடுக்கிவிட இயலாதென பிரபாகரன் திடமாக நம்பினார். சர்வதேச சமூகம் எம்மீது வலைவிரித்து எம்மை ஒடுக்க முயற்சிக்கிறது. அத்தகைய அச்சுறுத்தல்களுக்கு நாம் ஒருபோதும் அடிபணியப் போவதில்லை" எனப் பிரபாகரன் அறைகூவல் விடுத்து வந்தார்.

> போரில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்துத் தாம் ஈட்டிக் கொண்ட வெற்றியின் பலனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, அன்றேல் அரசுக்கு எதிரான தமிழ்க் கட்சிகளோ அனுபவிக்க அனுமதிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த விரும்பவில்லை என்பதே உண்மை.

அதே விதத்திலேயே கடந்த ஆண்டில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணை நிறைவேற்றப்பட்டதையடுத்து "சர்வதேச சமூகம் எமது வெற்றியைப் பின்தள்ள முயற்சிக்கிறது. அதற்கு நாம் ஒருபோதும் தலைதாழ்த்தப் போவதில்லை" என ஜனாதிபதி வீராவேசமாகக் கருத்து வெளியிட்டிருந்தார். அந்த வகையில் நாட்டு மக்களது ஆதரவு தமக்கு இருக்கும்வரை சர்வதேச சமூகத்தால் இலங்கை அரசை ஆட்டிப்படைக்க இயலாதென ஜனாதிபதி மஹிந்த நம்புகிறார்.

"விடுதலைப் புலிகள் அமைப்பு சமாதான [illegible] ஒத்துழைக்கத் தவறு [illegible] இராணுவத் தரப்புக்கு முகம் கொடுக்க நேருமென எச்சரிக்கிறோம். போரொன்றில் ஈடுபட நேர்ந்தால் விடுதலைப் புலிகள் அதற்காக பெரும் நட்டஈடு செலுத்த வேண்டி நேரிடுமென அமெரிக்கா எச்சரிக்கிறது" என 2006 ஆம் ஆண்டில் அவ்வேளைய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் லன்ஸ்டயிட் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

ஆயினும் அமெரிக்கத் தூதுவரது அந்த எச்சரிக்கையைப் பிரபாகரன் கொஞ்சமேனும் பொருட்படுத்தவில்லை. இதனால் அதிருப்தியுற்ற அமெரிக்கா விடுதலைப் புலிகளுக்கு நிதி மற்றும் ஆயுத உதவிகள் கிடைப்பதை நிறுத்தி விடுவதில் வெற்றி கண்டது. அதேபோன்று ஆசியப் பிராந்திய நாடுகளிலிருந்து விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆயுதங்களை ஏற்றி வரும் கப்பல்கள் குறித்து விபரங்களை இலங்கை அரசின் புலனாய்வுத்துறைக்கு வழங்கி இலங்கை கடற்படை மூலம் அந்தக் கப்பல்களை நடுக்கடலில் வைத்துத் தாக்கி யழிக்கவும் அமெரிக்கா உதவி புரிந்தது. இத்தகைய இரகசியமான நடவடிக்கைகள் மூலமே அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகம் பிரபாகரனின் முதுகெலும்பை உடைப்பதில் வெற்றி கண்டன.

தற்போதைய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரான பெண்மணி, பிரதம நீதியரசருக்கு எதிராக இலங்கை அரசு குற்றவியல் பிரேரணையைக் கொண்டு வந்த வேளையில் ஜனாதிபதி மஹிந்தவுக்கு அபாய அறிவிப்பொன்றை விடுத்திருந்தார். சர்வதேச சமூகத்தின் அழுத்தத்துக்குச் செவி சாய்க்காதுவிட்டால், இலங்கையில் சர்வதேச சமூகம் தனது முதலீடுகளைக் குறைத்துக் கொள்ளும் என்பதே அது.

இந்த நிலையில், அண்மையில் அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஜோன் கெர்ரி, அமெரிக்கா இலங்கைக்கு வழங்கிவரும் உதவிகளை இருபது வீதத்தால் குறைக்க வேண்டுமெனச் சிபார்சு செய்துள்ளார். ஆனால் மஹிந்த அரசோ, தனது வழமையான பாணியில் அதனால் இலங்கைக்கு எத்தகைய பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என மார்தட்டிக் கொள்கிறது.

இலங்கையில் மொத்த ஏற்றுமதியில் அறுபது சதவீதத்துக்கும் மேலாக அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகிறது.

அமெரிக்கா உட்பட ஐரோப்பிய சங்கம் இவ்விதம் இலங்கைக்கான தமது உதவிகளைக் குறைத்து, இலங்கையின் உற்பத்திப் பொருள்களுக்கு தமது நாடுகளில் இறக்குமதித் தடை விதித்தால் இந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு உடைபட நேரிடும் என்பதே யதார்த்தம்.

அத்தகையதொரு நிலையில் ஜனாதிபதி மஹிந்தவின் அரசியல் முதுகெலும்பும் உடைபட நேரிடும். நூலிழை போன்று தோற்றமளிக்கும் நாட்டின் எதிரணி, மலை போன்று உருமாறி நாட்டின் பொதுமக்களை ஒன்று திரட்டிப் பலமானதொரு அணியாக அவ்வேளையில் உருவாக இடமுண்டு. அவ்வித நிலையில் ஜனாதிபதி மஹிந்தவின் அதிகாரமும் பிரபல்யமும் கீழ் நோக்கிப் பயணிக்க ஆரம்பிக்கும் என்பது நிச்சயமானதொன்றே. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021 2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விநியோக முகவர்கள்: 'சதா பொன்ஸ்' மாலுசந்தி, அல்வாய்: 021 226 3206, 'நெல்லியடி மொடேர்ன் ஸ்ரோர்ஸ்' பஸ் நிலையம், நெல்லியடி: 021 490 1519, ஜோதி புக் சென்ரர் மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' கண்டி வீதி, மீசாலை தெற்கு: 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' தாழ்வுபாடு வீதி, மன்னார்: 0752824476, 'கொடிகாமம் அருள்நாயகி' பஸ் நிலையம், கொடிகாமம்: 0774937585, 'கோபி எலெக்ட்ரிசிற்றி' முல்லைத்தீவு நகர்: 0779598917, 'அன்பரசன்' சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான்: 0775035571.

# நீதியின் இரு தராசுகள்

பாகிஸ்தான் சிறைக்குள் இருபத்தி இரண்டு வருடங்களாக அடைபட்டுக் கிடந்த சரப்ஜித் சிங்கின் உயிர் நேற்று காலனால் பறித்தெடுக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டு சட்டவிரோதமாக பாகிஸ்தானுக்குள் நுழைய முயன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சரப்ஜித் சிங் பாகிஸ்தான் படைகளால் பிடிக்கப்பட்டார். பாகிஸ்தானில் நடைபெற்ற பல்வேறு குண்டு வெடிப்புகளுக்கு சரப்ஜித் சிங்கே காரணம் என்று அடுக்கடுக்காக குற்றங்கள் புனையப்பட்டன. நீதியின் தராசு ஒருபக்கமாக சாய்ந்திருக்க, சரப்ஜித் சிங்கின் வாக்குமூலத்தை கவனத்தில் எடுக்காமல் அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. ஆயினும் இந்திய அரசின் அழுத்தம் காரணமாக அது உடனடியாக நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையில் சரப்ஜித் சிங்கின் மேன்முறையீடுகளும் நிராகரிக்கப்பட்டு அவரின் மரணதண்டனை உறுதி செய்யப்பட்டது. இறுதி முயற்சியாக பாகிஸ்தான் ஜனாதிபதிக்கு கருணைக் கோரிக்கை ஒன்றை சரப்ஜித் சிங் அனுப்பி வைத்தார். அதன் பின்னர் ஒருநாள் "சரப்ஜித் சிங்கின் மரண தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டுள்ளது. அவரை இந்திய அரசிடம் ஒப்படைப்பது குறித்தும் சாதகமாகப் பரிசீலித்து வருகிறோம்" என்று பாகிஸ்தான் அரசு அறிவித்தது. இந்த அறிவிப்பைக் கேட்ட மாத்திரத்திலேயே சரப்ஜித் சிங்கின் குடும்பத்தார் அகமகிழ்ந்தனர். தமது வேண்டுதல்கள் நிறைவேறிவிட்ட ஆனந்தத்தில் துள்ளிக்குதித்தனர். ஆனால் இறுதியில் சரப்ஜித் சிங்கிற்குப் பதிலாக வேறொருவரை விடுவித்து தனது குள்ளநரிக் குணத்தை வெளிப்படுத்தியது பாகிஸ்தான். மீண்டும் சரப்ஜித் சிங்கின் சார்பில் கருணைமனு அனுப்பப்பட்டது. இந்த நிலையில் தான் அண்மையில் அவர் சிறைச்சாலைக்குள் சக கைதிகளால் தாக்கப்பட்டு கோமா நிலைக்குச் சென்றார். சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று அதிகாலையில் உயிர் துறந்தார். சர்வதேச அமைப்புகள், இந்திய அரசு என்பவற்றின் அழுத்தம் காரணமாக சரப்ஜித் சிங்கை விடுவிக்க வேண்டிய இக்கட்டான நிலையைத் தவிர்ப்பதற்காக வேண்டுமென்றே பாகிஸ்தான் அரசு சக கைதிகளைத் தூண்டிவிட்டு அவரைக் கொன்றுவிட்டதாக இந்திய மக்கள் ஆவேசப்படுகின்றனர். 22 வருடங்களாக அவரைச் சிறையில் வைத்திருந்ததே ஒரு தண்டனைதான். இந்த நிலையில் அவரது மரணத்துக்கு பாகிஸ்தான் அரசு பதில் சொல்லியே ஆகவேண்டும் என்று உணர்ச்சிப்பிழம்பாக கொந்தளித்துள்ளார் இந்தியப் [பொம்மைப்] பிரதமர் மன்மோகன்சிங்.
சரப்ஜித் சிங் குற்றவாளியா இல்லையா என்பது பற்றிய விவாதங்களுக்கு அப்பால் அவரை 22 வருடங்கள் சிறையில் அடைத்த பின்னும் இன்னொரு தண்டனை தேவையா? என்பதே அவர் மரணம் அடைவதற்கு முன்னர்வரை இந்திய அரசு பாகிஸ்தானைப் பார்த்துக் கேட்ட கேள்வி. இந்தக் கேள்வியில் நியாயம் இருக்கவே செய்கிறது. ஆனாலும் இதே சரப்ஜித் சிங்கைப் போன்று ராஜீவ் காந்தியை கொன்றார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு 20 வருடங்களுக்கு மேலாக சிறையில் வாடும் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகிய மூவருக்கும் இதே நீதியின் தராசு கொண்டு, சரியான தீர்ப்பை வழங்க ஏன் இந்தியா பின்னடிக்கின்றது. இவர்களுக்கு ஒரு தராசு? சரப்ஜித் சிங்கிற்கு இன்னொரு தராசா? நீதி தேவதை நாணித் தலைகுனிகிறாள்.

# எப்பதான் வருமோ..?

■ தர்சா.ஜோ

நான்கு கிராமங்களையும் 5000இற்கு மேற்பட்ட மக்களையும் உள்ளடக்கிய குமுழமுனை கிராமம் போரின் வடுக்களிலிருந்து துளிர்க்க ஆரம்பித்துள்ளது. எனினும் அந்த மக்களுக்கு இப்பொழுதும் போக்குவரத்து வசதியில் சிக்கல் தலைதூக்கியுள்ளது.
இந்தக் கிராமத்துக்கான தேவைகள் பெருமளவில் பூர்த்தி செய்யப்படாததாகவே காணப்படுகின்றன. தாம், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, வங்கிச் சேவை என பல நிலைகளிலும் பின்தங்கியுள்ளதாக இந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

### போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வு இல்லை

இது குறித்து கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் மயூரன் இரத்தினராசா தெரிவிக்கையில் "இந்தப் பகுதிக்கான அரச பஸ் சேவை இல்லாத காரணத்தினால் இங்கு வாழும் மக்கள் போக்குவரத்துப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர். பல உயர்மட்டக் குழுக்களிடம் மக்களின் போக்குவரத்துப் பிரச்சனையை தீர்க்க உதவுமாறு கோரிக்கையும் விடுத்தோம். அதன் பிற்பாடு 2012.01.10 அன்று குமுழமுனை வீதிக்கான பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் எவ்வித முன்னறிவித்தல்களும் இன்றி மூன்று நாள்களில் அந்தச் சேவை நிறுத்தப்பட்டது. அதன் பின்னரும் பலரிடம் கோரிக்கைகளை முன்வைத்தோம். அதன் பிற்பாடு 2012.03.12 அன்று மீண்டும் இப்பகுதிக்கான அரச பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டது. இருந்தும் பத்தே நாள்களில் மீண்டும் முன்னறிவித்தல்கள் எதுவுமின்றி நிறுத்தப்பட்டது. இதனால் இந்தப்பகுதியில் வாழும் மக்கள் கடும் போக்குவரத்துப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர். குறிப்பாக உத்தியோகத்தர்கள் குறித்த நேரத்தில் பணிக்குச் செல்லமுடியாத நிலையும் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு நேரந்தவறிச் செல்லும் நிலையும் ஏற்பட்டுள்ளது" என்றார்.
நாட்டின் பல பாகங்கள் துரித கதியில் அபிவிருத்தியடைந்து வரும் நிலையில் முப்பது வருட கால போரின் முக்கிய களமான குமுழமுனை பிரதேசத்தின் போக்குவரத்து நிலைமை பின்தங்கிய நிலையில் இருப்பது கவலைக்குரியதே.

### இன்னமும் வீதிகளுக்கு அபிவிருத்தி இல்லை

அத்துடன் இப்பகுதி வீதிகளும் சரியான முறையில் செப்பனிடப்படாமல் காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். தண்ணீரூற்று தொடக்கம் அளம்பில் வரையான 14.5கி.மீ வீதிப் புனரமைப்பிற்கென ஒதுக்கப்பட்ட நிதியில் குறித்த வீதியைப் புனரமைக்காமல் கொக்குத்தொடுவாய் தொடக்கம் ஜனகபுரம் வரையான வீதி புனரமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இந்தப்பகுதி மக்கள் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் மேல் குற்றம் சாட்டுகின்றனர்.

### சேவையில் ஒரேயொரு தனியார் பஸ்; பாதிக்கப்படும் ஆசிரியர், மாணவர்

குமுழமுனை கிராமம், முறிப்பு தமிழ் வித்தியாலயம், குமுழமுனை மகாவித்தியாலயம் மற்றும் அளம்பில் றே.க.த.க பாடசாலை போன்ற பாடசாலைகளை உள்ளடக்கியுள்ளது. இந்தப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களும் கற்பிக்கும் ஆசிரியர்களும் பாடசாலைகளுக்குத் தாமதித்துச் செல்லும் நிலை தோன்றியுள்ளது.
இது குறித்து குமுழமுனை மகாவித்தியாலய அதிபர் மயில்வாகனம் காமலகாந்தனிடம் கேட்டபோது "குமுழமுனைப் பிரதேசம் வடக்கில் பெயர் பெற்ற பெரிய கிராமம். ஆனால் இங்கு போக்குவரத்து வசதிகள் போதியளவில் இல்லை. குறிப்பாக அரச பஸ் சேவை முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒரேயொரு தனியார் பஸ் சேவையே நடைமுறையில் உள்ளதால் மாணவர்களும் ஆசிரியர்களும் பாதிக்கப்படுகின்றனர். சுமார் 585 மாணவர்களும் 50 ஆசிரியர்களும் இதனால் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளிடம் முறையிட்ட பின்னர் ஆரம்பிக்கப்பட்ட அரச பஸ் சேவை முன்னறிவித்தல் எதுவுமின்றி நிறுத்தப்பட்டது. இந்தப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் வெளிமாவட்ட ஆசிரியர்களும் கடமையாற்றுகின்றனர். அவ்வாறு வெளிமாவட்டத்திலிருந்து வந்து கற்பிக்கும் ஆசிரியர்கள் வார இறுதியில் சொந்த ஊர்களுக்குச் சென்று மீண்டும் திங்கட்கிழமை பணிக்குத் திரும்புவது வழமை. ஆனால் பஸ் சேவையில் ஏற்பட்டுள்ள தடங்கல் நிலையினால் திங்கட்கிழமை காலையில் பணிக்குத் திரும்ப வேண்டிய ஆசிரியர்கள் மதியமே வரக்கூடியதாக உள்ளது. அத்துடன் பாடசாலையில் கல்விகற்கும் தரம் 1-5 மாணவர்கள் காலைவேளையில் மோட்டார் சைக்கிள், சைக்கிள், டிராக்டர் வண்டியில் பயணம் செய்வோரை இடைமறித்து தம்மையும் அழைத்துச் செல்லும்படி கேட்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இது விரைவில் தீர்க்கப்பட வேண்டும். இல்லையெனில் இந்த நிலைமையால் பல மாணவர்களது கல்வி நிலை பின்தள்ளப்படும்" என்றார்.



### அரசுக்கு இலாபம் இல்லை அதனால் பஸ் சேவை இல்லை

முல்லைத்தீவு மாவட்ட இலங்கை போக்குவரத்து சபை முகாமையாளர் கந்தப்பிள்ளை சிறீநிவாசன் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் "பஸ்ஸுக்கான டீசல் காசுகூட கிடைக்காத வீதிக்கு எதற்காக அரச பஸ் சேவை நடைமுறைப்படுத்த வேண்டும்? மக்கள் சேவை மகேசன் சேவை' என்பதெல்லாம் தற்காலத்திற்கு பொருத்தமற்றது. அரசுக்கும் வருமானம் முக்கியம். பெரிய நஷ்டத்தில் அரச பஸ் சேவையை நடைமுறைப்படுத்த முடியாது. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்றவை மக்களுக்கு முக்கியம் தான். ஆனால் ஓரளவு இலாபமாவது கிடைக்கவேண்டும். தற்போது இவ் வீதிக்கு ஒரு தனியார் பஸ் சேவையில் ஈடுபடுகின்றது. குமுழமுனை மக்கள் தனியார் பஸ்ஸில் பயணம் செய்வதனால் அரச பஸ் சேவை தேவையற்றதாகவே இருக்கின்றது. இந்த வீதிக்கு அரச பஸ் சேவை நடைமுறைப்படுத்த வேண்டுமானால் தனியார் சேவையை நிறுத்துங்கள்" என்றார்.
"வருமானம் இல்லாததே அரச பஸ் சேவை இடம்பெறாததற்கு காரணம். இதில் குறிப்பிடத்தக்க வேறு காரணங்கள் இல்லை. உண்மை என்னவெனில் டீசல் பணத்தினைக் கூட எங்களால் இந்த வீதிக்கான சேவையில் பெறமுடியவில்லை. நிலைமை இப்படி இருக்க எங்களால் இந்தப்பகுதி அரச பஸ் சேவை தொடர்பாக எந்த முடிவும் எடுக்க முடியாது" என வடபிராந்திய போக்குவரத்து சபை முகாமையாளர் அஸ்ரப் தெரிவித்துள்ளார்.
குமுழமுனை மக்கள் போரின் வடுக்களிலிருந்து மீளும் தருணத்தில் அவர்களுக்கான தேவைகள் அரசினால் மறுக்கப்படுவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதற்கு ஒப்பானதாகவே கொள்ளத்தக்கது. ★

> குமுழமுனைப் பிரதேசம் வடக்கில் பெயர் பெற்ற பெரிய கிராமம். ஆனால் இங்கு போக்குவரத்து வசதிகள் போதிய அளவில் இல்லை. குறிப்பாக அரச பஸ் சேவை முற்றாக நிறுத்தப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
கதிரவேலு கந்தையா
(இரத்தினம் மெக்கானிக்)



மலர்வு
08★07★1947
உதிர்வு
21★04★1998

ஆண்டுகள் பதினைந்து உருண்டோடிப் போனாலும்
அன்புத் தெய்வத்தின் நினைவுகள் மறையாது
ஈண்டு உங்கள் நினைவுடனேயே
இவ்வுலகில் நாங்கள் வாழ்கின்றோம்
மாண்டு நீங்கள் போனாலும் மறக்கமுடியுமோ?
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.
குடும்பத்தினர்.

# அங்கீகாரம் பெற்ற இடங்களில் மட்டுமே இனி ஓட்டோக்கள் தரிக்க முடியும்

சாரதிகளுக்கு சீருடை, மீற்றர் கட்டாயம் என யாழ்.மாநகர சபை அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 4

யாழ்.மாநகர சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஓட்டோ தரிப்பிடங்களில் மட்டுமே இனி ஆட்டோக்கள் தரித்து நின்று பயணிகள் சேவையில் ஈடுபட வேண்டும். இந்த நடைமுறை எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றது. என யாழ்.மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக யாழ்.மாநகர நகரசபை முதல்வரின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

★சேவையில் ஈடுபடும் அனைத்து ஓட்டோக்களும் ஓட்டோச்சங்கத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும். அதற்குரிய 'ஸ்ரிக்கர்' ஒட்டப்பட வேண்டும்.

★ஓட்டோக்களில் மீற்றர் பொருத்தி இருத்தல் வேண்டும்.

★சீருடை (யூனிபோம்) இல்லாத ஓட்டுநர்களுக்கு ஓட்டோ செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

★ஓட்டோ சங்கத்தின் யாப்பு விதிக்கும் அறிவுறுத்தலுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட விடயங்களில் கட்டுப்பட்டு நடக்காத ஓட்டோக்கள் மீது யாழ். மாநகர சபை விதி ஒழுங்குபடுத்தும் பணியாளர்களாலும், தேவைப்படும் பட்சத்தில் போக்குவரத்துப் பொலிஸாரின் உதவியுடனும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதல்வர் அறிவித்திருக்கிறார். (ஒ-100)

## ரூ.20 ஆயிரம் கொடுப்பனவு

20 ஆயிரம் ரூபா கொடுப்பனவை இதுவரை பெற்றுக் கொள்ளாத குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன

தென்மராட்சி,மே 4

தென்மராட்சி பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினரால் வழங்கப்படும் 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவை இதுவரை பெற்றுக் கொள்ளாத குடும்பங்களுக்கு நேற்று பிரதேச செயலகத்தில் வைத்து தூதுவராலய அதிகாரிகளால் வழங்கப்பட்டன. (ஒ-9)

## 350 மலசல கூடங்களை நெடுந்தீவில் அமைக்க திட்டம்

யாழ்ப்பாணம்,மே 4

சமூக மட்டத்திலான கிராம அபிவிருத்தி சுகாதாரத் திட்டத்தின் கீழ் 350 மலசல கூடங்களை அமைப்பது குறித்தும் இரணைமடு நீர் விநியோகம் தொடர்பாகவும் நேற்று வியாழக்கிழமை கலந்துரையாடப்பட்டது.

நெடுந்தீவு உதவி அரச அதிபர் ஆ.சிறீ தலைமையில் பொது நூலக மண்டபத்தில் இந்தக் கலந்துரையடல் இடம்பெற்றது.

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் இந்தத் திட்டத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்சியன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இரணைமடுத் தண்ணீர் பாஜ் மூலமே நெடுந்தீவு எடுத்து வரப்பட்டு விநியோகிக்கப்படும் என்று இதன் போது தெரிவிக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டே முன்னிலைப்படுத்தி இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும் எனக் கூறப்பட்டது. (த-7)

## தீவக பாடசாலைகளில் தொழில்நுட்ப வழிகாட்டல் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம்,மே 4

தொழில்நுட்ப வழிகாட்டலும் ஆலோசனையும் செயற்றிட்டம் நேற்று வியாழக்கிழமை அனலைதீவு, எழுவைதீவு பாடசாலைகளில் நடைபெற்றன. தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜோண் குயின்ரஸ் உட்பட வலய கல்விப் பணிமனை அதிகாரிகளும் அதில் கலந்துகொண்டனர்.

நேற்றைய செயற்றிட்டத்தில் ஐம்பதுக்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

தொழில்நுட்ப வழிகாட்டலும், ஆலோசனையும் செயற்றிட்டம் தற்சமயம் தீவுப்பகுதியில் உள்ள நாற்பது பாடசாலைகளில் நடைபெற்று வருகின்றது. (ஒ-7)

## திருட்டுப் போன குத்துவிளக்குகள்

ஏழாலை மயிலங்காடு கருணா கரப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான குத்துவிளக்குகள் இனம் தெரியாதவர்களினால் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பட்டப்பகல் வேளையில் இந்த துணிகரமான திருட்டு இடம் பெற்றுள்ளமை பற்றி சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

ஆலயத்தில் வைக்கப்பட்டு இருந்த ஐந்தடி உயரமான குத்து விளக்குகள் ஐந்து உட்பட சிறிய குத்துவிளக்கு கள் பலவும் திருடப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் இது வரை யாரும் கைது செய் யப்படவில்லை. (ந-86)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
24
01
1956

விண்ணில்
04
05
2012

அமரர் கணபதிப்பிள்ளை சந்திரசேகரம் (செல்வம்)
(கிளிநொச்சி இராமநாதபுரம்)

எம் குடும்பத்தின் ஒளி விளக்கே
ஆண்டு ஒன்று ஆனதப்பா ஆறவில்லை எங்கள் உள்ளம்
தத்தித்திரிந்த எம்மை வாழ்க்கைச் சிகரத்தில்
தாவி ஏற வைத்து விட்டு எங்கப்பா சென்றீர்கள்....
சிகரத்தின் உச்சியைத் தொடும் நிலைக்கு நாம் இன்று வந்துள்ளோம்
எம்மைப் பார்த்து அக மகிழ நீங்கள் இன்றி ஏங்கித் தவிக்கின்றோம்.
அன்றைய உங்களின் நேரிய வழிகாட்டலும்
இன்றைய உங்களின் ஆசீர்வாதமும் எங்கள் மீது உள்ளவரை
ஏறிக்கொண்டே இருப்போம் உங்கள் நினைவுடனே
உம் ஆத்மா சாந்தியடைய உம் நினைவுநாளில்
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மகன், மகள்மார்,
மருமகன்கள், மாமா, மாமி,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
உறவினர்கள்.

திருமதி ச.சந்திரசேகரம் (மனைவி),
நீர்வேலி.
(36973)(2.6.7)

12ஆம் ஆண்டு நினைவுகள்



அமரர்
நாகலிங்கம்
பொன்னம்பலம்
திதி:04.05.2013
மலர்வு
07.03.1920
உதிர்வு
18.04.2001

கால மாற்றத்தால் கரையாத நினைவுகளும்
மாறாத வாழ்வியலும் எம்முள் நிலைத்து
எந்நாளும் உமைப் பிரார்த்திப்போம்...

"கேணிக்கரை"
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
குடும்பத்தினர்.

ஆயுள்வேத வைத்தியர்களினதும் மக்களினதும் கவனத்திற்கு!

★ [illegible]
★ [illegible]

ஆயுள்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு!

★ [illegible]
★ [illegible]

சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்!

[illegible] "சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்"

நீங்கள் நாட வேண்டிய இடம்:
சிவா நறுமணப் பூங்கா
இல: 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திர சந்திக்கு அருகில்)
தொலைபேசி: 021 222 2567
(சி/7245)(45.6.7)

31 ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்
05.07.1950
மறைவு
21.03.2013

திருமதி மாணிக்கம்
செல்வமணி



மாணிக்க மனையினிலே
மங்காத ஒளி விளக்காய்
வழி நின்ற செல்வமணியே
தாங்காத துயரத்தை
தந்தெமக்குச் சென்றதேனோ
பொன்னான கண்ணீரை
காணிக்கை ஆக்குகின்றோம்
எம்மீது உயிர் கொண்ட
அன்னையே உங்களுக்கு!

உம் பிரிவால் துயர்கொள்ளும்
மாணிக்கம் (கணவர்),
பிள்ளைகள்: சுதாகரன், அனுதன்,
விஜிகரன், சுதனா.

தபாற்கந்தோர் அருகில்,
வீமன்காமம், தெல்லிப்பழை.
(சி/8457)(2.6.7)

துயர் பகிர்கின்றோம்



புன்னாலைக்கட்டுவன்,
சாவகச்சேரி சிவஸ்ரீ
து.கு. ஜெகதீஸ்வரக்
குருக்கள் அவர்களின்
அன்புப் பாரியார்
காலஞ்சென்ற
திருமதி
ஜெ.இராஜலக்ஷ்மி அம்மையாரின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் சொல்லொணாத் துயருறும் குருக்கள் மற்றும் பிள்ளைகளின் துயரிலும் பங்குகொள்கின்றோம்.

வேம்படி கோவில்,
சாவகச்சேரி.
வழிபடுவோர்.

பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.
தொடர்பு:- 0776333133, 0212230774


காணி விற்பனைக்கு

வளாக வீதி, திருநெல்வேலியில் மக்கள் வங்கிக்கு அண்மையில் 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 54 68 239

காணி விற்பனைக்கு

கோப்பாய், கோப்பாய் மத்தியில் நல்ல சுற்றாடலில் வீடு கட்டக்கூடிய 2 பரப்பு 12 குளி விஸ்தீரணமுடைய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0774285 777, 077 3561 322

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மப்பும் மந்தாரமான காலநிலை நிலவும்.

# யாழ். கள்ளைச் சந்தைப்படுத்த பண்டத்தரிப்பில் வெல்ல உற்பத்தி

யாழ்ப்பாணம், மே 4

யாழ்ப்பாணக் கள்ளைப் பதப்படுத்தி நாடளாவிய ரீதியில் சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாக பண்டத்தரிப்பில் வெல்ல உற்பத்தி நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் கே.குணரட்ணம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கனடா சர்வதேச அபிவிருத்தி நிதியத்தின் 21 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் புதிய வெல்ல உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனூடாக யாழ்ப்பாணத்தில் இருந்து பெறப்படும் கள்ளை பதப்படுத்தி வெல்லம் தயாரித்து, அதனை நவீன மயப்படுத்தி சந்தைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக சீவல் தொழிலாளர்கள் இதனூடாகப் பயன் பெறுவர். இதற்கான தொழில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒரு நாளைக்கு குறைந்து 1,200 போத்தல்கள் கருப்பணியை அடைப்பதற்கான வசதி வாய்ப்புக்களும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

கள் சீசன் குறைவடையும் காலத்தில் இந்த தொழில் வாய்ப்பு ஊடாக சீவல் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார். (ந-14)

# நல்லூரில் ஜுலையில் இசை நடன விழா



யாழ்ப்பாணம்,மே 4

பிருந்தா கானலய நிறுவனம் எதிர்வரும்ஜுலை மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை நல்லூரில் மாபெரும் இசை நடன விழாவை நடத்தவுள்ளதாக பிருந்தா கானலய நிறுவனத்தின் முதல்வர் திருமதி கோகிலத்துவனி விஜயராசா தெரிவித்தார். இது தொடர்பாக கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெற்றது.

யோகர் சுவாமிகளின் இடமான நல்லூரில் இந்த விழாவை நடத்துவது பொருத்தமானது. நிறுவனத்தினதும் இந்தியா உள்ளிட்ட வேறுசில நடுகளில் இருந்தும் வருகைதரும் கலைஞர்களின் பரதநாட்டிய இசை நிகழ்வுகள் இடம்பெறும். பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த கலைத்துறை சார்ந்தவர்கள் விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

மாவிட்டபுரம் இசைச் சக்கரவர்த்தி அமரர் என்.எஸ். உருத்திராபதி நினைவாக 1990 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிலையம் இசை, பரத நாட்டியக் கலைஞர்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டுவதாகவும் திருமதி கோகிலத்துவனி தெரிவித்தார். (ந-7)

## திருநாவுக்கரசர் குருபூசை

யாழ்ப்பாணம்,மே 4

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் ஏற்பாட்டில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை இன்று சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

★ ★ ★

திருநாவுக்கரசு நாயனார் குருபூசை இன்று சனிக்கிழமை மல்வம் உடுவில் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

நிகழ்வில் ஆலய பிரதம குருவின் ஆசியுரையும் திருநாவுக்கரசரின் சரியைப் பணி என்ற பொருளில் உளவளத் துணையாளர் நா.நவராஜின் சிறப்புரையும் இடம்பெறும். அத்துடன் இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. (ந-7)

★ ★ ★

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசையும், திருமுறை மனனப் போட்டி, பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடை பெறவுள்ளது. குருபூசை நிகழ்வில் அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து பரிசளிப்பு விழா இடம்பெறும். (ந)



உலக புத்தக தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலகத்தினால் முன்பள்ளி மாணவர்களிடையே போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் பங்குபற்றிய மாணவர்கள். (ந-14)

# நிலக்கடலை செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

வட்டுக்கோட்டை, மே 4

வட்டு கிழக்குப் பிரதேசத்தில் நிலக்கடலை செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

எட்டு ஏக்கர் நிலப் பிரதேசத்தில் இந்த நிலக்கடலை செய்கையில் 16 விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பயிர்கள் தற்போது நல்ல நிலையில் உள்ளன என்று கூறப்படுகிறது. விவசாய போதனாசிரியர் கவிதா ஜெயசீலனின் நடவடிக்கையை அடுத்து நிலக்கடலை செய்கையில் தாம் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

தற்போது பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படும் நிலக்கடலை செய்கை வெற்றியளிக்கும் பட்சத்தில் அடுத்த போகத்தில் அதிக நிலப் பரப்பில் செய்கை விரிவாக்கப்படும் என்று கூறப்பட்டது. (ம-17)

# ஆசிரியர்களுக்கான கல்விச் சுற்றுலா

வடமராட்சி,மே 4

வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு மலையகத்துக்கான கல்விச் சுற்றுலா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்விச் சுற்றுலாவில் பங்குபற்றும் ஆசிரியர்கள், உப-அதிபர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் நாளை 4 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுலாவில் பங்குபற்றும் அனைவரும் கலந்து கொண்டு பயண ஒழுங்குகளைத் தெரிந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.(ம-8)

# நல்லூர் பிரதேச செயலகத்தில் உலக புவி தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே 4

நல்லூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் உலக புவி தின நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு உதவிப் பணிப்பாளர் ச.ரவி, நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் எம்.சாந்தசீலன், யாழ். மாவட்ட செயலக சுற்றுச் சூழல் உத்தியோகத்தர் திருமதி.சசீலன் சுபாஜினி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சமூக விஞ்ஞானப் பிரிவு விரிவுரையாளர் எஸ். சத்தியகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்த நிகழ்வில் ''திண்மக் கழிவகற்றல்'' எனும் தலைப்பில் நல்லூர் பிரதேச சபை செயலாளர் எம்.சாந்தசீலனும் ''சுற்றாடல் பாதுகாப்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பங்கு'' எனும் தலைப்பில் சுற்றுச் சூழல் உத்தியோகத்தர் திருமதி ம.சுபாஜினியும் ''காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளலும் மனப்பாங்கு மாற்றமும்'' எனும் தலைப்பில் உதவிப் பணிப்பாளர் ச.ரவியும் உரை நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து ''காலநிலை மாற்றத்துக்கு காரணமாக அமைவது கிராமமே, நகரமே' எனும் தலைப்பில் பட்டிமன்றமும், பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. (ஒ-14-7)

# தாவடி மயான வீதி திருத்தப்படுமா?

வலி.தென்மேற்கு, மே 4

தாவடி இந்து மயானத்துக்குச் செல்லும் சகல வீதிகளும் மக்கள் நடமாட முடியாதவாறு குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன. இதனால் இந்தப் பகுதியில் வசிக்கும் விவசாயிகள் மட்டுமல்ல தகனக் கிரிகைகளில் கலந்து கொள்வதற்காக மயானத்தை நோக்கிச் செல்லும் மக்களும் பாதிக்கப்படுகிறார்கள்.

இந்த வீதியின் முக்கிய தேவை குறித்தும், அவல நிலை குறித்தும் பொதுமக்கள் சம்மந்தப்பட்டவர்களுக்குத் தெரியப்படுத்தியபோதும் எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

வலி.தெற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான பிரபல்யமாக விளங்கும் தாவடி இந்து மயானத்தைச் சுற்றி நான்கு வீதிகள் அமைந்துள்ளன. அத்துடன் மயானத்தைச் சுற்றியுள்ள பெரு நிலப்பரப்பில் மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

மேற்படி மயானத்தில் பூதவுடல்களைத் தகனம் செய்வதற்காக நான்கு திசைகளிலுமுள்ள சுதுமலை, தாவடி, இணுவில், கோண்டாவில் ஆகிய இடங்களிலிருந்தும் மக்கள் வருகிறார்கள். மயானத்தைச் சுற்றியுள்ள நான்கு வீதிகளும் நடமாட முடியாதவாறு சேதமாகியிருப்பதனால் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள். குறிப்பாக பூதவுடல்களைத் தோளில் சுமந்து வருபவர்கள் சொல்லொணாத் துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள்.

முக்கியமாக விவசாயிகளின் தேவைக்கும், மயானத்தின் தேவைக்கும் பயன்படுத்தப்பட்டுவரும் மேற்படி வீதிகளை சம்பந்தப்பட்டவர்கள் புனரமைப்பதற்கு முன்வர [illegible] தெரிவிக்கின்றனர். (ந-115)

## விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம் உயர்-தொழில் நுட்பவியல் நிறுவனம் 2002 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பருவகாலப் பரீட்சைகளில் சித்தியடையத் தவறிய மாணவர்களுக்கு பரீட்சை எழுதுவதற்கு சந்தர்ப்பம் ஒன்றை வழங்கியுள்ளது. பரீட்சை எழுதும் மாணவர்கள் தமது விண்ணப் [illegible].2013 ற்கு முன்னர் அனுப்பி [illegible] உதவிப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ந)

## கும்பாபிஷேகம்

காரைநகர் தோப்புக்காடு ஸ்ரீலக்ஷ்மி நாராயண சுவாமி, ஆஞ்சநேய சுவாமி ஆலய கும்பாபிஷேக பெருஞ் சாந்தி விழா நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது. கும்பாபிஷேக கிரியைகள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு எண்ணைக் காப்பு சாத்துதல் இடம்பெறும். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடர்:** உங்கள் செயலில் வேகம் அதிகரிக்கும். உறவினர், நண்பர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்து கொள்வார்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள்.

**இடபர்:** உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.

**மிதுனர்:** வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உதவி கேட்டு உறவினர்களும் தர்ம சங்கடத்துக்கு ஆளாக்குவார்கள். மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் சக ஊழியர்களைப் பற்றி குறை கூற வேண்டாம்.

**கடகர்:** பயணங்கள் சிறப்பாக அமையும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**சிங்கர்:** பிரபலங்கள் அறிமுகமாவார்கள். நீண்ட நாள்களாகபிற்போட்ட காரியங்கள் இன்று முடியும். வியாபாரத்தில் புதிய பொருள்கள் கொள்முதல் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்று கொள்வீர்கள்.

**கன்னி:** மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**நாளை**

சித்திரை-22 ஞாயிற்றுக்கிழமை 05.05.2013
திதி: ஏகாதசி இ. 04.39 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி இ. 04.14 வரை
சுபநேரம்: 08.56- 10.26 வரை
இராகுகாலம்: 04.26- 05.56 வரை

**துலார்:** திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். மனதுக்கு இதமான தகவல் வரும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**விருச்சிகர்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புதிய ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**தனுசர்:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் கடின உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**மகரர்:** எதிர்பார்த்தவை தாமதமாக முடியும். அடுத்தவர்களைக்குறை கூறிக்கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள். நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாக முடியும். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ளாதீர்கள்.

**கும்பர்:** திடீர் பயணங்கள் இருக்கும். உணவில் காரம், வாயு பதார்த்தங்களை தவிர்ப்பது நல்லது. சகோதர பகை வரக்கூடும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் மோதல்கள் ஏற்படும்.

**மீனர்:** தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உதவி கேட்டு வருபவர்களுக்கு உங்களாலானவற்றை செய்து கொடுப்பீர்கள். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 9 | | | |
| | 4 | 7 | | 5 | 2 | 8 | | |
| | | 2 | 8 | | 6 | | 3 | 5 |
| 5 | 7 | | | 9 | | 4 | 2 | 6 |
| | | 4 | | | | 9 | | |
| 9 | 1 | 6 | | 2 | | | 7 | 8 |
| 3 | 6 | | 9 | | 1 | 2 | | |
| | | 1 | 4 | 6 | | 5 | 9 | |
| | | | 2 | | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 7 | 3 | 9 | 5 | 8 | 6 | 1 |
| 9 | 3 | 5 | 8 | 6 | 1 | 2 | 4 | 7 |
| 1 | 8 | 6 | 7 | 4 | 2 | 3 | 5 | 9 |
| 5 | 4 | 8 | 9 | 7 | 3 | 1 | 2 | 6 |
| 7 | 6 | 3 | 2 | 1 | 8 | 5 | 9 | 4 |
| 2 | 9 | 1 | 6 | 5 | 4 | 7 | 3 | 8 |
| 6 | 5 | 9 | 1 | 2 | 7 | 4 | 8 | 3 |
| 3 | 1 | 2 | 4 | 8 | 6 | 9 | 7 | 5 |
| 8 | 7 | 4 | 5 | 3 | 9 | 6 | 1 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலகளவில் பிரபல்யமானது.


25% DISCOUNT for all Diplomas
இவ் விசேட சலுகை
மே மாதம் 15ம் திகதி வரை மட்டுமே...!
Discounted Programmes
DiTEC INTERNATIONAL Diploma in Information Technology
Duration : 4 months Course fee : Rs. 22,500/- Discount Price : Rs.17,875/-
DiCA Diploma in Computerized Accounting
Duration : 5 months Course fee : Rs. 19,000/- Discount Price : Rs.14,250/-
DiE Diploma in English Grammar | Spoken | Comprehension FREE DVD with Role-Play Videos
Duration : 4 months Course fee : Rs. 10,000/- Discount Price : Rs. 7,500/-
DiSE Diploma in Software Engineering
Duration : 6 months Course fee : Rs. 29,500/- Discount Price : Rs. 22,125/-
DiBM Diploma in Business Management
Duration : 4 months Course fee : Rs. 18,500/- Discount Price : Rs. 13,875/-
DiWE Diploma in Web Engineering
Duration : 6 months Course fee : Rs. 29,500/- Discount Price : Rs. 22,125/-
ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
No.137, K.K.S Road, Jaffna
021 222 4112
CALL : 077 309 9308

# விண்ணக வாழ்வில் 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
மேரிகொண்சேக்கா சூசைப்பிள்ளை



மண்ணுலகில்:- 14*08*1953
விண்ணுலகில்:- 04*04*2013

"நான் ஆண்டவருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன் அவரும் என் பக்கம் சாய்ந்து என் மன்றாட்டைக் கேட்டருளினார்"

அன்பின் மனைவியாக அரவணைப்பின் அன்னையாக
பண்பின் சகோதரியாக, பாசத்தின் உறைவிடமாக
உறவின் உத்தமியாக வாழ்ந்த – எம் அன்னையே
கண்ணீரில் எம்மை நனையவிட்டு – நீ
கல்லறையில் உறங்குவதேனம்மா – காலனவன்
தந்த கொடிய நோயால் – நீ கணப்பொழுதில்
எம்மைவிட்டுச் சென்றாயம்மா, காத்திருக்கிறோம் – நீ
மீண்டும் எமக்கு அன்னையாக வருவாய் என்று
ஓடி மறைந்ததுவோ – முப்பத்தொரு நாள்கள்
ஆறவில்லையம்மா எம் துயரம் – ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உம் நினைவுகள் எம்மை விட்டகலாதம்மா.

இவரது ஆன்ம இளைப்பாற்றுக்காக இன்று (04.05.2013) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குகொண்டு இவருக்காகப் பிரார்த்தித்து அதன்பின் மதியம் எமது இல்லத்தில் நிகழும் இரங்கல் பிரார்த்தனையிலும் மதிய போசன உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு உங்களை அன்போடு அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
T.P.0778098124

(3551)(6.67)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரங்கள் இல்லாத வடக்கு மாகாண சபை

## அரசுக்கு சிங்கள அமைப்புகள் 'செக்'

கொழும்பு, மே.4
வடமாகாணசபைத் தேர்தலுக்கு எதிராகத் தொடர்ச்சியாகப் போர்க்கொடி தூக்கி வந்த கடும்போக்குடைய சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம் தற்போது வடக்குத் தேர்தலுக்காக முக்கிய ஐந்து நிபந்தனைகளை விதித்துள்ளதுடன், அந்த நிபந்தனைகளை அரசு ஏற்கும்பட்சத்தில் தேர்தலுக்கு ஆதரவு வழங்கவும் முடிவுசெய்துள்ளது.

இவ்விவகாரம் சம்பந்தமாக ஜனாதிபதிக்கும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை சிங்கள தேசிய அமைப்புகள் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி வசந்த பண்டார நேற்றுமுன்தினம் மாலை உதயனிடம் உறுதிப்படுத்தினார்.

இதன் பிரகாரம் வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசமைப்பில் மாற்றம் கொண்டுவருவார் எனத் தாம் நம்புகிறார் எனவும் கலாநிதி வசந்த பண்டார கூறினார்.

★ பொலிஸ், காணி அதிகாரங்கள் நீக்கப்படவேண்டும்.
★ மாகாணசபைகள் இணைக்கப்படும் வகையில் மாகாணங்களுக்கிடையில் தீர்மானம் நிறைவேற்றப்படும் முறை இரத்துச் செய்யப்படுதல் அவசியம்.
★ பிரதேசசபைகளை மத்திய அரசு தனது கண்காணிப்பில் வைத்திருக்கவேண்டும்.
★ விசேட பாதுகாப்புச்சட்டமொன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்பவை உட்பட ஐந்து நிபந்தனைகள் இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிபந்தனைகளுக்கு அரசு சாதகமான பிரதிபலனை வழங்காத பட்சத்தில் அரசுக்கு எதிராகச் செயற்படவும் மேற்படி அமைப்புகள் முஸ்தீபு செய்துள்ளன. இவ்விவகாரம் தொடர்பில் உதயனுக்கு கருத்து வெளியிட்ட கலாநிதி வசந்த பண்டார மேலும் கூறியவை வருமாறு:-

நாம் முன்வைத்துள்ள ஐந்து நிபந்தனைகளை ஏற்று அவற்றைச் செய்து முடித்த பின்னரே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்குத் தேர்தலுக்கு கட்டளை பிறப்பிக்க வேண்டும். இந்த விடயத்தை ஜனாதிபதிக்கும் அறியப்படுத்தியுள்ளோம்.

மேற்படி நிபந்தனைகளை ஏற்று அதற்கேற்ற வகையில் திருத்தங்களைக் கொண்டுவராது அரசு வடக்குத் தேர்தலை நடத்துமானால் பாரிய விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும். அது தனி ஈழத்துக்கு வழிகோலும். ஜனாதிபதி எமது எதிர்பார்ப்பை வீணடிக்க மாட்டார் என நாம் நம்புகின்றோம். அந்த அடிப்படையில் வடக்குத் தேர்தலுக்கு முன்னர் அரசமைப்பில் மாற்றம் கொண்டுவரப்படும் என உறுதியாக நம்புகின்றோம்.

போரை வெற்றிகொண்டதனால்தான் ஜனாதிபதிக்கு மக்கள் செல்வாக்கு அதிகரித்தது. எனவே, அந்த போர் வெற்றியை ஜனாதிபதி காட்டிக்கொள்ளக்கூடாது. பிரிவினைவாதத்தை ஏற்படுத்தும் அதிகாரங்களை நீக்காது ஜனாதிபதி வடக்குத்தேர்தலை நடத்துவாரானால் அது போர் வெற்றியைக் காட்டிக் கொடுக்கும் செயலாகும். இந்தப் பொறிக்குள் ஜனாதிபதி விழமாட்டார் என நம்புகின்றோம். இது ஜனாதிபதிக்கும் நன்கு தெரியும்.

அதேவேளை, போராட்டத்தைக் காட்டிக்கொடுத்த கே.பி., தயாமாஸ்டர் போன்றோருக்குத் தமிழ் மக்கள் மதிப்பளிக்கமாட்டார்கள் என்பதை அரசு புரிந்துகொள்ளவேண்டும் - என்றும் அவர் கூறினார்.

## மலையகத்திலும் கிளைகள் பொதுபல சேனா விஸ்வரூபம்

கொழும்பு, மே.4
முஸ்லிம்களுக்கு எதிராகப் பிரசாரப் போரை முன்னெடுத்து நாட்டில் பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டிருந்த பொதுபலசேனா அமைப்பு, தற்போது மலையகத்தில் பல பாகங்களிலும் தமது கிளை அலுவலகங்களைத் திறப்பது தொடர்பில் தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

அதன்படி மலையகத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் காரியாலயங்களை அமைப்பதற்கு பொதுபலசேனா முஸ்தீபு செய்துள்ளது என அறியமுடிகின்றது. இதன் முதற்கட்ட நடவடிக்கையாக நுவரெலியாவில் வெகுவிரைவில் காரியாலயங்களைத் திறக்கும் நடவடிக்கையில் அவ்வமைப்பு தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்றும், நுவரெலியா மாவட்ட செயலகத்தில் இதற்கான அனுமதி கோரப்பட்டுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன் பின்னர் மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை உள்ளிட்ட மலையகத்தின் பல பாகங்களிலும் இவ்வாறு உப கிளைகள் திறக்கப்படவுள்ளன. குறித்த பகுதிகளில் வாழும் பௌத்த இளைஞர்கள் அவற்றின் செயற்பாட்டாளர்களாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அலுவலகங்கள் திறக்கப்படும் என்ற விடயத்தைப் பொதுபலசேனா அமைப்பு பகிரங்கமாக அறிவித்திருந்தாலும் மலையகத்தில் இத்திட்டத்தை அவ்வமைப்பு இரகசியமாக முன்னெடுப்பதானது பலத்த சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளன.

அமெரிக்காவுக்குச் சென்றுள்ள பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் எதிர்வரும் 10 ஆம் திகதி இரவு நாடு திரும்புவார். அவர் நாடு திரும்பிய கையோடு 11 ஆம் திகதி கேகாலையில் அவ்வமைப்பின் மக்கள் சந்திப்பு நடைபெறவுள்ளது. இதன்போது மலையகத்தில் அலுவலகங்கள் திறக்கப்படுவது சம்பந்தமாக ஞானசார தேரர் விசேட அறிவிப்பொன்றை விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைப்பின் செயலாளர் வெளிநாடு சென்றிருந்ததால் தனது நடவடிக்கைகளை பொதுபல சேனா அமைப்பு தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தது. எனினும், 11 ஆம் திகதி முதல் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

## ரூபா 36 ஆயிரம் கோடியை நாசம் செய்துள்ளது அரசு

### மக்களோ பட்டினியில் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, மே.4
பெரும் பொருளாதாரச் சுமையில் பாதிப்புறும் மக்களுக்கு அரசு நிவாரணம் வழங்காது, ஸ்ரீலங்கன் எயார் லைன் விமான சேவைக்கு மேலும் 10 விமானங்களைக் கொள்வனவு செய்வதற்காக 33 ஆயிரத்து 300 கோடி ரூபாவை நாசம் செய்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் எயார் லைன் விமான சேவை, மத்தல விமான நிலையம் ஆகியவற்றுக்காக அரசு 36 ஆயிரம் கோடி ரூபாவை நாசம் செய்துள்ளது. இதனால் நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் அரசுக்கு மாதாந்தம் 18 ஆயிரம் ரூபா வரி செலுத்தவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

குருநாகல், மாளிகாபிட்டிய மைதானத்தில் இடம்பெற்ற பொது எதிர்க்கட்சிகளின் மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போரால் பாதிப்படைந்த மக்கள் அதன் பின்னர் தாம் வாழ்வதற்கு ஏற்ற சூழல் நாட்டில் ஏற்படுத்தப்படும் என்றும், தமது பொருளாதாரம் உயர்த்தப்படும் என்றும் எதிர்பார்த்தனர். ஆனால், போர் இடம்பெற்ற காலத்தைவிட தற்போது நாட்டின் பொருளாதாரம் பேராபத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறது.


நாட்டு மக்கள் மீது அரசு சுமத்தியுள்ள பொருளாதாரச் சுமையால் அவர்கள் வாழ வழியின்றித் தவிக்கின்றனர். தமக்கு அரசிடமிருந்து நிவாரணம் கிடைக்கும் என்று எதிர் பார்த்தனர். ஆனால், அவை ஒன்றுமே நடக்கவில்லை.

நாட்டு மக்கள் துன்பங்களை அனுபவிக்கும் சூழ்நிலையில், அவர்களுக்கு மானியம் வழங்காமல், நட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் ஸ்ரீலங்கன் எயார் லைன் விமான சேவைக்கு மேலும் 10 விமானங்களைக் கொள்வனவு செய்வதற்காக 33 ஆயிரத்து 300 கோடி ரூபாவை அரசு செலவுசெய்துள்ளது.

கடந்த ஆண்டில் மட்டும் ஸ்ரீலங்கன் எயார் லைன் சேவை நிறுவனம் 2 ஆயிரம் கோடி ரூபா நட்டமடைந்துள்ளது. மேலும் 6 ஆயிரம் கோடி ரூபா கடனை வங்கிகளிலும் பெற்றுள்ளது. இவ்வாறு 8 ஆயிரம் கோடி ரூபா நட்டத்தில் இயங்கும் விமானசேவைக்கு விமானங்களைக் கொள்வனவு செய்து மக்கள் மீது அரசு மேலும் சுமையைச் சுமத்தியுள்ளது.

எயார்லைன் விமானசேவைக்கு 33 ஆயிரத்து 300 கோடி ரூபாவையும், மத்தல விமான நிலையத்துக்கு 2 ஆயிரத்து 700 கோடி ரூபாவையும் அரசு நாசம் செய்துள்ளது. இந்த 36 ஆயிரம் கோடி ரூபாவையும் அப்பாவி மக்கள்தான் செலுத்தவேண்டும். இதற்காக நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் மாதாந்தம் 18 ஆயிரம் ரூபா வரிப் பணம் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, மக்கள் மீது சுமை சுமத்தும் இந்த அரசை ஆட்சியிலிருந்து விரட்டியடிக்க வேண்டும். அதற்காகத்தான் பொது எதிர்க்கட்சிகளாகிய நாம் ஒன்றிணைந்து போராடுகின்றோம். நாட்டில் ஆட்சி மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கான பொதுத் தேர்தலை அடுத்த வருடத்தில் அரசு நடத்தவேண்டும் என்று நாம் போராடவேண்டும் - எனத் தெரிவித்தார் ரணில்.



அம்பாறைப் பகுதியில் பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டு வந்த முரட்டு யானை பெரும் போராட்டத்தின் பின்னர் வன அதிகாரிகளால் பிடிக்கப்பட்டது.
இந்த யானையைப் பிடிப்பதற்கான குழுவில் 40 வன அதிகாரிகளும், 150 சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும், 75 இராணுவ வீரர்களும் ஈடுபடுத்தப்பட்டனர். பிடிக்கப்பட்ட யானை குமண விலங்குகள் சரணாலயத்தில் தற்போது விடப்பட்டுள்ளது. (16)

## சகல பஸ்களையும் நீல நிறமாக்கும் அமைச்சரின் முடிவுக்கு எதிர்ப்பு

### தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் போர்க்கொடி

கொழும்பு, மே.4
''இவ்வருட இறுதிக்குள் நாட்டிலுள்ள பஸ்கள் அனைத்தும் நீல நிறமாக்கப்படவேண்டும் என்ற வர்த்தமானி அறிவித்தல், மோட்டார் வாகன சட்டக்கோவையை மீறும் செயல். எனவே, இதற்கு எதிராக அடுத்த வாரத்தில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளோம்'' - என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் பஸ்சேவையை ஏற்படுத்துவதாகக் கூறி, போக்குவரத்துக்கு அமைச்சர் இவ்வாறானதொரு வர்த்தமானி அறிவித்தலை விடுத்திருக்கிறார். நன்மை பயக்கும் பஸ்சேவையை வழங்குவதற்கு பஸ்ஸின் வர்ணம் எந்தவிதத்திலும் தேவையில்லாத ஒன்று என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் -

திறம்பட்ட பஸ்சேவையை வழங்கவேண்டுமெனில், தரமான - செயலூக்கமான சேவையை வழங்குவதற்கு குறித்த நிறுவனங்கள் தமது கடமைகளைச் சரிவர நிறைவேற்ற வேண்டும்.

அமைச்சர் அவ்வாறு செய்யாமல் தான்தோன்றித்தனமாக மோட்டார் வாகன சட்டக்கோவையை மீறி எடுக்கும் இந்த நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டித்து,



அந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக அடுத்த வாரத்தில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

இருப்பினும், இந்த நடவடிக்கையை பலவந்தமாகச் செய்துமுடிக்க முயற்சி எடுக்கப்படுமாயின், அதற்கு எதிராக கடும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தாம் தயாராகவுள்ளோம் - என்று தெரிவித்தார்.

## 180 அலகுகள் பாவனைக்கு 25 வீத மின் கட்டண கழிவு

கொழும்பு, மே.4
மாதம் ஒன்றிற்கு 61 தொடக்கம் 180 அலகுகள் வரை மின்சாரத்தை உபயோகிக்கும் மின் பாவனையாளர்களுக்கு 25 வீத மின் கட்டண கழிவு நிவாரணமாக வழங்கப்படும் என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் 60 அலகுகள் வரையான மின்சாரத்தைப் பயன்படுத்தும் பாவனையாளர்களுக்கு எதுவித கட்டண அதிகரிப்பும் செய்யப்படமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆஸி. நாடு கடத்திய 22 பேருக்குப் பிணை

கொழும்பு, மே 3
சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியா செல்ல முயன்று கொக்கோஸ் தீவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட 33 பேரில் 22 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு பிரதான நீதிவான் ஏ.எம்.என்.பி.அமரசிங்க முன்னிலையில் இவர்கள் வியாழக்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்ட போதே தலா 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

புதன்கிழமை வந்தடைந்த புகலிடக் கோரிக்கையாளர்களில் 22 பேரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய 11 சிறுவர்களையும் சந்தேக நபர்களான பெற்றோர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தப் புகலிடக் கோரிக்கையாளர்கள் 33 பேரும் கடந்த ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி மட்டக்களப்பு கடற்கரைப் பகுதியிலிருந்து படகின் மூலமாக சட்டவிரோதமான முறையில் புறப்பட்டுச் சென்றுள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச அலுவலக சாரதிகளுக்கு சீருடைப் படியாக ரூ 4. ஆயிரம்

யாழ்ப்பாணம்,மே 4


அரச திணைக்கள அலுவலகங்களில் பணியாற்றும் சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்கு சீருடைப் படியாக 4 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டுமென அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பி.வீ. அபேகோன் சுற்றறிக்கை மூலம் (இல.05/2013) சகல திணைக்களத் தலைவர்கள், மாகாண பிரதம செயலாளர் கள், அமைச்சின் செயலாளர்கள் ஆகியோருக்கு அறிவித்துள்ளார்.

இந்த வருட ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் செயற்படுமாறு இந்த வருடத்துக்கான சீருடைகள், தையல் கூலி ஆகியவை வழங்கப்பட்டி ருப்பின் அடுத்த வருடம் தொடக்கம் கொடுப்பனவை வழங்க வேண்டும் என்றும்-

இதுவரை காலமும் சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்கு சீருடைகள் மற்றும் தையல் கூலி ஆகியவை வழங்கப்பட்டு வந்ததாகவும் 2013 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இவற்றுக்கு பதிலாக 4 ஆயிரம் ரூபா படியாக வழங்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்தப் படியைப் பெறும் அலுவலர்கள் அலுவலக நேரத்தில் சீருடை அணிவதைத் தவிர்த்துக் கொண்டால் 1991.08.07 ஆம் திகதியிடப்பட்ட 27/91 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத் தலைவர்கள் அவசியமான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (வ-9)

## நாக்கு வறளுகிறது... தண்ணீர் வருமா...?



குடாநாட்டில் நிலவும் வறட்சி காரணமாக பல இடங்களிலும் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. பல இடங்களிலும் கிணறுகள் வற்றி வறண்டு போயுள்ளன. இதனால், மக்கள் குடிதண்ணீருக்கு அலைந்து திரிகின்றனர். மேலும் பல கிணறுகள் உவராகியுள்ளன. அதனாலும் குடிதண்ணீர் தேடித் திரியும் நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் மட்டுமல்ல தண்ணீர் இன்றி கஷ்டப்படுகின்றனர். ஐந்தறிவு படைத்த ஜீவன்களும் நாக்கு வறண்டு தண்ணீருக்காகத் தவிக்கின்றன. குழாயடியில் இந்த நாயும் தண்ணீருக்காகக் காத்திருக்கிறதோ...? (ஓ-ரி)

# கரம்பைக்குறிச்சி ஆலயத்தில் திருட்டு

தென்மராட்சி, மே 4

வரணியில் உள்ள மூன்று ஆலயங்களில் ஒரே இரவில் திருட்டும், திருட்டு முயற்சி சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வரணி கரம்பைக் குறிச்சியில் உள்ள ஆழ்வார் மடம் வைரவர் கோயிலுக்குள் உள் நுழைந்த திருடர்கள் ஆலய மூலஸ்தானத்தினுள் இருந்த விக்கிரகத்தை அப்புறப்படுத்தி அங்கிருந்த தகட்டையும் ஆலயத்தினுள் காணப்பட்ட பெறுமதிமிக்க பொருள்களையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

அந்தப்பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலயத்தினுள் புகுந்த திருடர்கள் மேற்கொண்ட முயற்சி ஆலய சுற்றாடலில் உள்ளவர்களால் முறியடிக்கப்பட்டது.

மேலும் வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயப் பகுதியில் நள்ளிரவு வேளையில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த ஒருவரை படையினர் பிடித்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

## சிலிண்டர் வெடித்து பெண் எரிகாயம்

யாழ்ப்பாணம்,மே 4

இரவு நேரச் சமையலுக்காக எரிவாயு சிலிண்டர் அடுப்பை பற்ற வைத்த குடும்பப் பெண் சிலிண்டர் திடீரென வெடித்ததில் எரிகாயங்களுக்கு உள்ளானார்.

இந்தச் சம்பவம் கடந்த 30 ஆம் திகதி வட்டுக்கோட்டை சித்தன்கேணிப் பகுதியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த மோகன தாஸ் நிரஞ்சினி (வயது-34) என்பவரே எரிகாயங்களுக்கு உள்ளானார். தற்போது இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ந-14)

# திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலையத்தில் தொழில்நுட்பப் பூங்கா

வடமராட்சி, மே 4

விவசாயத் திணைக்களத்தால் அறிமுகம் செய்யப்படும் பல்வேறு விதமான தொழில் நுட்பங்களை யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைவரும் நேரடியாக அறிந்து பயன் பெறுவதை நோக்காகக் கொண்டு திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் விவசாய தொழில் நுட்பவியல் பூங்கா அமைக்கப்பட்டுள்ளதாக பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.சிறிபாலசுந்தரம் தெரிவித்தார்.

காட்சிப்படுத்தப்படவுள்ள தொழில் நுட்பங்கள் விவசாயிகள், பண்ணைப் பெண்கள், பாடசாலை மாணவர்கள், விவசாய ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், உத்தியோகத்தர்கள், வீட்டுத்தோட்டச் செய்கையாளர்கள் என பல்வேறு தரப்பினரும் பயனடையும் வகையில் நிறுவப்பட்டுள்ளது.

இந்தத் தொழில் நுட்பப் பூங்காவைப் பார்வையிடுவதற்கான அனுமதியை பிரதி விவசாயப் பணிப்பாளர் (தொலைபேசி 0212222175) அல்லது பண்ணை முகாமையாளரிடம் (தொலைபேசி 0212222174) தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-8)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 4

தெல்லிப்பழை பன்னாலை மயிலைம்பதி சாமுண்டிகாதேவி சமேத ஞான வைரவர் ஆலய நால்வர் பிரதிஸ்டா கும்பாபிஷேகம் இன்று முற்பகல் 11.45 மணிக்கு நடைபெறவுள்ளது. (ந)


**மணமகள் தேவை**

* 85 இல் பிறந்த, 2 இல் செவ்வாய், 40 பாவமுடைய MBBS டாக்டருக்கு டாக்டர், இஞ்சினியர் மணமகள் தேவை.
* 74இல் பிறந்த, செவ்வாய் பாவமில்லாமல் 7½ பாவமுடைய,லண்டன் பிரஜாவுரிமை பெற்று வந்துள்ள, மணமகனுக்கு சைவ போஜனமுள்ள மணமகள் தேவை.
* 78இல் பிறந்த,செவ்வாய் பாவமில்லாமல், 11¼ பாவமுடைய M.Phil முடித்து அரசாங்க நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை. அத்தோடு கனடா நிரந்தர வதிவிடத்துக்கு விண்ணப்பித்துள்ளார். போக விரும்பும் பட்டதாரி மணமகளும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: காலக்கண்ணன் திருமணசேவை
இல. 135/3,கோயில் வீதி,நல்லூர்.
தொ.பே.:077 607 0862
(37023)(5-6)



**விற்பனைக்கு**

HERO HONDA PLEASURE NP.WR
59xx இலக்கமுடைய 9500km ஓடிய நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:077 809 4901
(37921)(5-6)



**கணினி திருத்தம் (Computer Repair)**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா?
உடன் உங்களது வீடுகளுக்கு வந்து திருத்தித் தருகிறோம்.
அழையுங்கள் -0779086737
GUNAA BEST PC 52, Hospital Road,Jaffna.



**ஒரு நாள் அழகுக் கலை பயிற்சிப்பட்டறை**

* சருமம் பற்றி விளக்கம்
* சருமத்தைக் கண்டு பிடிக்கும் முறை
* சருமத்தைப் பராமரிக்கும் முறை
* அழகு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு கூறுதல்
* Facial

செயல்முறை விளக்கத்துடன் சிறப்பான முறையில் விரிவுரை வழங்கப்படும்.
திகதி: 11.05.2013 (சனிக்கிழமை)
நேரம்: 10.30 மணி
இடம்: அறியத்தரப்படும்
கட்டணம்: ரூபா 750.00
பதிவுக்குரிய இறுதித் திகதி: 08.05.2013

**தொடர்பு: 072 7712604/021 588 8000/01**


உங்கள் பதிவுகளை கீழ்வரும் விலாசத்துக்கு எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன் வருகை தந்து கட்டணத்தை மேற்கொள்ளவும்.
187/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
முதல் 50 பதிவுகளுக்கு ஒறிபிளேம் சுவீடன் நாட்டு நிறுவனத்தின் இலவசமாக அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உண்டு.
பயிற்சியில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் சர்வதேச சான்றிதழ் வழங்கப்படும்.
(37017)(5.6)



**60ஆவது அகவையும் சேவைநலன் பாராட்டும்**

Best Wishes

**திரு. சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை**
S.L.P.S 2 - I
(கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்)



04.05.2013 இன்று 36 வருட சேவையை பூர்த்தி செய்து தனது 60ஆவது அகவையில் சேவையில் இருந்து ஓய்வுபெறுகின்ற எமது பாடசாலையின் அதிபர் சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**சேவைக்கால அர்ப்பணிப்பில்.......**

| | |
|---|---|
| கிளி/இரணைதீவு றோ.க.பாடசாலை | ஆசிரியர் 1977.05.27-1979.12.31 |
| பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவன் | 1980.01.01-1980.12.31 |
| கிளி/பூநகரி மகாவித்தியாலயம் | ஆசிரியர் 1981.01.01-1982.06.30 |
| பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவன் | 1982.07.01-1982.12.31 |
| கிளி/பூநகரி மகாவித்தியாலயம் | ஆசிரியர் 1983.01.01-1986.02.16 |
| கிளி/செம்பியன்குன்று அ.த.க. பாடசாலை | ஆசிரியர் 1986.02.17-1987.08.31 |
| கிளி/கறுக்காய்தீவு மகா வித்தியாலயம் | ஆசிரியர் 1987.09.01-1992.09.14 |
| கிளி/தெல்லியாதீவு அ.த.க பாடசாலை | அதிபர் 1992.09.15-1998.04.30 |
| கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலை | அதிபர் 1998.05.01-1999.09.14 |
| கிளி/கறுக்காய்தீவு மகா வித்தியாலயம் | அதிபர் 1999.09.15-2008.02.28 |
| கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம் | அதிபர் 2008.03.01 இல் இருந்து இன்று வரை |

முழங்காவில் முன்னேற முழுமூச்சாய் நின்றீர்
தழலாய் நீர் இருந்து தடைகள் சுட்டெரித்தீர்
தளராமல் நிமிர்ந்து அயராது நீர் உழைத்தீர்
வளமோடு வாழ வாழ்த்துகின்றோம் உம்மை

**ஆசிரியர் ஒன்றியம்**
**கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்**
(C/8827)(10.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதிக்கு வந்த பார்வையாளருடன் சீறிப்பாய்ந்தார் தாதிய உத்தியோகத்தர்

## ரீ.வியின் சத்தத்தை குறைக்குமாறு கேட்டதால்

தென்மராட்சி,மே 4

வைத்தியசாலை விடுதியில் வைக்கப்பட்டுள்ள தொலைக் காட்சியின் சத்தத்தைக் குறைக் குமாறு கூறிய பார்வையா ளரை விடுதியை விட்டு வெளி யேறுமாறு கூறினார் கடமை யிலிருந்த ஆண் தாதிய உத்தி யோகத்தர்.


இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் நண்பகல் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஐந்தாம் இலக்க விடுதியில் இடம் பெற்றுள்ளது.

இருதய நோயினால் பாதிக்கப் பட்ட நோயாளர்கள் தங்கியுள்ள விடுதியில் வைக்கப்பட்டுள்ள தொலைக்காட்சிப் பெட்டியின் சத்தம் அதிகமாக உள்ளதாக நோயாளர்கள் தங்களைப் பார்வையிட வந்தவர்களிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வந்திருந்த பார்வையாளர் ஒருவர் கட மையிலிருந்த தாதிய உத்தி யோகத்தரிடம் தொலைக் காட்சிப் பெட்டி சத்தத்தைக் குறைத்துப் போடுமாறு கூறினார். தாதிய உத்தியோகத்தருக்கு கோபம் பொத்துக் கொண்டுவந்தது.

பார்வையாளரை தரக்குறை வான வசனங்களால் ஏசி வெளியே செல்லுமாறு உரத்த குரலில் கூச்சலிட்டார். நோயா ளர் நலன் கருதி செயற்படாத தாதிய உத்தியோகத்தரின் செயல் குறித்து பார்வையாளர் களும் நோயாளர்களும் கவலை தெரிவித்தனர். (ஒ-9)

# கிளிநொச்சியில் ஈ.பி.டி.பியின் மேதினம்



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யினரால் கிளிநொச்சியில் நடத்தப்பட்ட மேதின நிகழ் வில் பல்வேறு அமைப்புக் களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமாகிய மேதின நிகழ்வில் பூநகரி, அக்கராயன், முழங்காவில், கண்டாவளை, பளை ஆகிய பிரதேசங்களில் இருந்து மக்கள் வருகை தந்திருந் தனர்.

இந்த மேதின நிகழ்வில் பல் வேறு தொழிற்சங்கங்களும் கலந்து கொண்டன.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், நாடாளு மன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், கட்சியின் தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம், கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் மற்றும் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். (க-6)

## கண்காட்சி

யாழ். கண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில், மறைய றிவுக் கண்காட்சி இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன. இந்தக் கண்காட்சி ஆலயத்தின் திறந்த வெளி அரங்கில் இரு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4மணி வரை நடைபெற வுள்ளன. (ந-51)


# மரண அறிவித்தல்

## ஏரம்பு அருள்நாதன்



நவாலி கிழக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், நீண்ட காலமாக பெரியகடை, மன்னாரில் வசித்த வரும் தற்போது அதிகார் செல்ல முத்து வீதி, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட ஏரம்பு அருள்நாதன் 01.05. 2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் வசந்தியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஏரம்பு-நேசம் தம்பதியரின் அன்பு மக னும், காலஞ்சென்றவர்களான இளை யதம்பி-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நல்லம்மாவின் பெறா மக னும், பிரபாநந்தினி (ஜெயந்தி- லண் டன்), காண்டீபன், அருள்குமரன் (லண்டன்), சிவரஞ்சினி, நிர்மலன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஸ்ணரூபன் (லண்டன்), றொம்ஜினி, நகுலேஸ் வரன் (தேர்தல் அலுவலகம், மாவட்ட செயலகம்-யாழ்ப்பாணம்), சுலோஜினி ஆகியோரின் அன்பு மாமனும், டனுஷாந், கிஷோத்மன், டீபிகா (லண்டன்), சர்வின், மிதுஜன் ஆகியோரின் பேரனும், குண பாலன், சிவலிங்கராஜா (பிரான்ஸ்), காலஞ்சென்ற இராஜசிரோன் மணி மற்றும் சிவநேசராசா, துரைநேசன் (லண்டன்), திலகவதி (பிரான்ஸ்), குகாநந்தினி (மாவட்ட செயலகம்-கிளிநொச்சி) ஆகி யோரின் சகோதரனும், கணேஸ்வரி, ஹரிச்சந்திரா ஆகியோரின் மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2013) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9 மணிக்கு தகனக்கிரியைக்காக நவாலி கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அதிகார் செல்லமுத்து வீதி,
மானிப்பாய்.
(37029)(10,6)

தகவல்:
குடும்பத்தினர்.


# மாணவர் முன்னிலையில் அதிபர், ஆசிரியர் மோதல்

வலி. வடக்கு மே 4

மாணவர்கள் முன்னிலை யில் அதிபரும் ஆசிரியரும் சண்டை யிட்ட சம்பவம் ஒன்று சங் கானை கல்விக் கோட்டத்தில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது.

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதா னத்தில் இடம்பெற்றது.

அதன்போது குறிப்பிட்ட அதிபரின் பையில் இருந்து ஒரு புத்தகத்தை அதிபரின் அனுமதியின்றி பையில் இருந்து எடுத்தமை சம்பந்த மாக எழுந்த வாக்குவாதம் கைகலப் பில் முடிவடைந்துள்ளது.

இதனை ஆசிரியர்கள், மாண வர்கள் பார்த்துக் கொண்டு இருந்துள்ளார்கள். இரு சாரா ரும் தமக்கு சாதகமான விவ ரங்களை கூறுகின்றபோதிலும் ஆசிரியரும் அதிபரும் மாண வர்கள் மத்தியில் இவ்வாறு சண்டையிட்டுக் கொண்டமை பெற்றோர்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது சம்பந்தமாக வலிகாமம் கல்வி வலயத்தினால் விசார ணைகள் இடம் பெற்று வரு கின்றன. (ந-86)

## வலுவிழந்தோர் புனர்வாழ்வு சங்க 23 ஆவது ஆண்டு விழா

யாழ்.வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 23 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், வருடாந்த திறன் வெளிப்பாட்டு போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல 4 1/2 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வலுவிழந்தோர் புனர் வாழ்வுச் சங்க விடுதியில் நடைபெறவுள்ளது.

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி ந.சிவராஜா தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், கைதடி நவீல்ட் பாடசாலை அதி பர் வ.செ.மகேந் திரன், நல்லூர் முறைசாராக் கல்விப் பிரிவு, கல்வித் திணைக்களம் உத விக் கல்விப்பணிப் பாளர் எம்.இராசநாயகம், யாழ்.சமூக சேவைகள் திணைக் கள மாவட்ட உத்தியோகத்தர் ஆ.ஞானவேல் ஆகி யோர் கலந்துகொள்வர். இந்த நிகழ்வில் சிவபூமி பாட சாலையின் கலை நிகழ் சிகள் இடம்பெறும். (வ-14)

## திருநாவுக்கரசர் குருபூசை

ஆனைக்கோட்டை இந்துசமயப் பேரவை நடத்தும் திருநாவுக்கரசர் குருபூசை இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள் ளது.ஏ.பி கணேசலிங்கம் தலைமையில் மூத்த நயினார் ஆலய மண்டபத்தில் நடைபெறும் நிகழ் வில் சிறப்புரையை ஆசிரியர் பே.தம்பாப் பிள்ளை நிகழ்த்துவார். (ந-100)


## தவறிவிட்டது

இராணித்தோட்டம் மஸ்கலியாவைச் சேர்ந்த ஆறுமுகம் நாகரத்தினம் என்பவரது 811314153V எனும் இலக்கமுடைய தே.அ.அட்டையும், பேர்ஸும் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். 077 215 8858 (கி/8829) (45.6)

## விற்பனைக்கு

[illegible] 45 நாள் பூர்த்தியான அதன் குட்டிகளும் [illegible] விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: வி.மயூரன், புன்னாலைக்கட்டுவன் தெற்கு. (ஆயக்கடவை பிள்ளையார் கோயில் முன்பாக பூதராயர் கோயிலடி, டயலொக் ரவர் அருகில்) (37027)(6.11)

## விற்பனைக்கு

NPH XXXX தொடரிலக்கமுடைய மிகவும் நல்ல நிலையில் உள்ள LML SELECT II ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 272 6462
(பி.ப 1 மணி தொடக்கம் 3 மணிக்குள் பார்வையிடலாம்) (37026)(6.11)

# தசாக கிருகயஞ்ஞ அழைப்பு

26.04.2013 வெள்ளிக்கிழமை
இறைபதமடைந்த எங்களது
தாயார்
திருமதி
சுப்பிரமணியஐயர்
சரஸ்வதி அம்மா
அவர்களின் தசாக ஆத்மார்த்த கிரியைகள் பின்வரும் தினங்களில் எமது இல்லத்தில் நடைபெறும்.



| | | | |
|---|---|---|---|
| தசாகம் | ஞாயிற்றுக்கிழமை | (05.05.2013) | காலை 9.00மணி |
| ஏகோதிஷ்டம், மாசியம் | திங்கட்கிழமை | (06.05.2013) | காலை 8.00மணி |
| சபிண்டீகரணம் | செவ்வாய்க்கிழமை | (07.05.2013) | காலை 9.00மணி |
| கிருகயஞ்ஞம் | புதன்கிழமை | (08.05.2013) | காலை 8.00 மணி |

அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் (08.05.2013) புதன்கிழமை இடம்பெறும் சமாராதனையிலும் (மதியபோசனம்) கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி, இருபாலை.
(37028)(5.6)

குடும்பத்தினர்.
021 320 1464

# மரண அறிவித்தல்

## தம்பையா அப்புத்துரை
(சிவசுந்தரம்)



சங்கானையைப் பிறப்பிடமாகவும், சந்தைவீதி, உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா அப்புத்துரை (சிவசுந்தரம்) நேற்றுமுன்தினம் (02.05. 2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வர்களான அப்புத்துரை - பறுவதம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கந்தசாமியின் பாசமிகு சகோதரனும், பாலதாஸ், சண்முகதாஸ், கிருஷ்ண தாஸ், பத்மினி (ஆசிரியை - யா/ தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயம்), லோஜினி (ஆசிரியை - மு/வித்தியானந்தாக் கல்லூரி), உருத்திரேஸ்வரன், கலைவாணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜிதாம் பிகை, சாந்தி, சந்திரகலா, ஸ்ரீகாந்தன், காலஞ்சென்ற மோகனதாஸ், புஸ்பரதி, தமிழ்ச் செல்வன் ஆகியோரின் பாசமிகு மாமனும், அஸ்வின், கர்ணன், வர்ணன், மேரி அபிராமி, அபிராம், தர்சிகா, ரிஷிகேசன், கம்சிகா, பிரியங்கன், கவிப்பிரியன், அபர்ணா, இலக்கி யன், சகானா, யாமினி, சாய்க்கண்ணன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தை வீதி, உடுப்பிட்டி.
(35353) (45.6)

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே.077 739 9546, 077 972 0241.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொழிலதிபர் இ.குலேந்திரநாதன் தனது தாய், தந்தை ஞாபகார்த்தமாக கோண்டாவிலில் உப-அஞ்சல் அலுவலகத்துக்கான கட்டடமொன்றை 60 லட்சம் ரூபா செலவில் நிர்மாணித்து வடமாகாண அஞ்சல் திணைக்களத்துக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தார். இந்தக் கட்டடத் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றபோது குலேந்திரநாதன் தம்பதியர் பிரதேச அஞ்சல் மா அதிபர் எஸ்.புஸ்பநாதனிடம் கையளிப்பதையும், வடமாகாண அஞ்சல் மா அதிபர் எஸ்.இரட்ணசிங்கம் அஞ்சல் அலுவலக நினைவுக் கல்லை திறந்து வைப்பதையும் காணலாம். (ஒ)

## உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடம் உடன் நிரப்ப வேண்டும்

வலிகாமம், மே 4

வலிகாமம் கல்வி வலயத்தில் ஏற்பட்டுள்ள உடற்கல்வி உதவிக் கல்விப்பணிபாளர் வெற்றிடத்தை உடன் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி ஆசிரியர்கள் வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வலிகாமம் கல்வி வலயத்தின் உடற்கல்விப் பணிப்பாளராக இருந்த மு.நடராசா கடந்த தை மாதத்துடன் தனது ஓய்வை அறிவித்த போதிலும் உரிய முறையில் புதிய உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் நியமனம் செய்யப்படவில்லை.

தற்போது வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள ஒரேயோரு உடற்கல்வி ஆசிரிய ஆலோசகரே இந்தப் பணியையும் ஆசிரிய ஆலோசகர் பணியையும் மேற்கொண்டு வருகின்றார்.

இது சம்பந்தமாக கடந்த செவ்வாய்க்கிழமை வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி ஆசிரியர்கள் பிரதி கல்விப் பணிப்பாளரிடம் உடற்கல்வித் துறையின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு உடனடியாக வெற்றிடமாகவுள்ள ஆசிரிய ஆலோசகர் மற்றும் உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்கள். (ந-86)

# சிதைத்து அழிக்கப்பட்டு விட்டன உழைக்கும் மக்களின் உரிமைகள்

## மேதின நிகழ்வில் புதிய மாக்ஸிச லெனினிசக் கட்சி



“ அரசியலை மக்கள் வெறுத்து விட்டனர். அரசியல் செத்து விட்டது. தமிழர்களின் போராட்டங்களை நசுக்கி முள்ளி வாய்க்காலில் 40,000 மக்களை கொலை செய்துள்ளது அரசு.

யாழ்ப்பாணம்,மே4

யாழ்.நகர வீதிகள் செம்மையாக இருந்த ஒரு கால கட்டம் இருந்தது. அது வரலாற் றில் பொற்காலம். ஆனால் இன்று அந்த நிலைமை மாறி விட்டது. தொழிலாளிகள், விவசாயிகள், உழைக்கும் மக்கள் அனைவரது உரிமைகளும் சிதைக்கப்பட்டு விட்டன. இன ஒடுக்கு முறையை தமிழர்கள் மேல் ஏவி மக்களின் போராட்டங்களை நசுக்கி வருகின்றது அரசு.

இவ்வாறு புதிய ஜனநாயக மாக்ஸிச லெனினிசக் கட்சியின் செயலாளர் சி.க.செந்தில்வேல் தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் மேதினக் கூட்டம் ஸ்ரான்லி வீதியிலுள்ள பட்டப்படிப்புகள் கல்லூரி வளாகத்தில் இடம் பெற்றது.

அதன்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ''இன்றைய உலக தொழிலாளர் தினம் இன்று, அதாவது உழைக்கும் மக்கள் 8 மணி நேரம் தாம் உழைப்பதை நினைவு கூரும் நாள்.

முதலாளி வர்க்கத்தினை எதிர்த்து இனம், மதம், மொழி கடந்து ஒன்றுபட்ட தொழிலாளர் என்ற உணர்வோடு போராடிவரும் ஒரு சர்வதேச தினம் இது.

அரசியலை மக்கள் வெறுத்து விட்டனர். அரசியல் செத்து விட்டது. தமிழர்களின் போராட்டங்களை நசுக்கி முள்ளிவாய்க்காலில் 40,000 மக்களை கொலை செய்துள்ளது அரசு.

தென்னிலங்கையில் மஹிந்த ராஜபக்ஷ 70,000 பேருடன் மேதினத்தைக் கொண்டாடுகிறார் என பத்திரிகை செய்தி வெளியிட்டது. ஆனால் எம்மால் சிறு கூட்டத்தை மட்டுமே சேர்க்க முடிந்தது.

இதுகூட தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்டதன் விளைவாகவே நடந்துள்ளது.

நாம் எதற்கும் அஞ்சமாட்டோம். வலி.வடக்குப் போராட்டத்தில் நாமும் கலந்து கொண்டோம். எங்கு அடக்குமுறை தலை தூக்குகிறதோ அங்கு ஒரு நேர்மையான கொம்யூனிஸ் நிற்பான். நாம் வாக்குகளுக்காக எதுவும் செய்யவில்லை. நூறு பேருடனாவது புரட்சிகர மேதினத்தை நடத்துவோம் என்ற புரட்சிகர உணர்வோடுதான் இந்த மேதினத்தை நடத்தி இருக்கிறோம்'' என்றார். (ந-ரி.14)

## செயல் விளக்க செயலமர்வு

தென்மராட்சி, மே 4

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 1ஏபி, 1சி தரப் பாடசாலைகளின் அதிபர்கள், பிரதி அதிபர்கள் ஆகியோருக்கான செயல் விளக்க விழிப்புணர்ச் செயலமர்வு இன்று காலை 8.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறும்.

யுனிசெப் நிறுவன அனுசரணையுடன் நடத்தப்படும் செயலமர்வுக்கு ஒவ்வொரு பாடசாலையிலிருந்து தலா இருவர் வீதம் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் அறிவித்துள்ளார்.(ந-9)

## இந்து மாமன்றம் அனுதாபம்

யாழ்ப்பாணம், மே 4

இந்து சமயத் திருப்பணிச் சேவையில் அர்ப்பணிப்பான சேவையாற்றிய எஸ்.திருவாதவூரனின் மறைவையொட்டி அகில இலங்கை இந்து மாமன்றம் அனுதாபம் தெரிவித்துள்ளது.

இந்து சமயத் திருப்பணிச் சேவையில் ஈடுபாடு கொண்ட திருவாதவூரன் திருக்கேதீஸ்வரத்தில் திருப்பணிச் சபையின் பொருளாளராகக் கடமையாற்றி சிறந்த நிதி முகாமைத்துவப் பணியை ஆற்றி ஆஸ்திரேலியாவில் நோய் வாய்ப்பட்டு சாவடைந்துள்ளார். அவரது குடும்பத்தினருக்கு இந்து மாமன்றம் தனது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளது. (ஒ-14)

## தெப்பத் திருவிழா

வடமராட்சி, மே 4

பருத்தித்துறை கொட்டடி சித்தி விநாயகர் ஆலய வருடாந்த தெப்பத் திருவிழா இன்று சனிக்கிழமை ஆலயத் தெற்கு வீதியிலுள்ள கேணியில் நடைபெறவுள்ளது. இந்தத் திருவிழாவை பருத்தித்துறை இந்து இளைஞர் மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.(ந-8)

## இரு வீதிகள் திறந்து வைப்பு

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில்சிமெந்தினால் அமைக்கப்பட்ட இரு வீதிகள் திறந்து வைக்கப்படவுள்ளன.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பல மில்லியன் ரூபா செலவில் இந்த இரு வீதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவுள்ளன. பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் அடங்கும் நல்லூர் கிராம அலுவலர் பிரிவிலும், கொல்லங்குறிச்சி கிராம அலுவலர் பிரிவிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள இரு வீதிகளே மேற்கண்டவாறு திறந்து வைக்கப்படவுள்ளன. (க-9)

## பூநகரியில் இன்று இளைஞர் நாடாளுமன்றத் தேர்தல்

பூநகரி,மே 4

பூநகரிப் பிரதேசத்துக்குரிய இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.(க-9)

## யாழ். கல்வியியற் கல்லூரிக்கு புதிய பீடாதிபதி நியமனம்

யாழ்ப்பாணம், மே 4

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து சதாசிவம் அமிர்தலிங்கம் பீடாதிபதியாகக் கல்வியமைச்சினால் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.



இவர் ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் மூத்த அதிகாரியான இவர் சரவணை நாகேஸ்வரி ம.வி. மற்றும் வேலணை மத்திய கல்லூரியில் உயர் கல்வி கற்று யாழ். பல்கலைக் கழகத்தில் பட்டதாரியானவர்.

ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராக இலங்கை கல்வி நிர்வாக சேவையில் சித்தியடைந்ததுடன் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் சிரேஷ்ட விரிவுரையாளராக, இணைப்பாளராக, உப பீடாதிபதியாகக் கடமையாற்றியுள்ளார். யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரியில் மேலதிக பீடாதிபதியாகவும் தற்போது பீடாதிபதியாகவும் பொறுப்பேற்றுள்ளார். (ஒ)

## மின் விநியோகத்தில் தடை

வீதி அகலிப்பு பணிகளுக்காகவும் மின் மார்க்கங்களின் புனரமைப்பு பணிகளுக்காகவும் சில பகுதிகளில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். இன்று சனிக்கிழமை மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், நவாலி, தாவடி, சுதுமலை, ஆனைக்கோட்டை, சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், வாதரவத்தை, வீர வாணி, அச்சுவேலி, இடைக்காடு, வளலாய் ஆகிய இடங் களிலும்-நாளை ஞாயிற்றுக்கிழமை கல்வியன்காடு, நல்லூர், அரியாலை, செம்மணி, பரமேஸ்வராசந்தி, பலாலி வீதி, விஞ்ஞானபீடப் பிரதேசம், அரசடி வீதி, கொழும்புத்துறை வீதி, வைமன் வீதி, கோவில் வீதி, நக்கா வீதி, இராசாவின் தோட்டம், பழைய பூங்கா, அத்தியடி புது வீதி, சோமசுந்தரம் அவனியூ, முலவைச் சந்தி, ஆஸ்பத்திரி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கச்சேரியடி, புங்கன் குளம், ஈச்சமோட்டை, பாசையூர், குருநகர், கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படிப் பிரதேசம், கொன்வென்ட் பிரதேசம், பிரதான வீதி, மந்திகை, புலோலி, புற்றளை, சாரையடி, ஓராம் கட்டை, தம்பசிட்டி, பருத்தித்துறை நகரப் பிரதேசம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி ஆகிய இடங்களிலும்- மேலும் இதே நாள் சுன்னாகம் மத்திய மின்நிலையத்தில் அவசர திருத்த வேலைகள் செய்ய வேண்டியிருப்பதால் யாழ். குடாநாட்டின் பெரும்பாலான இடங்களில் காலை 8 மணியிலிருந்து 10 மணிவரையான இரண்டு மணி நேரத்துக்கும்-எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அச்சுவேலி இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டமானாறு வீதிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.(ஒ)

## சாரண ஆணையாளர்



யாழ்.மாவட்ட சாரணர் ஆணையாளராக செ.தேவரஞ்சன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம ஆணையாளர் பேராசிரியர் நிமால் டீ சில்வா முன்னிலையில் இவர் தனது பதவியைப் பொறுப்பேற்றுள்ளார். சாரணியத்தில் உயர் விருதாகக் கொள்ளப்படும் ஜனாதிபதி விருது, 25 வருடச் சேவையாளன் விருது உட்படப் பல விருதுகளைப் பெற்றிருக்கிறார். (ஒ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் நீதியரசரின் சொற்பொழிவு தொகுப்பு நூல்கள் வெளியீடு

முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் சொற்பொழிவுகளின் தொகுப்பு நூல்கள் வெளியீட்டு விழா நாளை ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்ட பத்தில் இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் க.நீலகண்டன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரையை வழங்க, அகில இலங்கை இந்து மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர் வி.கயிலாசபிள்ளை நூல்களை வெளியிட்டு வைக்கவுள்ளார்.

சொற்பொழிவு நூல்கள் 'இந்து சமய சிந்தனைகள்' எனும் தலைப்பில் தமிழிலும், 'சம் தோட்ஸ் ஒன் இன்டூசியம்' எனும் தலைப்பில் ஆங்கிலத்திலும் இரு நூல்களாக வெளியிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-16)

## நூல் வெளியீட்டு விழா அழைப்பு



வேலணையூர் மௌன ஞானியின்

"நீ விழிப்பதற்கே நான் காத்திருக்கிறேன்"

எனும் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு வேலணை மத்திய கல்லூரியில் நாளை (05.05.2013) ஞாயிற்றுக் கிழமைகாலை 9.30 மணியளவில் இடம்பெற இருப்பதால் உயிர் கனத்து எரியும் பொழுதுகளில் விழிப்பை நோக்கி உங்களை நகர்த்தும் இந்த விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு உங்களை அழைக்கின்றேன்.

வேலணை மேற்கு, வேலணை. 3704 (ந.6) கந்தசாமி பார்த்தீபன்.

# நெருப்பில் எரிந்து குடும்பஸ்தர் பலி

யாழ்ப்பாணம், மே.4

நெருப்பில் எரிந்து உடல் கருகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். இந்தக் கோரச் சம்பவம் யாழ்ப்பாணம் அரசடி வீதியில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. அதேயிடத்தைச் சேர்ந்த நவரத்தினம் கணேசரத்தினம் (வயது-56) என்பவரே இவ்வாறு நெருப்பில் எரிந்து உயிரிழந்துள்ளார். வீட்டில் எவரும் இல்லாதவேளை தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைத்து எரிந்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

எந்தவித சத்தமுமின்றி இவர் தீப்பற்றிய உடலுடன் ஓடித் திரிந்ததை வீட்டின் வெளியில் நின்று கொண்டிருந்த மகள் கண்டதையடுத்து அயலவர்களின் உதவியுடன் தீயை அணைத்துள்ளனர்.

எனினும் அவர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. சம்பவ இடத்துக்குச் சென்ற திடீர் மரண விசாரணை அதிகாரி ப.பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனைகளுக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். 16-4)

**வீடு விற்பனைக்கு**
நல்லூர், நாயன்மார் வீதியில் அமைந்துள்ள காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 0722333522

**கணினி மலிவு விற்பனை**
HP 3.0 FULL SET COMPUTER
(19" LCD, DVD, 1GB)
24, 750/ மட்டுமே.
FREE 4GB PENDRIVE, WEBCAM, HEADPHONE
(ஒரு வருட உத்தரவாதம்)
குறிப்பு: கையிருப்பு குறைவாக உள்ளதால் முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
ST.ANTONY'S
187, K.K.S ROAD, JAFFNA. 0212224865,
0750698608 (15ஆவது வருட சேவையில்)

## பெயர் மாற்றம்

4ஆம் வட்டாரம் புங்குடுதீவைச் சேர்ந்த தர்மலிங்கம் சண்முகநாதன் ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து தர்மலிங்கம் சிவலிங்கம் என பெயர் மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையெப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத் தருகிறேன். த.சிவலிங்கம்

# மரண அறிவித்தல்கள்

## கதிர்காமு கனகர் சின்னராசா (ஐயா)

(இளைப்பாறிய அரச வடிசாலை கூட்டுத்தாபனம்)



ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 16/1 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமு கனகர் சின்னராசா கடந்த 01.05.2013 கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு கனகர் மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும் மெற்றலீனின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சுப்பிரமணியம், கணேஸ், நாச்சியார் - முருகேசு, தங்கச்சிப்பிள்ளை - இராசையா, பொன்ராசா, துரைராசா, செல்வமணி, சுப்பிரமணியம் மற்றும் செல்வம்- கந்தையா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அன்ரனிராசா (தபாலகம், யாழ்ப்பாணம்), இருதயமலர், நேசராசா (இந்தியா), காலஞ்சென்ற செல்வமலர் மற்றும் நேசமலர் (ஜேர்மனி), அன்ரனிமாலா, அன்ரனிலினா, அலஸ்ரின்ராசா, சகாயராணி, வசந்தமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிறிஸ்ரபெலா, ராஜா, பேபி (இந்தியா), கஜேந்திரன் (ஜேர்மனி), செல்வறஞ்சன் (டோகா), தவசீலன், சர்மிளா, ஜெறின், ஜெகன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ரசாத், சலோமி, சரோன், ரைற்ரஸ், கிங்ஸ்லி, கெட்வின், ஜெனீபா, யூலியானா, சந்தோஷ், சயந்தன், விதுர்ஷிக்கா, ஜெஸ்ரோன், சியல், ஸ்ரேபான், தரணிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04.05.2013) சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இலங்கை பெந்தெக்கொஸ்தே சபை கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

16/1, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம். (37054) (23-16)

தகவல்:
குடும்பத்தினர்.

## காக்கையன் கிருஷ்ணபிள்ளை



பலாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் பத்தைமேனி - அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட காக்கையன் கிருஷ்ணபிள்ளை கடந்த (30.04.2013) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காக்கையன் முத்தி தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் சின்னம்மா தம்பதியரின் மருமகனும் தவமணியின் ஆருயிர் கணவரும் சிவகுமார், மகேந்திரன், ஆனந்தராசா, அமிர்தராசா, சிறிகாந்தன், மாதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, செல்லர், ராஜசிங்கம் மற்றும் நாகமுத்து, மாணிக்கம், காலஞ்சென்றவர்களான இரத்தினம், ராசம்மா மற்றும் சின்னராசா ஆகியோரின் அருமை சகோதரரும் அழகம்மா காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, செல்லம்மா, காலஞ்சென்ற கண்ணகை மற்றும் நாகமுத்து, மாலதி, காலஞ்சென்ற சின்னத்துரை, வசந்தா, சோமசுந்தரம், பகவதி, செல்வரட்ணம் ஆகியோரின் அருமை மைத்துனரும், ஜெகதீஸ்வரி, விஜயமாலா, வசந்தி, தனுஷியா, ரூபன் ஆகியோரின் மாமனும் அபர்ணா, திவ்யா, ஆரிஸ், பார்தீப், அஸ்மியா, ரபிசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2013) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பத்தை மேனி தீர்த்தாம்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பத்தைமேனி,
அச்சுவேலி. (37052) (23-16)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## நவரெத்தினம் கணேசரெத்தினம்



வேலணை மேற்கு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 65/1, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நவரெத்தினம் கணேசரெத்தினம் நேற்று (03.05.2013) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரெத்தினம்- இராசலெட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சதாசிவம்- மகாலெட்சுமி தம்பதியரின் மருமகனும் ஸ்ரீபால தனலெட்சுமியின் அன்புக் கணவரும் செல்வரெத்தினம் (லண்டன்), சண்முகரெத்தினம் (சுவிஸ்), மலர்விழி, கலைவாணி (பிரான்ஸ்), கலைக்குமாரி (ஜேர்மனி), வாசுகி (கனடா) அவர்களின் சகோதரனும் கஸ்தூரியின் பாசமிகு தந்தையும் இராசேந்திரனின் மாமனும் சாந்தினி, சரோஜாதேவி, முருகதாஸ், கவீந்திரன், சுகுமார், மயூரன், ஸ்ரீபாலசரஸ்வதி, ஸ்ரீபாலஜெகதீஸ்வரி, ஸ்ரீபாலசந்திரவதி ஆகியோரின்மைத்துனரும் லோகநாதன், தேவநாதன், யோகபாலசந்திரன் ஆகியோரின் சகலனும் அனோஜன், நிரோஜன், கானுஜா, லக்சனா, தனுசன், கார்த்திகன், கீர்த்தனா, கீர்த்திகா, சுகீர்த்தனா, வினோஜ், அபிநயா, சயன், சாய்சா ஆகியோரின் தாய்மாமனும் சிவரூபன், சிவஜெயன், சினேகா, அதீயன், செந்தூரன், தேவகி, ஜானகி, பயிரவி, மகாலெட்சுமி ஆகியோரின் பெரிய தந்தையும் பார்த்தீபன், ஞானதீபன், ஆதித்தன், ஜெயந்தினி, மயூரன் ஆகியோரின் சிறிய தந்தையும் டில்சிக்காவின் அன்புப் பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

65/1, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (37062) (23-16)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி கனகாம்பிகை கௌரி இராமேஸ்வரன் (கருணா)



இரும்பு மதவடி வதிரி பற்பையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகாம்பிகை கௌரி இராமேஸ்வரன் நேற்று (03.05.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பிகாவதி இராமேஸ்வரனின் அன்பு மனைவியும், ராகவி (H.N.D.M மாணவி), ஆர்த்திகா (தரம் 11 மாணவி, நெ.ம.ம.வி) ஆகியோரின் அன்புத் தாயும், கமலாம்பிகையின் அன்புச் சகோதரியும், கெங்காதரன் (மத்திய மின் நிலையம், சுன்னாகம்) அவர்களின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று ஆலங்கட்டை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இரும்பு மதவடி,
வதிரி.

தகவல்:
S.கெங்காதரன்.

## திருமதி பிறிஜெற் குணமணி இராஜதுரை



யாழ்ப்பாணம் கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிறிஜெற் குணமணி இராஜதுரை நேற்றுமுன்தினம் (02.05.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜதுரையின் அன்பு மனைவியும், அஞ்சலோ, ஜோன்பீட், யூலியட் ஜெயசீலி (கனடா), காலஞ்சென்ற அருட்தந்தை பொனிபாஸ், அன்ரன், வசந்தி, சாந்தி, கனிபல் (கனடா), சுகந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு அன்னையும், நீற்ரா, ஜொய்சி, காலஞ்சென்ற ஜோச் அருட்சந்திரன் யூக்கரிஸ்ரா, மரியநாயகம், சுவாம்பிள்ளை, வசந்தா (கனடா), இன்பநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், கிறிஸ்ரி, பேட்டி, செல்மா, கேமா, ஜெம்மா, நித்தியா, சத்தியா, காலஞ்சென்ற பிரியா, சிறியா, டேனி, வாசுகி, ராஜ்குமார், நிஷான், தயா, தனிஷ், ஹரி, சுமி, சுமன், றெமின்டியா, பிரியங்கா, கரினா, அனோச், அனிஸ்ரன் ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக எதிர்வரும் (06.05.2013) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் 65/43, பாரதி வீதி, திருகோணமலையில் உள்ள இல்லத்திலிருந்து மரியாள் பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின் கத்தோலிக்க சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

65/43, பாரதி வீதி, திருகோணமலை.

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரன்,
பேத்தி, பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு பெருவிளையாட்டு அட்டவணை

முள்ளியவளை, மே 4
முல்லைத்தீவு மாவட்ட பெரு விளையாட்டுப் போட்டிகளுக்கான கால அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, 15 வயதுப்பிரிவு ஆண், 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான உதைபந்தாட்டம் இன்று வித்தியானந்தாக் கல்லூரியிலும், 17, 19 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான உதைபந்தாட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி புதுக்குடியிருப்பு ம.வியிலும், 15, 17, 19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டம் 6 ஆம் திகதி ஒட்டுசுட்டான் ம.வியிலும், 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான மென்பந்துக் கிரிக்கெட் போட்டி 07 ஆம் திகதி வித்தியானந்தாக் கல்லூரியிலும், 15, 17, 19 வயதுப் பிரிவினருக்கான கரப்பந்தாட்டம் 8 ஆம் திகதி சிலாவத்தை த.வியிலும், எறிபந்து, கபடி 9, 10 ஆம் திகதிகளில் வற்றாப்பளை ம.வியிலும், எல்லே 11 ஆம் திகதி ஒட்டுசுட்டான் ம.வியிலும் நடைபெறும். (ற-433)


இறுதியாட்டத்தில் மோதிக்கொள்ளும் திருக்குடும்ப கன்னியர்மடம் மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினர்

## இன்றைய ஆட்டங்கள்

கைதடி, மே 4
இலங்கை வங்கி, வர்த்தக வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று சண்டிலிப்பாய் உதய சூரியன் வி.க. மைதானத்தில் மோதவிருக்கும் அணிகளின் விவரம்:
பி.ப. 3.30 மணி
மல்வம் வைகரை வி.க. எதிர் கைதடி சரஸ்வதி வி.க.
பி.ப. 4.30
தாவடி காளியம்பாள் வி.க. எதிர் பண்டத்தரிப்பு சாந்தை வி.க. (ற-288)



யாழ்ப்பாணம் மே 4
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகத்தினதும் தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தினதும் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்கு பற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு.
பி.ப 3.30 மணி
சென். மைக்கல் விளையாட்டுக்கழகம் எதிர் சென். லூட்ஸ் விளையாட்டுக்கழகம்
பி.ப 4.30 மணி
விளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம். (ற-23)


யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி.

### 19 வயது பெண்கள் கூடைப்பந்து

# கன்னியர் மடம் சம்பியனானது

யாழ்ப்பாணம், மே 4
யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட சுற்றுத்தொடரில் திருக்குடும்ப கன்னியர்மட அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவானது.
நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாண மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.திருக்குடும்ப கன்னியர் மட அணி மோதியது.
விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 35:33 என்ற புள்ளிகள் அடிப்படையில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை வீழ்த்தியது.
மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் இராமநாதன் கல்லூரி அணியை வீழ்த்தி யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ற-23)



## மரதன் ஓட்டப் போட்டி இன்று

அச்சுவேலி, மே 4
வலி.கிழக்கு பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழாவை முன்னிட்டு மரதன் ஓட்டப் போட்டியும், சைக்கிள் ஓட்டப் போட்டியும் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.
ஆண், பெண் இரு பிரிவுகளுக்கும் நடத்தப்படும் மரதன் ஓட்டப் போட்டி இன்று காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்.
இந்தப் போட்டியில் வலி. கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் அனைவரும் வயது வேறுபாடு இன்றி கலந்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ற-11)

# வடமராட்சி வலய தடகள முடிவுகள்

கரணவாய், மே 4
வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலய மட்ட தடகளப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்ட வீர வீராங்கனைகளின் விவரங்களின் தொடர்ச்சி:
19 வயதுப்பிரிவு ஆண்
**ஈட்டி எறிதல்:-** கே.சிவகாந்தன்- ஞானசாரியார் கல்லூரி, பி.அருள்ராஜ்-ஹாட்லிக் கல்லூரி, உ.அனுசாந்- நெல்லிடி மத்திய மகா வித்தியாலயம்.
**முப்பாய்ச்சல்:-** ஏ.ஜெயப்பிரியன்-தொண்டமானாறு வீ.மகா வித்தியாலயம், என்.பிரதீபன் - ஹாட்லிக்கல்லூரி, எஸ். செந்தமிழ்ச்செல்வன் - வல்வை சிவகுரு வித்தியாலயம்.
**200 மீற்றர்:-** கே.இருதயராஜ்- ஹாட்லிக்கல்லூரி, பி.மதுஜன் - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, ஏ.ஜெயதர்சன் - விக்னேஸ்வராக் கல்லூரி.
**நீளம் பாய்தல்:-** ஏ.ஜெயப்பிரியன்- தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம், ரி.பிரதீப் - ஹாட்லிக்கல்லூரி, ஆர்.சலன்றஜ் - வேலாயுதம் மகா வித்தியாலயம்.
**1500 மீற்றர்:-** வி.வசந்தகுமார் - ஹாட்லிக்கல்லூரி, எஸ்.மதுஜன் - தேவரையாளி இந்துக் கல்லூரி, ஆர்.கிரிஸ்ரின் - நெல்லியடி ம.ம வித்தியாலயம்.
**100 மீற்றர்:-** எஸ்.மதுஜன் - தேவரையாளி இந்துக் கல்லூரி, எஸ்.கிருத்திகன் - நெல்லியடி ம.ம.வித்தியாலயம், எம்.கஜேந்திரன் - ஹாட்லிக் கல்லூரி.
**5000 மீற்றர்:-** வி.வசந்தகுமார் - ஹாட்லிக்கல்லூரி, ஜே.பரமேஸ்வரன் - வேலாயுதம் மகாவித்தியாலம், வி.விநோத் - மருதங்கேணி இந்து தமிழ் வித்தியாலயம்.
**குண்டுபோடுதல்:-** ஜே.அருன் - ஹாட்லிக் கல்லூரி, ஆர்.கிரிதர் - ஹாட்லிக் கல்லூரி, பி.உமாசுதன் - ஹாட்லிக்கல்லூரி.
**உயரம் பாய்தல்:-** என்.தனுசன் - சித்திவிநாயகர் வித்தியாலயம், என்.பிரதீபன் - ஹாட்லிக்கல்லூரி, கே.சிவகாந்தன் - ஞானசாரியார் கல்லூரி.

(தொடரும்)

# வவுனியா மாவட்ட பாடசாலை வலைப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 4
வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15, 17, 19 வயது பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் 15 வயதுப் பிரிவில் பூம்புகார் கண்ணகி வித்தியாலய அணியும் 17 வயதுப் பிரிவில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணியும், 19 வயதுப் பிரிவில் சைவப் பிரகாச மகளிர் கல்லூரி அணியும் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டன.
நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை புதுக்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் முதலில் இடம்பெற்ற 15 வயதுப்பிரிவு அணியினருக்கான இறுதியாட்டத்தில் பூம்புகார் கண்ணகி வித்தியாலய அணியை எதிர்த்து முதலியார்குளம் அ.த. க. பாடசாலை அணி மோதிக் கொண்டது.
அதில் பூம்புகார் கண்ணகி வித்தியாலய அணி 8:6 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் சைவப் பிரகாச மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கனகராயன்குளம் மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. அதில் சைவப் பிரகாச மகளிர் கல்லூரி அணி 9:4 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.
தொடர்ந்து இடம்பெற்ற 17 வயதுப் பிரிவுக்கான இறுதியாட்டத்தில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணியை எதிர்த்து குளவிசுட்டான் அ.த.க .பாடசாலை அணி மோதியது.
அதில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணி 12:7 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் சைவப் பிரகாச மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கனகராயன் குளம் மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. அதில் சைவப் பிரகாச மகளிர் கல்லூரி அணி 8:2 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கி கொண்டது.
19 வயதுப்பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் சைவப் பிரகாச மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து தரணிக்குளம் கனிஷ்ர உயர்தர வித்தியாலய அணி மோதியது.
இதில் சைவபிரகாச மகளிர் கல்லூரி அணி 15:7 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.(ற-23- 422)



## தென்மராட்சி பிரதேச மரதன் ஓட்டம் இன்று

தென்மராட்சி, மே 4
தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான மரதன் ஓட்டப் போட்டிகள் இன்று காலை 6 மணிக்கு பிரதேச செயலகம் முன்பாக ஆரம்பமாகும்.
குறித்த போட்டியில் பங்கு பற்றும் வீரர்கள் போட்டி ஆரம்பமாகும் நேரத்துக்கு முன்பாக வருகை தருமாறு கோரப்பட்டுள்ளது. (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெய்னாவின் சதம்; விசித்திர ஒற்றுமை




நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐ.பி.எல் 6ஆவது தொடரின் 45ஆவது போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் சுரேஷ் ரெய்னா 53 பந்துகளில் அபார சதமடித்தார். அதில் ஆச்சரியப் படத்தக்க ஒரு விடயமும் அடங்கியுள்ளது. மூன்றாண்டுகளின் முன்னர் நடந்த் '20/20' போட்டிகளில் மே மாதம் 2ஆம் திகதிதான் தனது முதலாவது சதத்தைப் பெற்றார் என்பதுதான் அந்த ஆச்சரியமான ஒன்றுமை.

2010ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான '20/20' போட்டி மே 2ஆம் திகதி நடைபெற்றது. அதில் அதிரடியாக விளையாடிய ரெய்னா 60 பந்துகளில் 101 ஓட்டங்கள் எடுத்தார். அப்போதும் இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை 186 ஆகத்தான் இருந்தது.

தற்போது 3 ஆண்டுகளுக்குப் பின்னர் அதே மே 2ஆம் திகதி நடப்பு ஐ.பி.எல் 6ஆவது '20/20' தொடரில் சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கிங் லவன் பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியில் சதமடித்திருக்கிறார் ரெய்னா. இதில் விசித்திரமான ஒற்றுமை என்னவெனில் சென்னை அணியும் இம்முறை 186 ஓட்டங்களைக் குவித்திருந்தது என்பதுதான். (ற)

## விலகினார் மத்தியூஸ்



தற்போது நடைபெற்று வரும் ஆறாவது ஐ.பி.எல்..தொடரில் புனே வாரியர்ஸ் அணியின் தலைமைப் பொறுப்பில் இருந்து இலங்கை வீரர் மத்தியூஸ் விலகியுள்ளார். காயம் காரணமாக ஆட்டங்களில் பங்கேற்காதிருந்த அணித்தலைவர் மைக்கல் கிளார்க் அணிக்கு திரும்பியுள்ள நிலையிலேயே மத்தியூஸ் பதவியில் இருந்து விலகினார்.

மைக்கல் கிளார்க் காயம் காரணமாக விலங்கியதை அடுத்து தொடர் ஆரம்பமாவதற்குச் சில தினங்களுக்கு முன்னரே மத்தியூஸ் அணித் தலைவராக தெரிவு செய்யப் பட்டார். எனினும் அவரது ஆட்டம் சிறப்பாக இல்லாத காரணத்தால் ஆரோன் பிஞ்ச் கடந்த சில போட்டிகளில் அணித்தலைவராக பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ற)

## சிறந்த தலைவர் டிராவிட்

### வசீம் அக்ரம் புகழாரம்



ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் அணித்தலைவர் ராகுல் டிராவிட்டை பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான வாசிம் அக்ரம் பாராட்டியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,

''பெங்களூர் அணிக்கு எதிரான ஆட்டத்தில் ராஜஸ்தான் பெற்ற வெற்றி சிறப்பானது. அது அந்த அணியின் நம்பிக்கையை அதிகரித்துள்ளது.

அதற்கு டிராவிட்டின் அணித்தலைவர் பதவி முக்கியத்துவம் பெற்றது. அணித்தலைவர் பதவியில் அவர் மிகவும் சிறப்பாக செயற்படுகிறார். ஐ.பி.எல் தொடரில் விளையாடும் அனைத்து அணித் தலைவர்களுக்கும் டிராவிட் முன் உதாரணமாக உள்ளார். உள்ளூர் வீரர்களுக்கு அவர் சரியான வாய்ப்புகளை கொடுத்து ஊக்குவிக்கிறார்'' என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஆரம்பமானது 'நண்பர்களின் சமர்'

யாழ்ப்பாணம், மே 4

'நண்பர்களின் சமர்' என்று வர்ணிக்கப்படும் கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலய அணிக்கும் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி நேற்று கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி முதலில் கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

அதற்கு அமைய தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி 40.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது.

அதில் கம்சிகன் 34 ஓட்டங்களையும், சுரேன் 25 ஓட்டங்களையும், மதன் 24 ஓட்டங்களையும், உதயா 19 ஓட்டங்களையும், பிரசாந் 18 ஓட்டங்களையும், தர்சன் 17 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் வித்தியானந்தாக் கல்லூரி அணி சார்பில் அஞ்சேயன் 64 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், விதுசன் 28 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், வினேசன், நிசாவி ஆகியோர் முறையே 11, 17 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய வித்தியானந்தாக் கல்லூரி அணி 18 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 48 ஓட்டங்களை பெற்றிருந்தபோது முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.



விதுசன் 9 ஓட்டங்களையும் வினேசன் 10 ஓட்டங்களுடனும், நிசாவி 7 ஓட்டங்களுடனும், அஞ்சேயன் ஓட்டம் ஏதுவும் பெறாத நிலையிலும் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி சார்பில் வதுசன் 11 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும், உதயா 3 ஓட்டங்களுக்கு 2 இலக்கையும், சுரேன் 2 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

ஆட்டநேர முடிவின்போது இப்விறாஸ் 15 ஓட்டங்களுடனும், அருண் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். இன்று இரண்டாம் நாள் ஆட்டமாகும். (ற-23)

## சம்பியன்ஸ் டிராபி அணியில் மெண்டிஸ் இல்லை

மினி உலகக்கிண்ணம் என்று அழைக்கப்படும் சம்பியன்ஸ் டிராபி தொடருக்கான இலங்கை அணியில் அஜந்த மெண்டிஸ் இணைக்கப்படவில்லை.

இங்கிலாந்தில் எதிர்வரும் ஜுன் 6 ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது. அதற்கான 15 பேர் கொண்ட இலங்கை அணி தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

அணிக்கு அஞ்சலோ மத்தியூஸ் தலைமை தாங்குகின்றார். சண்டிமால் துணை அணித்தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார். அறிவிக்கப்பட்டுள்ள அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ் மற்றும் தொடக்க வீரர் தரங்க ஆகியோர் சேர்க்கப்படவில்லை.

அணி விவரம்: மத்தியூஸ் (அணித்தலைவர்), சண்டிமால், தில்ஷன், குஷால் பெரேரா, சங்ககரா, ஜெயவர்த்தனா, திரிமனே, ஜீவன் மெண்டிஸ், திசரா பெரேரா, மலிங்க, ஹெரத், குலசேகர, எரங்கா, சேனநாயக்க, வெலகெதர. (ற)



### 19 வயதுப் பிரிவு ஆண்கள் கூடைப்பந்து

# யாழ். இந்து சம்பியன்



யாழ்ப்பாணம், மே 4

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்று வெள்ளிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதியது. அதில் யாழ். இந்துக் கல்லூரி அணி 86:56 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (ற-23)

## அரையிறுதியில் சிந்து



கோலாலம்பூரில் நடைபெற்று வரும் 'மலேசிய கிராண்ட்ப்ரி கோல்ட் ஒபன்' பூப்பந்துத் தொடரின் அரை இறுதியில் விளையாட இந்தியாவின் பி.வி.சிந்து தகுதி பெற்றுள்ளார். நேற்றுமுன்தினம் ஜுவாரா உள்விளையாட்டரங்கில் நடைபெற்ற இரண்டாவது மற்றும் காலிறுதிப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் அரை இறுதிக்குள் நுழைந்தார்.

இதன் மூலம் உலகின் 13ஆம் நிலை வீராங்கனை என்ற இடத்தையும் அடைந்துள்ளார். இன்று அரை இறுதியில் மூன்றாம் நிலை வீரரான தாய்லாந்து நாட்டின் சப்சிறீ தரட்டனச்சை எதிர் கொள்கின்றார். இதுவரை இவர்கள் இருவரும் ஆடிய போட்டியில் தலா ஒருமுறை வெற்றி பெற்றுள்ளனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவக் குடும்பங்களின் நிலம் வலைஞர் மடத்தில் அபகரிப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பதற்காக ஆக்கிரமித்துள்ளமையால் அந்தக் குடும்பங்கள் மீளவும் தொழில் செய்ய முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

போரினால் முற்றாக அழிந்து போன தொழிலை மீள ஆரம்பிப்பதற்காகப் பல லட்சம் ரூபா கடனாகப் பெற்று தொழில் செய்ய வந்துள்ள நிலையில், எமது நிலத்தைப் படையினர் தர மறுத்து அராஜகம் செய்கின்றனர் என அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது பாலைவனம் போன்ற வெட்ட வெளியில் இந்த மீனவர்கள் கொட்டில்கள் அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

எனவே தாம் முன்னர் தொழில் செய்த இடங்களில் தொழில் செய்ய அனுமதிப்பதோடு, தமது இடங்களை மீளக் கையளிக்குமாறு அந்த மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-5)

# 101 கிலோ கஞ்சாவுடன் 6 பேர் நெடுந்தீவில் கைது

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார்.

101 கிலோ 850 கிராம் கஞ்சா போதைப் பொருள் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. இவர்கள் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து கடந்த 25ஆம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். நெடுந்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட அவர்கள், ஊர்காவற்றுறை பதில் நீதிவான் இ.சபேசனிடம் முற்படுத்தப்பட்டனர். இதன்போது அவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் இராமேஸ்வரம்-தங்கச்சிமடத்தைச் சேர்ந்த சேகர் ஜெயச்சந்திரன், இராமேஸ்வரம்-பாம்பன், கே.கே. நகரைச் சேர்ந்த பேச்சிமுத்து சக்திமுருகன், இராமேஸ்வரம்-பாம்பன் தேக்கு வாரியைச் சேர்ந்த பத்மநாதன் ராஜா, இராமேஸ்வரம்-பாம்பன், திண்டுக்கலைச் சேர்ந்த வேணுபாலன் முருகன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு உடந்தையாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டில் வேலணை கிழக்கு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவகுமார், வேலணை இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த கனகலிங்கம் சுரேன் ஆகியோரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (த-4)

# கச்சதீவை மீட்பதற்கு தமிழக அரசு தீர்மானம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கச்சதீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டது. அத்துடன் தமிழக மீனவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் எனவும் அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்தம் மீறப்பட்டு தமிழக மீனவர்களின் உரிமைகள் முற்றாக இழக்கப்பட்டுள்ளன.

கடந்த 3 மாத காலப் பகுதிக்குள் மட்டும் 7 தடவைகள் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்பட்டதுடன் 30 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு தமிழக மீனவர்களின் பாதுகாப்புக்காக கச்சதீவை இந்திய ஆளுகைக்குள் கொண்டு வர வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தீர்மானத்தை முன்மொழிந்தார்.

இதை எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஏகமனதாக வழிமொழிந்ததை அடுத்து சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (த-14)


**SUBRA சித்தன்கேணி**

அரச உத்தியோகத்தர், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் O/L சிங்கள, ஆங்கில பாட பரீட்சைக்கு தோற்றுவோருக்கானது.

சிங்கள பாட நெறி
விரிவுரையாளர் T.ராம்சன்
சனி, ஞாயிறு 6.00 7.30 வரை

ஆங்கில பாட நெறி
விரிவுரையாளர் சந்திரமௌலி
செவ்வாய், வியாழன் 6.00 7.30 வரை

புதிய பிரிவு ஆரம்பம்-05.05.2013
ஞாயிறு மாலை-6.00 மணி

O/L day Class ஆரம்பமாகின்றது
தினமும் காலை 7.00 முதல் 11.00 வரை வாராந்தம் பயிற்சிப் பரீட்சைகள் வார இறுதி நாள்களில் கடந்த கால வினாவிடை

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும், தீவக பகுதி மாணவர்களுக்கும் விசேட சலுகை

2015 A/L கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவு II
ஆரம்பம் 05.05.2013 மாலை 3.00 மணி

தனிப்பாட அனுமதி வழங்கப்படும்

2013 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட பிரிவு
தினமும் மாலை 6.00 7.30 மணி வரை
வெற்றித் தேர்வு, புலமைச்சுடர் பரீட்சைகளுடன்
05.05.2013 மாலை 6.00 மணிக்கு ஆரம்பம்.
(C/8812)(6.7.11) நிர்வாகி.



**டீசல் கார் விற்பனைக்கு**

WPKI XXXX TATA Indica டீசல் A/C 1405 CC Full Option 60,000 KM ஓடியது. Showroom Condition ஒரு லீற்றர் டீசலுக்கு 22 KM Mileage Turbo Engine உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0777710785, 0779798053 (37003)(6)



**பேக்கறி வாடகைக்கு உண்டு**

புன்னாலைக்கட்டுவனிலுள்ள பேக்கரி ஒன்று வாடகைக்கு உண்டு. அத்துடன் மா குழைக்கும் இயந்திரம், அவண், ஜெனறேற்றர் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 666 0674



**IELTS** A1 B1 B2

Quick Preparation Available Call: 0777302882

Visit: http://edu.kugroup.info/ielts

K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre



**புதிய இடத்தில் ஐடியல் அக்கடமி**
K.K.S.வீதி, யாழ்ப்பாணம்

O/L Day Class பிரிவு: 02

பாரதி பதிப்பகம் முன்பாக யாழ். இந்து அருகில்

ஆரம்பம்: 06.05.2013 8.00 A.m.

கணித ஆசானும் நிர்வாகியும்: V.N.பத்மநாதன்



**காணி விற்பனைக்கு**

1). வேலணை வடக்கு சாட்டிக் கடற்கரையில் இருந்து 1 கி.மீ தொலைவில் கடற்கரையை ஓர் எல்லையாகக் கொண்ட 192 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. முழுமையாகவோ பகுதியாகவோ பிரித்துக் கொடுக்கப்படும்.

2). நாவற்குழியில் 97 பரப்பு நெற் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0776048646


# மரண அறிவித்தல்

## திருமதி மங்களேஸ்வரி பாலேந்திரன்



கே.கே.எஸ். வீதி, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் டச்வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்களேஸ்வரி பாலேந்திரன் நேற்றுமுன்தினம் 02.05.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை தில்லையம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பாலேந்திரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் இராஜேஸ்வரி, சந்திரசேனா, காலஞ்சென்ற கணநாதன் மற்றும் துரைசிங்கம் (அப்பையா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜேஸ்வரி, காலஞ்சென்ற இரட்ணசிங்கம் மற்றும் அழகம்மா, புனிதவதி ஆகியோரின் மைத்துனியும் இராஜசிங்கம் (சுவிஸ்), விமலகுமாரி (ஆசிரியர், யா/முருகமூர்த்தி வித்தியாசாலை, ஈசன் (சுவிஸ்), ஜெயம் (லண்டன்), சுகந்தன் (சுவிஸ்), சீலன் (இரட்ணம் கிறீம் ஹவுஸ்) ஆகியோரின் பாசமிகு சிறியதாயும், கலாவதி, தயானந்தன், பாமினி, கீதாஞ்சலி, கோமளா, காயித்திரி ஆகியோரின் பாசமிகு மாமியும் நிரோன், நிரேஸ், நிவேத், சாரங்கி, சுயான், ஷாளினி, திவ்வியா, தளிர்னா, இனிந்தா, அனாமிகன், வக்ஷன்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2013) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ.சீலன்.
ரட்ணம் கிறீம் ஹவுஸ், டச் றோட், உடுவில்.
021 321 2643

(வி/8831) (23-16-14)

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தான 8 ஆம் நாள் - 63 நாயன்மார் தரிசனக் காட்சி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org